

ஹாஸ்டல்
தினங்கள்
சுஜாதா

# ஹாஸ்டல் தினங்கள்

சுஜாதா

பாரதி பதிப்பகம்
108, உஸ்மான் சாலை,
தியாகராய நகர்
சென்னை - 600 017.
த.பெ. எண்: 4984 : : போன் : 440205

விலை ரூ. 19-00

□ HOSTEL DHINANGAL (Novel) by SUJATHA □ Bharathi Pathippagam First Edition October 1993 □ Price Rs. 19-00 □ Published by BHARATHI PATHIPPAGAM, 108, Usman Road, T. Nagar, Madras-600 017. Phone : 440205 □ Printed at Kadalosai Achagam, Madras-24. □

# பதிப்புரை

சுஜாதாவின் பலதரப்பட்ட நாவல்களில் 'ஹாஸ்டல் தினங்கள்' கல்லூரி வாழ்க்கையில் நடைபெறும் சம்பவங்களைப் பின்னிப் பிணைந்து செல்கிறது. கிராமத்திலிருந்து கல்லூரியில் படிக்க நகரத்திற்கு வரும் மாணவன் நடராஜன், அங்கு ஹாஸ்டலில் சில மாணவர்கள் 'ராக்கிங்' என்ற பெயரால் நடத்தும் வெறியாட்டத்திற்கு ஆளாகி, பெரிதும் பாதிக்கப்படுகிறான். இதனால் அவனுக்கு வாழ்க்கையில் பெரிய இழப்பு ஏற்படு கிறது. கல்லூரி, ஹாஸ்டல், ஆசிரியர்கள் என்று அங்கு நடைபெறும் பல விஷயங்களையும் கதை யினூடே அமைத்து விறுவிறுப்பாகக் கொண்டு சென்றுள்ளார். கல்லூரி மாணவர்களுக்கும் இந் நூல் ஒரு படிப்பினையாக அமையும்.

இதனை நமது பதிப்பாக வெளியிடுவதில் பெருமைப்படுகிறோம். திரு. சுஜாதா அவர்கட்கு எமது நன்றி.

—பதிப்பகத்தார்

# ஹாஸ்டல் தினங்கள்

## 1

தந்தையுடன் தண்டவாளத்தைக் கடந்து ஹாஸ்டல் கட்டடத்தின் வானளாவலைப் பார்த்தான். நான்கு மாடியின் உச்சாணியில் வைத்திருந்த கடிகாரம் நின்று போய் மணி ஏழு இருபது காட்டினாலும் மாலை மூன்றுதான். எங்கேயோ கடலருகில் ரொம்பக் காரியம்போல விரைவாக ஆகாசத்தில் சென்றுகொண்டிருந்த மேகத்தால் கட்டடம் சரிந்துகொண்டிருந்தது.

''பில்டிங் எல்லாம் நன்னாத்தான் வெச்சிருக்கா'' என்றார் அப்பா. ''இன்னும்கூடக் கட்டிண்டிருக்கா போலருக்கே.''

பக்கத்தில் முதல் கட்டடத்துக்குத் தம்பியாக உருவாகிக்கொண்டிருந்த கான்க்ரீட் எலும்புக் கூட்டைக் காட்டினார். அதனருகே செங்கல், ஆஸ்பெஸ்டாஸ், தண்ணீர்த் தொட்டி, மணல் மேடு, தூளி என்று காண்ட்ராக்ட் அடையாளங்கள் இருந்தன.

'அட்மிஷன்' என்ற அம்புக் குறியை நம்பி நடக்கையில், செளகரியமாகக் காம்பவுண்டு சுவரில் லுங்கி கட்டிக்கொண்டு, காலாட்டிக்கொண்டு, சிகரெட் பிடித்துக் கொண்டிருந்த மாணவர்களை நோக்கி அப்பா புன்னகை செய்தார்.

''தாத்தா! என்ன, படிக்க வந்திருக்கியா?

''இல்லைப்பா. என் மகனை அட்மிட் பண்ண வந்திருக்கேன்.''

''அவங்களோடெல்லாம் பேசாதிங்கப்பா'' என்று முணுமுணுத்தான்.

''அப்படியா! தம்பி எந்த யூனிவர்ஸிடி? வெங்கடேஸ் வராவா?''

''மெட்ராஸ் யூனிவர்ஸிடி.

''நாம் போட்டிருக்கிற மஞ்ச சட்டையைப் பார்த்துக் கலாட்டா பண்றாங்க. நீங்க வாங்கப்பா. இவங்க கூடல் லாம் பேசக்கூடாது.''

''டாட்டரைக் கூப்பிட்டுட்டு வரலையா பெரியவரே?"

''இல்லைப்பா. ஷி இஸ் டு யங்!''

''அய்யோ! நீ வாப்பா!''

ஆபீஸில் அட்மிஷன் லெட்டரைக் காட்டியபோது, உடனே பணம் கொடுத்தால் 'சிங்கிள் ரூம்' என்றார்கள். அப்பா செக் எழுதிக் கொடுத்தார்.

''ஸார், இது எம் பையன். முதல் தடவையா ஆஸ்டல்ல போடறேன். நீங்க யாரு வார்டனா?''

''ஸார், நான் வார்டனா இருந்தா இந்த மாதிரி காபியிங் பென்சில நக்கிண்டு பில்லு போட்டுண்டிருப் பனா?''

''பின்ன வார்டன் எங்கிருப்பார்?''

''அவர் லைப்ரரில இருப்பார். முதல்ல ஆஸ்டலுக்குப் போய் ரூம் ஒப்புத்துக்கோங்கோ.''

''சாப்பாடெல்லாம் சைவம்தானே?''

''அய்யோ, வா...ங்கப்பா'' என்றான் நடராஜன் சங்கடத்துடன்.

''இருடா. எல்லாம் கேட்டு வெச்சிக்க வேண்டாமா!"

''ரெண்டு மெஸ் இருக்கு ஏ, பி—ன்னு. ஒண்ணுல வான்கோழி, இன்னொண்ணுல நான்—கோழி!'' என்று கலங்கின கண்களால் அப்பாவைப் பார்த்துச் சிரித்தார். ''இந்தக் காலத்தில பிராமின்ஸெல்லாம் சிக்கன் சாப்பிடறா. எந்த யுகத்தில இருக்கேள் நீங்க? எம் மருமான் என்னை ஒட்டலே வெச்சிருக்கான்.''

செம்மண் பாதை வழியாக ரோடு இஞ்ஜினைக் கடந்து ஆஸ்டல் கட்டடத்து வாசல் புல்வெளியை அடைந்தார்கள். நடராஜனுக்குக் கையில் வைத்திருந்த தகரப் பெட்டி அவமானமாக இருந்தது. பார்த்த உடனேயே தொட்டியம் என்று அடையாளம் காட்டும் பெட்டி; போதாக் குறைக்கு ஜமக்காளம் சுற்றிக் கயிற்றில் கட்டின படுக்கை. முக்கால் கை வரை கதர்ச் சட்டையும், மூக்குப் பொடியுமாக அப்பா! நடக்கவே அவமானமாக இருந்தது மறுபடி அந்த இளைஞர்கள் ''வெங்கடேசுவரா யூனிவர்ஸிடியா?'' என்று கேட்டார்கள்.

''எல்லாரும் வாயில சிகரெட்'' என்று பதட்டப்பட்டார் அப்பா. ''நடராஜா, நீ மட்டும் சிகரெட் குடிச்சே, உங்கம்மா செத்தே போயிடுவா தெரியுமா? ருத்ரம் சமகம் எல்லாம் சொன்ன கனபாடிகள் குடும்பம். ஏதோ பொழைப்புக்காக ஊரூராப் போயி உத்தியோகத்துக்காக இந்த மாதிரி கன்னாபின்னாப் படிப்பெல்லாம் படிக்க வேண்டியிருக்கு. அந்த நாள்ளன்னா உன் குடுமியை எடுத்திருப்பியா? இல்லை...''

அப்பா! எல்லாம் இதோட ஆயிரந்தடவை சொல்லியாச்சு.''

''சிகரெட் குடிக்க மாட்டேன்னு இதுவரைக்கும் நீ வாக்குக் கொடுக்கலை!''

''முதல்ல போய் ரூம் ஒப்புத்துக்கலாம்பா!''

வாசலில் கட்டடத்துக்குப் பணம் கொடுத்த அத்தனை பெயர்களும் கல்லில் எழுதியிருந்தது. 'வார்டன்' என்ற அறையில் வார்டன் இல்லை. குமாஸ்தா மட்டும் ரசீதைப் பார்த்துவிட்டு, ''103ஆம் நம்பர். அப்படியே நேரப் போனேள்னா இடப்பக்கம் கடைசிலேருந்து மூணாவது.''

அப்பா என்னவோ தானே படிக்கப் போவது போல உற்சாகமாகவே நடந்தார். எதிரே அரை டிராயரில் ஒருத்தன் வாயில் டூத் பிரஷ் செருகிக்கொண்டு, கர்ச்சக் கர்ச்சக் என்று பல் தேய்த்துக்கொண்டு, ரெயில்வே கேட் போலக் குறுக்கே படர்ந்திருந்தான். இவர்கள் காத் திருக்க, மெல்லத்தான் வழிவிட்டான். போகும்போது, யார்தான், எந்த வயசிலதான் படிக்கிறதுன்னு வெவஸ்தை யில்லை'' என்றான்.

103ஆம் நம்பரைத் திறந்ததும் முனிசிபல் கழிப்பறை போல் இருந்தது. கீழே பீடித் துண்டங்களும், ரத்த பாண்டேஜும் கிடக்க, சுவரில் கரிக்கோட்டில் ஜனன உறுப்புகளைப் படம் வரைந்திருந்தது.

''ரொம்ப மோசம். வெள்ளை கிள்ளை அடிக்க மாட் டானோ?'' என்று அப்பா சன்னல் கதவைத் திறக்க, கரையான் உதிர்ந்தது. சன்னலுக்கு வெளியே வீடுகள் தெரிந்தன.

''ஸ்டாஃப் க்வார்ட்டர்ஸ் மாதிரி இருக்கு. அப்புறம் பையன் கிய்யன் வந்து க்ளீன் பண்ணுவானா இருக்கும். நட்டு, நான் போயிட்டு சித்தப்பாவைப் பார்த்துட்டு, ஏ.ஜி. ஆபீஸ்ல என் எல்.பி.ஸி.யை விசாரிச்சுட்டு, ராத் திரி பஸ்ஸைப் பிடிச்சு திருச்சினாப்பள்ளி போயிடறேன்''

''சரிப்பா''

சிகரெட்டுப் பழக்கம் வந்துடாமப் பார்த்துக்கோ. எல்லாரும் புடிக்கறா இங்க.''

''சரிப்பா.''

''சனிக்கிழமை எண்ணெய் தேச்சுக்கோ. செவ்வாய்க் கிழமை நெல்லிக்கா சாப்பிடு. அப்புறம் தசமூலாரிஷ்டம் உங்கம்மா கொடுத்திருக்கா பாரு, அதை...''

''தெரியும்பா.''

''திருவாசகம், கந்தரலங்காரம், அனுபூதி.''

''எல்லாம் இருக்கப்பா.''—அப்பா கிளம்பக் காத்திருந்தான்.

''அப்புறம், இந்நா நாப்பது ரூபா வெச்சுக்கோ. ஊருக்குப் போய் ஒண்ணாம் தேதி அனுப்பறேன்.''

''சரிப்பா

ஒரு வழியாக அப்பா போனதும் நடராஜனுக்கு மரக் கட்டில் மேல் உட்கார்ந்துகொண்டு அழவேண்டும் போலிருந்தது. அம்மா பார்த்துப் பார்த்து ராத்திரி வரை பெட்டிக்குள் பொட்டலம் பொட்டலமாக அடுக்கிக்கொண்டு, ரொம்ப பிஸியாக இருந்து, மகனைத் தனியாக அனுப்புகிற துக்கத்தை ஏமாற்ற முயற்சி செய்தது ஞாபகம் வந்தது. மின்னுவின் ஞாபகம் வந்தது.

''நீ வந்து மனசில எப்பவும் என்னையே நினைச்சிண்டு இருக்கறவரைக்கும் இந்த டாலர் கருக்கவே கருக்காது.''

பைக்குள்ளிருந்து அந்தக் காமாட்சியோ, மீனாட்சியோ போட்ட டாலரை எடுத்துப் பார்த்தான். வைகுண்ட ஏகாதசிச் சந்தையில் வாங்கினது. இருந்தாலும் மின்னு சொன்னாற்போல, நாளாகியும் இன்னும் பல்லைக் காட்டவில்லை.

''பட்டணத்தில் இருக்கிறவாள்ளாம் ரொம்ப அழகா இருப்பாளா நட்டு?''

சன்னல் வழியாக எதிரே பார்த்தான். செம்மண் சாலையோரம் மஞ்சளாக பொடிப்பொடியாகப் பூத்திருந்த

மரங்கள் வரிசையாக நின்று கொண்டிருந்தன. நான்கு நான்காக நாலுப் ப்ளாக் கட்டியிருந்தது. நைலான் கயிற்றில் பனியன், உள் பாவாடை, சட்டைகள் வெயிலில் காய்ந்து கொண்டிருக்க, ஒரு குழந்தை சைக்கிள் புறக் கணிக்கப்பட்டிருந்தது. புல் சதுரத்தில், நிழலில், ஒரு பெண் புது மாதிரியான நாற்காலியில் கால்மேல் கால் போட்டுக் கொண்டு படித்துக் கொண்டிருந்தாள். அழகாக இருப்பாள் போலத் தோன்றியது.

''வந்த உடனே மாதவி சென்குப்தாவை சைட் அடிக்கத் துவங்கிட்ட பாத்தியா? நீ கில்லாடி வாத்தியாரே!'

திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்ததில் அரை டிராயர்! பல்தேய்த்து முடித்து விட்டான். காட்டு மீசையும் ஸ்டெப் கட்டுமாக இருந்தான் அவன் தொப்புள் ஆழமாக இருந்தது. புல்வொர்க் பண்ணுவான் போலும். கண்கள் மையிட்டது போல அழகாக இருந்தாலும், நிறம் குறைவாக இருந்தான் மார்பெல்லாம் மசி கொட்டினது போல மயிர்

''ஃபர்ஸ்ட் இயரா?''

''ஆமாங்க. எம் பேரு நடராஜன் உங்க பேரு?''

''தெரிஞ்சுப்ப'' என்று அருகில் வந்து நடராஜன் பையிலிருந்த நோட்டுக்களைப் பார்த்து அவைகளை எடுத்தான்

''ஃபார்ட்டி ருபீஸ் பத்தாதே!''

நடராஜன் அதை விளையாட்டாகத்தான் எடுத்துக் கொண்டு சிரித்தான்

''வேற பணம் இல்லையா'' என்று தன் இடுப்பில் செருக்கிக் கொண்டான்.

''விளையாடாதீங்க; பணம் வேணும்!''

''உங்கூட விளையாடறதுக்கு மாமனா மச்சானா!''

''விளையாடாதீங்க. குடுத்துருங்க!''

''குடுக்கலாம்; எங்க போகும் பணம்'' என்று அவன் வெளியே சென்றான்.

# 2

ஆசாமி விளையாடுகிறான்; சற்று நேரத்தில் பணத்தைக் கொண்டு வந்து கொடுத்து விடுவான் என்றுதான் நடராஜன் நம்பினான். அவன் பெயர் தெரியாது எந்த வருஷம், எந்த ஹாஸ்டல், எந்த மாடி ஏதும் தெரியாது திகைத்துப் போய் அரை மணி நேரமானதும்தான் பணம் இன்றைக்கு வராது என்று புலப்பட்டது. யாரிடம் போய் முறையிடுவது? ஆபீஸில் போய் அந்த கிளார்க்கிடம் சென்று, ''ஸார்.''

அவர் மாலைமுரசின் வாலிபப் பெண்ணிடம் வம்பிலிருந்து புறப்பட்டு வந்து,

''என்னப்பா ரூம்லாம் சரியா இருக்கோல்லியோ?''

''ஒரு பையன் எங்கிட்டருந்து பணத்தைப் புடுங்கிண்டு போயிட்டான் ஸார்.''

''ஆஸ்டல் பையனா? ரூம் பாயா?''

''இல்லை. ஸ்டூடண்ட் மாதிரி இருந்தது.''

''யாரு? பேரு சொல்லு. இங்க நூத்துக்கணக்கில் மாணவர்கள் இருக்காங்க.''

''கொஞ்சம் மாநிறமா மீசை வெச்சுக்கிட்டு.''

''எல்லாருமே அப்படித்தாம்பா இருப்பாங்க. பண விஷயத்தில ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும். இந்த ஆஸ்டல்ல அசந்தா எதையும் அடிச்சுருவாங்க! வெளில பசங்க கண்ல படற மாதிரி ஒரு ஜாமானை வெக்

காதே. அடிச்சுடுவாங்க. சிகரெட் பாக்கெட்டு, பிளேடு பாக்கெட்டு, ஏர் ஆயில்... ஏன், அன்னிக்கு ஒரு பாக்கெட் சேமியா வாங்கி வெச்சிருந்தேன். யாரோ அடிச்சுண்டு போய் அய்யர் கடைல அரை விலைக்கு வித்திருக்கான். ஜாக்கிரதையா இருக்கணும். அவன் யாரு? அடையாளம் காட்டுவே இல்லை?''

''முகம் ஞாபகம் இருக்கும்னுதான் தோணுது ஸார்.''

''சரியான அப்பாவியா இருக்கியே! என்னைப் போய் ஸார்னு கூப்பிடறியே! அதிலருந்தே தெரியறதே.''

''பணம் இல்லாம ஒண்ணாம் தேதி வரைக்கும் என்ன செய்யப் போறேன்னு தெரியலை ஸார். அப்பா ஊருக்குப் போயிட்டார்.''

''அவருக்கு உடனே தந்தி அடிச்சுரு, 'ஸெண்ட் மோர் மணி'ன்னு. அப்பறம் இப்படியே போனன்னா மூணாவது மாடில திரீ நாட் ஸிக்ஸ்ல கோவிந்தராவ்னு இருக்கான். ஸ்டூடண்ட் கவுன்ஸில் சேர்மன் அவங்கிட்ட போயி இந்த மாதிரி ஆயிடுத்துன்னு சொல்லு. அவன் சொன்னா மத்த பசங்க கேட்கலாம்.''

''தாங்க்ஸ் ஸார்.''

''அவனைப் பாத்துப் பயந்துக்காதே. மாமா மாதிரி இருப்பான்.''

மூன்னூற்று ஆறில் கதவைத் தட்டின போது, ''எவ ருரா?''

''நடராஜன்.''

''ஐ டோண்ட் நோ எனி நடராஜன்.''

''புது ஸ்டூடண்ட் ஸார்!''

சட்டென்று கதவு திறந்து, ''இதி ஏமிட்டி? என்னைப் போய் ஸார்னு யாராவது கூப்பிடறதா! கம் கம்.''

குமாஸ்தா சொன்னதுபோல கோவிந்தராவை பார்த்து யாவரும் மாணவன் என்று சொல்ல முடியாது. சிவில் இன்ஜினியரிங் ப்ரொபஸர் என்று சொன்னால் நம்பியிருப்பான். இரண்டு பக்கமும் பின் தள்ளிப் போன கிராப்பில் சொற்பமே ரோமங்களை பத்திரமாக, ஜாலாக்காக புஸு புஸு பண்ணி வைத்திருந்தான். அக்கினேனி மாதிரி பென்சில் மீசை. சதுரமான பெரிய முகம். கழுத்து தெரியவில்லை. பனியன் வளைவில் தொங்கின தங்கச் சங்கிலி தெரிந்தது. பனியனுக்கு மேல் ஸ்போர்ட்ஸ் பனியன், டிராயர் அணிந்து கொண்டு டென்னில் மட்டையின் தண்டைக் கைக்குட்டையால் துடைத்து விட்டுக் கொண்டிருந்தான்.

''ஸார், எம் பேரு நடராஜன். உங்களை வந்து பார்க்கும்படியா ஆஸ்டல் கிளார்க் சொன்னார்.''

''பைசா கேக்கச் சொன்னாரா?''

''இல்லை ஸார். நான் இன்னைக்குத்தான் முதல் வருஷத்தில அட்மிட் ஆயி...''

''த பாரு நடராஸு. நான் இப்ப டென்னிஸ் போவறேன். ஒக பணி சேஸி! ரெண்டு மணி விட்டு பி மெஸ்ல வந்து என்னைப் பாரு. எந்த ப்ராபளமும் ஸால்வ் பண்ணிலாம்.''

நடராஜன் ஏமாற்றத்துடன், ''சாரி ஸார். தாங்க்யூ ஸார்'' என்றான்.

அவன் ஒதுங்கிக் கொள்ள, கோவிந்தராவ் கழுத்து மடிப்புக்களுக்கெல்லாம் லினோலியா பவுடரை தாராளமாக அப்பிக் கொண்டு கிளம்பினான். நடராஜனை ஒருமுறை பார்த்தான். என்ன தோன்றியதோ,

''சரி எங்கூட கோர்ட்டுக்கு வா. டென்னிஸ் ஆடுவியா?''

''இல்லை ஸார்.''

''பின்ன என்ன கேம்ஸ் ஆடுவே?''

''இன்டோர் கேம்ஸ்.''

''பாக்கெட் பிலியர்ட்ஸா? அது நாங்க எல்லாரும் ஆடுவோம்'' என்று சப்தமில்லாமல் சிரித்தான்

''கேரம்.

''இந்த மாதிரி காய் திருடினா நான் வரவே மாட்டேன்'' என்றாள் மின்னு.

''நல்லா ஆடுவியா?''

இல்லை, சீச்சலா நானும் ஆடுவேன்!''

கோவிந்தராவ் மாடிப் படியில் இறங்கும்போது பல பேர், 'வணக்கம் அண்ணே' என்று அவனை நோக்கிப் புன்னகைத்தார்கள். எதிர் ஹாஸ்டலிலிருந்து யாரோ ''மாமா!'' என்று அழைக்க அவனை இங்கிருந்து டென்னிஸ் மட்டையால் அதட்டினான். இந்தத் தொப்பையை வைத்துக் கொண்டு எப்படி டென்னிஸ் ஆடுவான் என்று பயமாக இருந்தது! பீப்பாய் போல இருந்தான். கண்கள் அலைந்து கொண்டிருந்தன. தெலுங்கில் கண்டசாலா போல சுருதி சுத்தமாகப் பாடிக் கொண்டே மாடிப்படியில் இறங்கும் போது, ''யாரையும் ஸார்னு கூப்பிடாதே. ப்ரொஃபஸரைக் கூட ஸார்னு சொல்ல மாட்டோம்! அப்புறம் பணத்தைக் கோமணத்தில வெச்சுக்க'' என்றான். டென்னிஸ் மட்டையின் வின்னைச் சரி பார்த்துக் கொண்டு, ''சொல்லு, என்ன ப்ராப்ளம்?''

ஹாஸ்டலை விட்டு வெளியே வந்து செம்மண் ரோடில் நடக்கும் போது கோவிந்தராவிடம் தன் இழப்பைப் பற்றிச் சொன்னான்.

''ஓ, கஸக்கோலு!'' கோவிந்தராவ் 'ஜ'வையெல்லாம் ஆங்கில Z போல உச்சரித்தான்.

''யாரு?''

''உங்கிட்ட பணம் எடுத்தானே கஸராஸா! நாங்க கஸக்கோலுன்னுதான் கூப்பிடுவோம். கவலைப்படாத.

வாங்கிக் கொடுத்துர்றேன். பணம் செலவழிச்சிருப்பான். பரவால்லை. ஒரு வாரத்தில வாங்கிக் கொடுத்துரலாம். இப்ப செலவுக்குப் பணம் இருக்கா?''

''இல்லை.''

''சரி. அய்யர் டப்பால வாங்கித்தரேன்''

தண்டவாள ஓரத்தில் கம்பி வேலிக்குள் பச்சை பெயிண்ட் அடித்து டப்பா போலத்தான் இருந்தது அந்தக் கடை. அதில் ஒருத்தர்தான் நுழைய முடியும். அவரை நுழைத்து, அப்புறம் நோட்டுப் புஸ்தகம், சிகரெட், ஜாடி, சோப்பு எல்லாம் வைத்து ஜோடித்தது போல இருந்தது.

''அய்யர், இது நம் தோஸ்த்! பணம் கேட்டா குடு'' என்றான்

அய்யர் சுச்சிதமாக, குட்டையாக, வழக்கையாகப் பூனைக் கண்களால் அவனைப் பார்த்து, 'முடியாது!'' என்றார்.

''அப்படித்தான் சொல்வார். வா போகலாம்''

புட்பால் மைதானத்தில் முள்ளாக இருக்கும் போல இருந்தது. எதிரே ஒர்க் ஷாப்பில் ஆங்கர்களுக்கு இடையில் கருப்புத் தட்டி, செம்மண்ணுடன் டென்னிஸ் கோர்ட் தெரிந்தது. அதில் முன் கோர்ட்டில் ஒரு வெள்ளைக்காரனும், ஒரு பெண்ணும் ஆடிக்கொண்டிருந்தார்கள்.

அடுத்த கோர்ட்டில் மார்க்கருடன் ஒரு மாணவன் ஆடிக்கொண்டிருந்தான். ஆட்டத்தைவிட ஸ்டைல்தான் அதிகமாக இருந்தது. மார்க்கர் அவனுக்குத் தண்ணி காட்டிக் கொண்டிருந்தான். மாணவன் அடிக்கடி 'குட் ஷாட்'என்று மட்டையால் சிலாகித்துக்கொண்டிருந்தான்

நடராஜனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. கோவிந்தராவ் எப்படி ஆடுகிறான் என்று பார்க்க வேண்டும் போல இருந்தது. வேடிக்கையாக இருக்கும் என்று தோன்றியது அந்தப் பெண்ணைப் பார்த்த மாதிரி இருந்தது. டென்னிஸ் உடை அணியாமல் லெமன் கலர் ஸாரியும், கான்வாஸ் ஷூக்களுமாக அதிகம் ஓடாமல்

ஆடிக்கொண்டிருந்தாள். ரொம்பக் கற்றுக்குட்டி என்று தெரிந்தது. அவளைக் கோர்ட்டில் அனுமதிப்பதே அவள் பெண் என்பதாலும், குறிப்பாக அழகான பெண் என்பதாலும் என்று தோன்றியது. எதிரே இருந்த வெள்ளைக்காரன் வெயிலில் செம்பருத்திப் பூ போலச் சிவந்திருந்தான் ''கமான் கோயிந்த்'' என்றான்.

அந்தப் பெண் புன்னகைத்து கோர்ட்டைவிட்டு விலக, கோவிந்தராவ்வெள்ளைக்காரனுடன் ஆடத் துவங்க, ஆட்டத்தின் சுபாவமே மாறிவிட்டது. அடேயப்பா, கோவிந்தராவ் இவ்வளவு பிரமாதமா ஆடுவானா? என்று ஆச்சரியமாக இருந்தது. அவனுடைய 'பேக் ஹாண்டில்' ஒருவித நளினம் இருந்தது. பந்து மட்டையை விட்டு விடுபட்டதும் நெட்டை முத்தமிடும் உயரத்துக்குச் சீராகச் சென்று 'டாப்ஸ்பின்' அதிகமாகக் கொண்டு விழுந்ததும், எதிராளியைத் தொந்தரவு செய்தது.

நடராஜனுக்கு கோவிந்தராவின் மாமாத்தனங்கள் எல்லாம் மறந்துபோய் அவனை சிநேகிக்க வேண்டும் போல இருந்தது.

இடையில் அந்த லெமன் கலர் ஸாரி குறுக்கே செல்லும்போது நடராஜனைப் பார்த்துப் புன்னகைத்தாள். அவள் நடராஜனைக் கடந்தபோது ஒரு மாதிரி கடுகெண்ணெயும் செண்ட்டும் கலந்தாற்போல வாசனை வீசியது.

கோவிந்தராவ் இருட்டுகிற வரை ஆடிக்கொண்டிருந்ததைப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, அவன் தோளில் துண்டு போட்டுக்கொண்டு புறப்பட, அவன் கூடவே நடந்தான்.

''யூ ப்ளே வெல் ஸார்'' என்று வந்ததை முழுங்கிக் கொண்டான். முன்னால் போய்க்கொண்டிருந்த அந்தப் பெண்ணை நோக்கி, ''போறா பாத்தியா, சென்குப்தா'' என்றான் கோவிந்த ராவ்.

நடராஜன் மௌனமாக இருக்க, கோவிந்த ராவ் மேலே சொல்லப்போவது மோசமாக இருக்கப் போகிறது என்று தோன்றியது.

''இந்த காம்பஸ் முழுக்க இவ பின்னாலயே அசையுது. எல்லாருக்கும் தண்ணி காட்டுரா! ஆனா இவளுக்கு நான் தண்ணி காட்டிட்டிருக்கேன்'' என்றான்.

அது காதில் விழுந்தவள் போல அந்தப் பெண் நின்று திரும்பி இவர்கள் அணுகக் காத்திருந்தாள்.

# 3

அந்தப் பெண், இவர்கள் இருவரும் அவளுடன் வந்து சேரக் காத்திருந்தாள்.

அவள் பேசின இங்கிலீஷ் நடராஜனுக்குப் புரியவில்லை. ஆனால் அவள் தன்னுடன் பேசவில்லை. கோவிந்த ராவிடம் ஏதோ கேட்க, அதற்கு கோவிந்தராவ் விஷமமாகப் பதில் சொல்ல, பளிச்சென்று சிரித்தாள். நடராஜனை கோவிந்த ராவ் அறிமுகப்படுத்தி, ''நியூ ஸ்டூடண்ட்'' என்றான். ''ஹலோ'' என்று மறுபடி பளிச்.

நடராஜனுக்குப் பெண்களைப்பற்றிய குத்து மதிப்பான அபிப்பிராயம்தான் இருந்தது. உலகத்திலேயே அழகு மின்னு என்றுதான் நினைத்திருந்தான். அம்மாவும் கொஞ்சம் அழகுதான். ஆனால் அது வேறு அழகு. மின்னு கறுப்பாக இருந்தாலும், நடராஜன் இங்கிலீஷில், ''ஓ மை லோட்டஸ் ஃப்ளவர்! ஓ மை ஜாஸ்மின்!'' என்றெல்லாம் பொயட்ரி எழுதும் தகுதி பெற்றிருந்தாள். ஆனால் இன்று இந்த மாதவி சென்குப்தாவைப் பார்த்ததும, இம்மாதிரிப் பெண்களும் இருக்கக் கூடும் என்று முதலில் புலப்பட்டது நடராஜனுக்கு. அவன் உயரத்துக்கு அதிகமாக, அவனைவிட அகலமாக, சிவப்பாக, இவளை

ஒரு பெண் என்று சொல்வதைவிட 1.5 பெண் என்று சொன்னால் ஏற்றுக்கொண்டிருப்பான். லெமன் கலர் ஸாரியும், கான்வாஸ் ஷூக்களுமாக இருந்தால் என்ன, எந்தப் புடவையும் இவள் மேல் பொருந்தும் போலிருந் தது யுவதி இல்லை. சுமார் முப்பது வயசிருக்கலாம். இவளை சர்வ வயதினரும் காதலிக்கலாம் என்று தோன்றி யது. காதல் என்பதைவிட மையல் என்பது பொருத்தம். எல்லா மாணவர்களிடமும் சகஜமாகப் பேசுவாள் என்றும் தோன்றியது.

''கம் கோவிந்தா. ஹேவ் ஸம் டீ! ஐ'ம் நாட் ஷ்யூர் இஃப் பார்த்தோ இஸ் இன்!''

''யூ ஸ்பீக் டமில் மாடம்?'' என்றான் நடராஜன்.

''கொஞ்சம் கொஞ்சம்'' என்றாள். நடராஜனுக் குக் கன்னம் பூரா வெட்கம் உறுத்தியது.

வீட்டினுள் உள்ளே நுழைவதன் முன் எட்டு வயசுப் பெண்பிள்ளை வந்து அவளை அணைத்துக்கொள்ள, சடை நாயும் அவள் அன்புக்குப் போட்டி போட, புல் வெளியில் இருந்த பிரம்பு நாற்காலிகளில் இருவரையும் உட்கார வைத்து உள்ளே சென்றாள்.

''பாத்தியா!'' என்றான் கோவிந்த ராவ் பென்சில் மீசையை இடம் வலமாக ஒருமுறை தடவிக்கொண்டு. ''என்னைக் கண்டா எத்தனை உருகறா பாரு.'' நட ராஜனுக்கு அப்படி ஒன்றும் தெரியவில்லை. மௌனமாக இருந்தான். அந்தச் சிறு பெண் 'அங்கிள்' என்று ஆவலு டன் ஒட்டிக்கொள்ள, அவளை ராவ் மடியில் வைத்துக் கொண்டான். முத்தம் தந்தான். மாதவி சென்குப்தா கோப்பைகளில் டீ கொண்டு வந்து, கோவிந்தராவின் அருகில் நாற்காலி போட்டு சகஜமாக உட்கார்ந்து கொண்டாள்,

அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதைக் கவனிக்காமல் அவளையே கவனித்துக்கொண்டிருந்தான். ஒரு மணி நேரம் பார்த்தாலும் அலுக்காது போலத்தான் இருந்தது நடராஜனுக்கு. தன் அறை எண் 103-லிருந்து இந்த வீடு தெளிவாகத் தெரியும் என்கிற எண்ணம் சந்தோஷமாக இருந்தது.

''வேர் இஸ் ப்ரொஃபஸர்?'' என்றான் கோவிந்தராவ்.

''மஸ்ட் பி இன் தி லைப்ரரி'' அவள் கை விரல்கள் மெலிய சருமத்தின் ஊடே ரத்தம் தெரிந்தது. அப்படி அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே சென்குப்தா வந்தார் ''ஹலோ!'' மாதவியின் அப்பா போல இருந்தார். பட்டை பிரேம் போட்ட கண்ணாடியும், காவி ஜிப்பாவும், பாதித் தோளில் போர்த்திய கதர் துண்டும், கை நிறையப் புத்தகங்களுமாக 'ஈஷி, மோஷி' என்று மாதவியுடன் பெங்காலியில் பேசிவிட்டு, ''ஹாய் கோவிந்தோ'' என்று அவனைப் பார்த்துப் புன்னகைத்துவிட்டு உள்ளே செல்ல, மாதவி அவரைத் தொடர்ந்து சென்றாள்.

கோவிந்த ராவ் சற்று நேரம் காத்திருந்துவிட்டு, சுரத்திழந்து புறப்பட்டான். நடராஜனுக்கு உள்ளே ப்ரொஃபஸரும் மாதவியும் அவர்கள் பாஷையில் வாக்குவாதம் பண்ணுவது கேட்டது. திரும்ப ஹாஸ்டலுக்கு வரும்போது, ''ப்ரொஃபஸர் புஸ்தகத்தைக் கட்டிக்கிட்டு அழறார். பொண்டாட்டியைக் கட்டிக்க மாட்டங்கறாரு, அதான் அலையுது!'' என்று சப்தமில்லாமல் சிரித்தான் கோவிந்தா.

ஹாஸ்டல் வாசலில் பளபளவென்று டிரஸ் செய்து கொண்டு மின்னல் போலப் புறப்பட்டுக்கொண்டிருந்தவனை நிறுத்தி, ''கஸக்கோலு இரு!''

என்ன மாமா? என்றான் கஜராஜ்.

''இவன் பணம் எங்கே?''

''பணமா?''

''மத்யானம் புடுங்கிக்கிட்டயாமே?"

''டேய் அராத்து. அதெல்லாம் போய் கொள்ட்டி கிட்ட சொன்னியாடா? என்னா ஒரு சொண்ட்டிடா நீ!''

கோவிந்த ராவ் அவனைத் தடுத்து நிறுத்தி, ''இவன் பணத்தைக் கொடு முதல்ல!''

''செலவாயிருச்சுன்னு சொன்னேன் இல்ல மாமாஜி.''

''கொடு பணத்தை!''

''இல்லைடான்னா!''

கோவிந்த ராவ் சற்றும் எதிர்பாராமல் அவன் மூலத்தைப் பிடிக்க, ''அய்யோ விடுரா மாமா!''

''குடுரா குடுரா'' என்று கோவிந்த ராவ் கஜராஜின் டிராயர் பாக்கெட்டிலிருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்துப் பிடுங்கி நடராஜிடம், ''எத்தனை சொன்னே?'' என்றான்.

''நாப்பது ரூபா ஸார்.''

நான்கு நோட்டுக்களைத் தேர்ந்தெடுத்து நடராஜ னிடம் கொடுத்துவிட்டு, ''நீ எங்க வேணா போய்க்க கஸராஸு. புச்சா வந்தவங்ககிட்டப் பணம் புடுங்கக் கூடாது! கெட்ட பயக்கம்'' என்று பாடிக்கொண்டே சென்றான்.

கஜராஜ் நடராஜனைக் கண்களில் நரகம் தெரிய முறைத்துப் பார்த்து, ''டேய்! நீ எங்க போவே? உடனே கம்ப்ளெயிண்ட் பண்ணியா? நீ எங்கடா போற? எங்க

ராகிங் இருக்குதில்லை. ஆசனத்துவாரம் வழியா டூத்பேஸ்ட் போடமயா இருப்போம்!''

''நீ போடா'' என்றான் கோவிந்த ராவ் மாடிப்படிகளிலிருந்து.

''மாமா! நீ மட்டும் என்ன ஆற பாரு. எலக்‌ஷன் வருதில்லை'' என்றான்.

கோவிந்த ராவ் அசிங்கமாக வாயால் சப்தம் பண்ணி விட்டு, என்னவோ கொடுக்கா என்று அவனை மிரட்டி விட்டு, ''நடராஸு பயப்படாதே'' என்றான்.

ராத்திரி ரூமில் படுத்திருக்கும்போது கொசுக்கள் ரீங்கரித்தன. ரொம்ப நேரம் தூக்கம் வரவில்லை. கஜராஜ் சொன்னது திரும்பத் திரும்ப மண்டைக்குள் ஒலித்துக் கொண்டே இருந்தது. அவன் கண்களில் கொஞ்சம் கூட விளையாட்டு இல்லை. வெறுப்பால் எரிந்து கொண்டிருந்தான். நிச்சயம் என்னவோ விபரீதம் நடக்கப் போகிறது. 'ராகிங்'கைப் பற்றியெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறான். கல்லூரியில் டே ஸ்காலராக இருந்ததால் இதுவரை அனுபவித்திராதவன். முதல் நாளிலேயே வம்பில் மாட்டிக்கொண்டு விட்டோம்! கொஞ்ச காலம் சென்னையில் ரூம் எடுத்துக்கொண்டு தலைமறைவாக இருந்தால் என்ன?

மின்சார ரயில்கள் வந்து போகும் சப்தம் நள்ளிரவு வரை கேட்டுக் கொண்டிருந்தது. பக்கத்தில் ஏதோ ஒரு டெண்ட்டில் சினிமாவின் சவுண்ட் ட்ராக் கேட்டது. அது ஓய்ந்து ஜி.எஸ்.டி. ரோடில் லாரி சப்தம் குறைந்ததும் தான் லேசாகக் கடல் அலைகளின் ஓசை கேட்டது. அதற்கப்புறம் தூங்கிப் போனான்.

காலை இரைச்சலாக இருந்தது. பையன் வந்து 'வென்னீர் வேண்டுமா?' என்றான். 'சோப்பு,

டூத்பேஸ்ட், பேப்பர் எதாவது கொண்டு வரவா?" என்றான். அந்தப் பையன் ஒரு ஃப்ராடு என்று மற்றொரு பையன் வந்து சொன்னான்.

சன்னல் வழியாகக் கதவைத் திறந்து பார்த்தான். மாதவி சென்குப்தாவின் மற்றொரு ஸாரி மாடியில் காற்றில் ஆடிக் கொண்டிருந்தது. அவள் பெண் சீருடை அணிந்து டாட்டா காட்டிக்கொண்டு பள்ளிக்குச் சென்றாள். டிரஸ்ஸிங் கவுனில் வாயில் பைப்புடன் சென்குப்தா வாசலில் பேப்பர் படிப்பது தெரிந்தது.

அந்த மாதவி என்கிறவள் என்ன செய்து கொண் டிருப்பாள் என்று யோசித்தான். மின்னு என்ன செய்து கொண்டிருப்பாள்? ப்ளாஸ்டிக் மணிகளை வைத்துக் கொண்டு பின்னிக் கொண்டிருப்பாள். அவள் மாமா அமெரிக்காவிலிருந்து வாங்கி வந்த கேம்ஸை ஆயிரமா வது தடவையாக ஆடிக் கொண்டிருப்பாள். நடராஜன் மின்னுவை ஒரே ஒரு தடவை தொட்டிருக்கிறான்.

கரச்சக் கரச்சக் என்று சப்தம் கேட்கத் திடுக்கிட்டான். கஜராஜ் நின்று கொண்டிருந்தான். நடராஜன் வெல வெலத்துப் போய்விட்டான். தூக்கம் மையிட்ட கண்களால் பார்த்து, ''புத்தியைக் காட்டின பார்த்தியா வாத்தி யாரே! எங்க போற நீ, எங்கிட்ட உதை படாம?''

''த பாருங்க பிரதர்! நீங்க தப்பா நினைச்சுக் கலைன்னா, எனக்கே பணத்தட்டுப்பாடு...''

அவன் அறையில் இரண்டு காலணிகளைப் ஃபரட்டு விட்டு ''நான் உனக்கு சீனியர் தெரியுமில்லை? சொல்லு சீனியர்!''

''சீனியர்.''

''பூட்ஸுக்கு பாலிஷ் போட்டு வையி. பளபளன்னு கண்ணாடி கணக்கா இருக்கணும். அரை மணில

வரேன்'' எதிர் ஹாஸ்டல் மாடியில், ''டேய், ஒரே ஒரு தடவைடா பப்பு!'' என்று ஒருவனைச் சிலர் துரத்திக் கொண்டு செல்ல, நடராஜனுக்கு பூட்ஸை என்ன பண்ணுவது என்று தெரியவில்லை. இந்த பூட்ஸுக்கு பாலிஷ் போட்டால் இந்த கஜராஜ் ஓடஓட விரட்டுவான். அதே சமயம் எப்போதும் கோவிந்தராவின் உதவியை நாடுவதும் நல்லதில்லை. சரி வரட்டும்! பாலிஷ் போடாமல் இருந்தால் என்ன செய்கிறான் பார்க்கலாம் என்று காத்திருந்தான்.

கஜராஜ் அரைமணி கழித்துத் திரும்பி வந்தான். வெய்ட் லிஃப்டிங்கோ, ஜிம்னேசியமோ எங்கோ போய் உடலில் நிறைய வியர்வை இருந்தது. ''என்ன, பாலிஷ் ஆச்சா?'' என்றான்.

''இல்லை, போடலை.''

''என்னது, போடலையா? சீனியர் பேச்சைக் கேக்கலையா? அப்படியா!'' கஜராஜ் இரண்டு காலணி களையும் எடுத்துக்கொண்டு நடராஜன் அருகே வந்தான்.

## 4

நடராஜன் தொட்டியத்திலும் லால்குடியிலும் திருச்சி யிலும் படித்தவன். வாழ்க்கையில் இதுநாள்வரை கஜராஜ் போன்ற மோசமான பிரகிருதியைச் சந்தித்ததில்லை. யாரையாவது முழுமையாக வெறுத்து, அவன் இந்தக் கணத்தில் உலகத்தில் இல்லாமலிருந்தால் எல்லோருக்கும் சுபிட்சம் என்று தன் வாழ்க்கையில் முதன் முதல் எண்ண வைத்தது கஜராஜ்தான். சிரித்தாலும் அவனைப் பார்க்கப் பயமாக இருந்தது. அவன் சொன்னதையெல்லாம் செய்து தொலைத்து எப்படியாவது அவன் இங்கிருந்து போனால் சரி என்று தோன்றியது. என்ன செய்யப் போகிறான் என்பதுதான் தெளிவாக இல்லை.

கஜராஜ், நடராஜன் அருகில் வந்து தனது காலணிகளை லேஸ் வைத்து ஒருமாதிரி மாலையாக அமைத்து, அதை அவன் கழுத்தில் மாட்டி ஹாஸ்டலின் காரிடாரில் முழங்காலில் நடக்கச் சொன்னான். நடராஜன் 'மாட்டேன்' என்றதற்கு கஜராஜ் அவன் மண்டையில் தட்டினான். மறுபடி 'மாட்டேன்' என்று சொன்னதற்குப் பலமாகவே வலிக்கும்படியாகவே அடித்தான். இந்த வயசில் அழுவதாவது என்று சும்மா இருந்துவிட, "எடுரா பூட்ஸை கீழருந்து! எடுரான்னா!"

அவன் எடுக்க மறுக்க, அவ்வழியே சென்ற மற்றொருவன் சமாதானத்துக்கு வந்தான்.

"என்ன கஜூ, என்ன சண்டை?"

"த பார் பார்த்திபன். நான் கேக்கறதில எதாவது தப்பாருந்தா சொல்லு. சீனியர் கேட்டா செய்யணுமா இல்லையா! அதான இந்த நாட்டு வழக்கம்?"

"ஆஹா பேசக் கூடாது. அதான் தொன்று தொட்டது" என்று நடராஜனைத் தொட்டுப் பார்த்து,

"தம்பி ஜூனியர்! கஜூ சொல்றாப்பல செஞ்சுட்டடின்னர்ல ஒரு ராத்மன் சிகரெட்டு குடுப்போம். இப்ப என்ன பண்ணச் சொன்னே?"

'செருப்பை மாலையாப் போட்டுக்கிட்டு மண்டி போட்டு நடக்கச் சொன்னா அதில் ஏதாவது தப்பா வாத்யாரே?"

"சேச்சே கிடையாது. த பாரு, உம்பேர் என்ன? ஏதோ எளவு பேரு! கஜராஜ் சொல்றது ரொம்ப சொலபம். செய்துர்றது உனக்கு ஆரோக்கியம்! இல்லைன்னா கக்கூஸ்ல வரச் சொல்லிருவான். எல்லாம் உனக்கு நல்லதுக்குத்தானே சொல்வோம் மச்சி!"

நடராஜன் முட்டாள்தனமாக ஒன்றுமே சொல்லாமல் நின்று கொண்டிருக்க, ''எடுரான்னா!'' என்று முழங் காலால் வயிற்றில் குத்துவதுபோலப் பாவனை செய்ய, கதிகலங்கிப் போய் மண்டி போட்டுக் கொண்டான்.

''இர்றா, காமிரா எடுத்தாரலாம்'' என்றான் கஜராஜ்.

''இரு, அதுக்குள்ள டேக்கிராதே! அய்யர் டப்பால போயி பாக்கெட் ஃபில்டர் வில்ஸ் கொண்டாந்துரு, கணக்கு இருக்கில்லை?''

''போடான்னா'' என்று புறங்கையால் அடிக்கிறாற் போல ஓங்க, கஜராஜ் அதற்குள் காமிரா எடுத்து வர, செருப்பு மாலை அணிந்து, மண்டி போட வைத்து, 'ஸ்மைல்' சொல்லி போட்டோ எடுத்தான். இதற்குள் சங்கும் ஊதி விட, பாக்கி நாளைக்கு என்று சொல்லி விட்டு இருவரும் புறப்பட்டார்கள். நடராஜன் ரூமுக்குள் வந்து அடக்கி வைத்திருந்ததை அழுதான். என்ன ஒரு பிழைப்பு இது! தினம் இப்படி இருந்தால் எப்படி சமாளிக்க முடியும்? பேசாமல் ராத்திரி ரயிலைப் பிடித்து ஊருக்குப் போய் விடலாம்.

'மின்னு, என்னை ரொம்பக் கொடுமைப்படுத்த றாங்க! என்னால தாங்க முடியலை!'

கதவு தட்டப்பட, ''யாரு?'' என்றான் கண்ணைத் துடைத்துக் கொண்டு.

''ஒப்பன் அப்'' என்று அதட்டல் குரல் கேட்க, 'இது யாரு புதிதாக' என்று பயம் ஏற்பட, சற்று நேரம் தயங்கி விட்டுத்தான் திறந்தான்.

''ஹாய்! மை நேம் இஸ் பாலசுந்தரம். கால் மி பப்பு!''

பப்பு அளவில் சின்னவனாக, குட்டையாக, குண்டாக இருந்தான். சிரித்தபோது ரெண்டு தாடை தெரிந்தது. பார்த்த உடனேயே உபத்திரவமில்லாதவன் என்று தெரிந்தது.

''கஜுவும் பாத்துவும் வந்துட்டுப் போனாங்க. அங்கிருந்து பாத்துக்கிட்டு இருந்தேன். அவங்க ரொம்ப மோசம் இல்லை?''

நடராஜனுக்கு, இது வேறு ரக கலாட்டாவோ என்று, கொஞ்சம் சந்தேகமாக இருந்தது.

''த பாருங்க எதாவது ராகிங் பண்ணணும்னா சாயங்காலம்.''

''நேர், எனக்கு இதெல்லாம் நம்பிக்கை இல்லை. உன்னைப் பார்த்து ஆறுதல் சொல்லலாம்னுட்டு வந்தேன். இவங்கள்ளாம் கெட்டவங்க இல்லை. ஆரம்பத்தில ரொம்ப ரஃப்பா இருந்தாலும் பின்னால் எல்லாரும் நல்லவங்கன்னு தெரியவரும். பார்த்திபன் தங்கமானவன். கஜராஜைப் பத்திச் சொல்ல முடியாது. வேற யாரையெல்லாம் பாத்த?''

''கோவிந்த ராவ்.''

''கோவிந்த ராவ் ரொம்ப நல்லவன். யாரையும் எதுவும் சொல்ல மாட்டான். அவனுக்குக் கல்யாணம் ஆகி குழந்தை இருக்கு தெரியுமோ?'' பப்பு கட்டிலில் உட்கார்ந்து கொண்டு, ''எந்த ஊரு?'' என்றான்.

''தொட்டியம்.''

''நான் மதுரை! பூர்விகம் பாலக்காடாக்கும். என்னை எல்லாரும் துரத்துனாங்களே பாத்தியா? திடீர் திடீர்னு என்னைக் கண்டா துரத்துவாங்க!"

''எதுக்கு?''

''அப்றம் தெரிய வரும்! ரொம்ப மோசம் இந்தப் பசங்க. முதல் வருஷம் கொஞ்சம் ரஃப்பாத்தான் இருக்கும். பணம் ஜாக்கிரதையா வெச்சுக்கோ.''

''தாங்க்ஸ்.''

''கொஞ்ச நாளைக்குத் தலைமறைவா இரு. கிளாஸுக்கு நடக்கறப்ப மரத்தின் நிழல்லியே ரெயில்வே லைன் பக்கத்திலேயே நட. சமாளிச்சுரலாம். ஒரு ரெண்டு மூணு மாசம். அதுக்கப்புறம் ஒரு டின்னர் வெப்போம். அங்கிருந்தே பார்த்தேன். சத்தாய்ச்சுண்டு இருந்தாங்க. அதனாலதான் ஆறுதல் சொல்லிட்டுப் போலாம்னு வந்தேன். ஒரு தடவை ஒரு ஸ்டுடண்ட் தற்கொலையே பண்ணிக்கிட்டான். அப்பல்லாம் பயங்கரம்! வரட்டுமா? கிளாஸுக்கு நேரமாச்சு.'' பப்பு சென்றதும் நடராஜனுக்கு ஆறுதலாக இருந்தது.

சன்னலுக்கு வெளியே காலை வானம் நீலப்புடவை உடுத்தியிருக்க, கற்றுக்கொண்ட பறவைகள் குதித்துப் பறந்து கொண்டிருந்தன. எதிர் வீட்டு மாடியில் மாதவி சென்குப்தா பால்கனிக்கு வந்து தன் அடர்ந்த கூந்தலை விடுவித்து மெல்லத் தலையைச் சாய்த்துக் கொண்டு நீவி வாரிக் கொண்டது நேர்த்தியாக இருந்தது. அந்தக் காலை நேரத்து மெலிய வெயிலில் ஒருமுறை அவள் தன் மேல் புடவையை நீக்கி விட்டுச் சரி செய்து கொண்டாள்.

பெங்கால் பருத்திப் புடவையின் கொட்டடி டிஸைனும் அது கட்டையாக அவள் தோளின் மேல் உலவ, ஏதோ ஆயில் சித்திரம் போலத்தான் இருந்தாள். ப்ரொபஸர் அதிருஷ்டக்காரர் என்று நினைத்தான். எட்டு வயசில் பெண் இருக்கிறவளா இவள்? இப்போதே இவள் அழகாக இருந்தால் கல்யாணத்தின்போது எத்தனை அழகாக இருந்திருப்பாள்? மின்னுவிடம் சொல்ல வேண்டும். மின்னு தப்பாக எண்ணிக் கொள்ள மாட்டாள்.

மின்னுவுக்குக் கடிதம் எழுதலாம். ஸ்கூல் விலாசத்துக்கு எழுதவேண்டும். மின்னு மின்னு என்று நினைத்தாலும் கண்கள் சென்குப்தாவை விட்டு அகலவில்லை!

ஒருகணம் நேராக, தெளிவாக, நடராஜனைப் பார்த்து மாதவி புன்னகைத்தாள். நடராஜனுக்குச் சற்றுப் பயமாக இருந்தது. அவள் தலை வகிட்டில் தீற்றியிருந்த குங்குமம் அச்சுறுத்தியது. மாலை கோவிந்த ராவ் அறைக்குப் போய்விடுவதுதான் பத்திரம் என்று நினைத்து அறையைப் பூட்டிக் கொண்டு சென்றான். கோவிந்த ராவ், நல்லவேளை, டென்னிஸுக்கு இன்னும் புறப்படவில்லை. ''வா ராஸு, என்ன வேணும்?''

கோவிந்த ராவ் டென்னிஸுக்குத் தயாராகிக் கொண்டிருந்தான். மார்பு பனியனைத் தளர்த்திக் கொண்டு பவுடரை உதறிக் கொண்டிருந்தான். ''மதன சுந்தரி மதன சுந்தரி நீலல்ல நதிலேடி நீநீட சூட்டோ'' என்று பாடிக் கொண்டிருந்தான்.

நடராஜன், கஜராஜ் தொந்தரவைப் பற்றிச் சொன்னான்.

''எங்கூட கோர்ட் வந்துரு.''

டென்னிஸ் கோர்ட்டுக்கு மாதவி வராதது குறையாக இருந்தது. ப்ரொபஸருடன் காரில் அவள் அலங்காரமாகப் போவதை இருவரும் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கோவிந்த ராவ் மறுபடி 'மதன சுந்தரி' பாடினான்.

அவனோடயே ஒட்டிக் கொண்டு ராத்திரி சாப்பாடு, படுக்கை சமயம் வரை சமாளிக்க எண்ணி அவனுடன் செல்ல, கோவிந்த ராவ், ''வா, ஒண்ணு காட்டறேன்'' என்றான்.

''என்ன?''

''நீ இதுக்கு முன்னாடி பாத்திருக்கவே மாட்டே'' என்று அவனைக் கட்டிட வேலை பாதியில் இருக்கும் பக்கத்துக் கட்டிடத்துக்கு அழைத்துச் சென்றான்.

# 5

கான்க்ரீட் பாதி காய்ந்த படிகளில் ஆங்காங்கே தண்ணீர்ச் சதுரங்கள், பலகைகள் இவைகளை கோவிந்த ராவ் சாமர்த்தியமாக, சப்தமில்லாமல் கடந்து செல்ல, அவன் வேகத்துக்கு ஈடு கொடுப்பது கஷ்டமாக இருந்தது. முன்னமேயே இந்தப் பாதையில் வந்திருக்க வேண்டும்.

''என்ன கோவிந்தராவ், எங்க போறம்?'' என்றான் குதிகால் படாமல் தாவிக்கொண்டு.

''ஷ்ஷ்ஷ்... சப்தம் போடாம வா! சப்தம் போட்டா பட்சி ஓடிரும்.''

''என்ன பட்சி?''

''நீ பாரு.'' கட்டி முடிக்காத ஹாஸ்டல் கட்டிடத்தின் சுவரில் வாஷ் பேசின் பீங்கான்களின் மேல் ஒட்டியிருக்கும் காகிதங்கள் உரிக்கவில்லை. பாத்ரூம்களில் இன்னும் முழுக் குழாய்கள் வைக்கவில்லை. எல்லாமே பாதிப் பாதி. இங்கே கட்டிட வேலைக்காரர்களைத் தவிர வேறு யாரும் வர வாய்ப்பில்லை.

கோவிந்த ராவ் மூன்றாம் மாடியில் ஒரு கோடியில் போய் லாண்டிங் போன்ற பகுதியில் நின்றுகொண்டு, ''வந்து பாரு'' என்று சைகை செய்தான். கீழே காட்டினான்.

அவனை மெல்ல அணுகியபோது, ஒரு கட்டிட வேலைக்கார இளைஞன், ஒரு சித்தாள் பெண்ணை பாத்-

ரும் மூலையில் மடக்கியிருந்தான். அந்தப் பெண் கண்ணை மூடிக்கொண்டு, ''யார் யாரோ வாராங்க, வாங்க, தோப்பாண்டை போயிரலாம்.''

''இங்க யாரும் வர மாட்டாங்க ''

கோவிந்த ராவ் மிகவும் மவுனமாக, மிகவும் சுவாரஸ்யமாக அதைக் கவனித்துக்கொண்டிருந்தான். நடராஜனின் முகத்தை வாங்கிக்கொண்டு இன்னும் நன்றாகத் தெரிகிற கோணத்துக்குத் திருப்ப, சித்தாள் சித்தாளியை...

கோவிந்த ராவ் தக்க சமயத்தில் 'திக்ளக்' என்று நெருப்புக் குச்சி கிழிக்கிறாற் போலச் சப்தமிட்டான்.

அவர்கள் இருவரும் எந்தப் பக்கத்திலிருந்து சப்தம் வருகிறது என்று தெரியாமல் சட்டென்று பதறிப் போய், அந்தப் பெண் அத்தனையையும் வாரிச் சுருட்டிக் கொண்டு படிகளை நான்கு நான்காகத் தாவி ஓடியே போய்விட்டாள்.

''த பாரு! யாருமில்லை! யாருமில்லை!'' என்று காதலன் பட்டை டிராயருடன் வெளியே வந்து அவளைத் துரத்துவதற்குள் அவள் படியிறங்கி ரெயில்வே ஸ்டேஷன் வரை போய்விட்டாள் கோவிந்த ராவ் சப்தமில்லாமல் சிரித்தான். இருவரும் படியிறங்கி கட்டிடத்தை விட்டு வெளியே வர,

''எங்க கூடச் சேர்ந்தா இந்தமாதிரிப் பார்க்கலாம். எனக்குக் கல்யாணம் ஆயிருச்சு. எல்லாம் பார்த்தாச்சு. பொண் கொளந்தை இருக்கு. கனகதுர்க்கான்னு பேரு. நான் எல்லாம் பத்தொம்பது வயசில பாத்தாச்சு. நீ பாத்திருக்கியா?''

''இல்லை'' என்றான் தயக்கத்துடன். இப்படியா இருக்கும்!

''ஏன் கை நடுங்குது? தள்ளிட்டுப் போனது என் ரூம்லருந்தே தெரிஞ்சுது. பாவம் அவங்க. பாதில நிறுத்திட்டான். டான்ஸ் வரியா?"

''டான்ஸ்?''

''அடுத்த வாரம் எக்மோர் ரெயில்வே இன்ஸ்டிட்யூட்ல. ஒரு ஆளுக்குப் பத்து ரூபா எண்ட்ரன்ஸ். பேப்பர் பார்க்கலையா? பால் டான்ஸ்!''

''எனக்கு அதெல்லாம் வேண்டாம் கோவிந்தராவ்!"

''பணம் அப்புறம் பார்க்கலாம். கம்பெனி ஈஸ் இம்பார்ட்டெண்ட். நீ வா! தமாஷா!''

கோவிந்த ராவ் போகிற போக்கில் அய்யர் டப்பாவில் ஒரு சோப்புப் பெட்டி, ஹேர் ஆயில், சீப்பு, ஷூலேஸ் என்று வாங்கிக்கொண்டு ஒரு பாக்கெட் சாக்லேட் நடராஜனுக்கு வாங்கிக் கொடுத்தான். ''ரூமுக்கு வா, சென்குப்தாவைப் பத்திச் சொல்றேன்'' என்றான். எப்போது என்று சொல்லவில்லை. சென்குப்தா என்று அவன் சொன்னது மாதவியைப் பற்றித்தான் இருக்க வேண்டும் எனத் தோன்றியது. ஏனோ அது வயிற்றைச் சங்கடம் பண்ணியது.

அய்யர் வழுக்கைத் தலையைத் தடவி, ''பாத்தா ட்ரான்சிஸ்டர் மாதிரி இருக்குறாரு. நாலு டாட்டர்! என்ன அய்யர்! எனக்கு ஒண்ணு கல்யாணம் பண்ணிக் குடுக்க மாட்ட!''

''போடா போக்கிரி! பழைய பாக்கியைத் தீரு முதல்ல!''

''எங்க போறே நீ! நான் எங்க போறேன்!''

மற்ற மாணவர்கள் ஒவ்வொருவராக அடுத்த வாரம் சேர்ந்துகொள்ள, முதல் வருஷம் துவங்கிவிட,

இரண்டு மூன்று வகுப்புக்கள் நடைபெற்றன. அதிகம் உற்சாகமில்லை. எல்லா மாணவர்களும் அட்மிட் ஆகும் வரை எதுவும் சீரியஸாக எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று எலக்ட்ரிக்கல் லெக்சரரே சொல்ல, அவருக்குக் கை நடுங்கிக்கொண்டிருந்ததைக் கவனித்தான். லைப்ரரியில் ஒருமுறை ப்ரொபஸர் சென்குப்தாவைச் சந்தித்தான். ஏழெட்டுப் புத்தகங்களை ரெஃபரன்ஸிலிருந்து எடுத்து மேசை மேல் வைத்துக் குறிப்புக்கள் எடுத்துக்கொண்டிருந்தார் "குட் மார்னிங் ஸார்" என்றதற்கு அவனை நிமிர்ந்து பார்த்து, "மார்னிங். டூ மி எ ஃபேவர் வாட்ஸ் யூர் நேம்?"

"நடராஜன் ஸார்."

"இந்தக் கவரை வீட்டுக்குப் போய் மாதவியிடம் கொடுத்துவிடு. நல்ல பையன்" என்றார் ஆங்கிலத்தில். நடராஜன் அதை வாங்கிக்கொண்டு ப்ரொபஸர் வீட்டுக்குச் சென்று அதன் பித்தானை அழுத்தியபோது ஒரு மாதிரி உடல் பூராப் பூச்சி பறக்கிறாற்போல இருந்தது.

கதவைத் திறந்து மாதவியின் புன்னகையை அத்தனை கிட்டத்தில் பார்க்கப் போகிறோம் என்றுதான் இதயம் ஒன்று மூன்று ஐந்து என்று விட்டுவிட்டுத் துடித்தது.

கதவு திறந்து 'எஸ்' என்றது யாரென்றால், கஜராஜ்!

"லுக், ஹூ இஸ் ஹியர்! இங்க எதுக்குடா வந்த சோமாரி!"

"ப்ரொபஸர்!" அவன் பளபளவென்று தலைவாரிக் கொண்டு முண்டா பனியன் போட்டுக் கொண்டு மீசைக்கு நெய் தடவியிருப்பான்போல ட்ரிம்மாக இருந்தான்.

"இங்க எதுக்குரா வந்த? பீட் இட்! அவுட்!"

''ப்ரொபஸர் வந்து... ப்ரொபஸர் வந்து... இதை வந்து...''

''குடுத்துர்றேன்! நீ ஆஸ்டலுக்குப் போடா. இங்கல்லாம் வரக் கூடாது தெரியுமில்லை?''

''ஹூ இஸ் இட் கஜராஜ்?''

''நோபடி மாதவி. ஜஸ்ட் எ நோபடி! போடா! பீட் இட்!''

அவனிடமிருந்து அந்த உறையைப் பிடுங்கிக் கொண்டு கதவை நடராஜனின் முகத்தின் முன் அறைந்து சாத்துவதற்கு முன் மாதவி உள்ளேயிருந்து வருவது கொஞ்சம் தெரிந்தது.

சற்றுநேரம் வாயிற்படியிலேயே காரணமில்லாமல் காத்திருந்து விட்டு கஜராஜைப் புடனியில் அரிவாளால் சீவ வேண்டும்போல ஆத்திரத்தை விழுங்கிவிட்டு ரூமுக்கு வந்து அம்மாவுக்கும் அப்பாவுக்கும் கடிதம் எழுதினான். மின்னுவைப் பற்றி விசாரிக்கலாம் என்றால் எதாவது தப்பாக எண்ணிக் கொள்வார்கள் என்று தோன்றியது. மின்னுவின் பள்ளிக்கூட அட்ரஸுக்கு எழுதலாம் என்று ஒரு கடிதத்தை ஆரம்பித்தான். மாதவியைப் பற்றிய விஷயங்களை இப்போதே சொல்லலாம். அதற்குமுன் கோவிந்த ராவிடம் சொல்லி விடலாம் என்று தோன்றியது. ராத்திரி அவன் அறைக்குச் சென்று சொன்னதில், கோவிந்த ராவ்,

''த பாரு! கஸராஸை அவ பார்க்கக் கூட மாட்டா. வீட்டு வேலைக்காரன் மாதிரி உபயோகம்! 'கஸராஸு, குளந்தைக்கு பிஸ்கட் வாங்கிட்டு வா, தையக்காரன்கிட்ட போய் ரொவிக்கை வாங்கிட்டு வா!' இப்படி சூ காட்டுவா! இது பைத்தியக்காரன் மாதிரி அலையுது! ப்ரொபஸரே எங்கிட்ட சொல்லியிருக்காரு, கஸராஸு என் மனைவிக்கு ஓடியாடி வேலை செய்யறான்னுட்டு!''

''ப்ரொபஸருக்கு இவம்பேர்ல சந்தேகம் வராதா கோவிந்தா?''

'ப்ஹ்ப்ஹ்' என்று சப்தமில்லாமல் சிரித்துவிட்டு, ''கஸகோல் மேல யாருக்கும் பொறாமை வராது. பேர் தான் கஸ்கோலு! மசாலா கிடையாது.'' ப்ஹ்ப்ஹ் என்று பயங்கரமாக கண்ணில் தண்ணீர் வரச் சிரித்தான்.

''நட்டு! ப்ரொபஸருக்கு யார் மேல சந்தேகம் தெரியுமா?'' இந்தப் பக்கம் ஆந்தப் பக்கம் பார்த்து, ''கீப் எ ஸீக்ரெட்? எம்பேர்ல! அந்தம்மா பயங்கரமா எம்பேர்லதான் லவ்வு. ஒருநா மூன்லைட் டின்னர்ம்போது தனியாக் கூப்ட்டு, 'கோவிந்த் ஐ லவ் யூ'ன்னு சொல்லி யாச்சு!''

''இஸ் இட்?''

''ஸ்ரீசைலம் மல்லிகார்ஜுன சுவாமி சாட்சியா சொல்லியாச்சு.''

''ப்ரொபஸர்?''

''இந்த மாதிரிப் பொண்ணுங்களுக்குப் ப்ரொபஸர் பத்தாது!'' என்றான் கண்ணடித்துவிட்டு. ''டான்ஸுக்குக் கூட்டிட்டுப் போறேன். அங்க பாரு!''

# 6

வாரம் பூராவும் கஜராஜைச் சந்திக்கவில்லை. காண்டீனில் பார்த்தபோது விலகிப் போனான். அய்யர் டப்பாவில் அவன் வருவதைப் பார்த்துப் பின்னால் ஒளிந்து கொண்டான். நடராஜ் பூட்ஸ் மாலை அணிந்து கொண்டு எடுத்த போட்டோவை ஹாஸ்டல் நோட்டீஸ் போர்டில் கஜராஜ் ஒட்டியிருந்தான். அதனடியில், ''வெல்கம் டம்மி'' என்று எழுதியிருந்தது. யாரோ பால்பாயிண்டால் மீசை போட்டிருந்தார்கள்.

புதிய மாணவர்கள் ஒவ்வொருவராகச் சேர்ந்து கொண்டு இப்போது ஏறக்குறைய வகுப்பு முழுமையாகி விட்டது. வடக்கத்திக்காரர்கள் பலர் இருந்தார்கள். சிவராமன் என்றொரு பையன் நடராஜனுடன் கிட்டப் பழகினான். சிவராமனை நடராஜனுக்குப் பிடிக்க வில்லை.

எலக்ட்ரிக்கல் விரிவுரையாளர் சோடை என்பது ஃப்ளெமிங்கின் விதியைச் சொல்லிக் கொடுக்கும்போது அவர் கை நடுங்கியதிலிருந்து தெரிந்து போயிற்று. தெரிந்து கொண்ட உடனே மாணவர்கள் கலாட்டா பண்ண ஆரம்பித்து விட்டார்கள். அசிங்கமாக சப்தங்கள் எழுப்பி, ஒருத்தன் நேராக போர்டுக்கு வந்து விரிவுரை யாளரைக் கட்டி முத்தமே கொடுக்க, ரொம்பப் பாவமாக இருந்தது. ஆகிருதி போதாது. கச்சலாக, கோணல் மாணலாகப் பற்கள். ஒன்றரைக்கண் வேறு. எதற்காக தடித் தடியான மாணவர்களுக்கு சொல்லித்தர வேண்டும்? எதாவது கடன் தொல்லை, சிஸ்டர் கல்யாணம் என்று ஏழ்மைத்தனமான காரணம் இருக்கவேண்டும். "நீங்கள் இம்மாதிரி கூச்சலிட்டால் நான் கட்டாயமாக நிறுத்த வேண்டியிருக்கும்" என்று சிக்கலாக ஆங்கிலத்தில் சொல்ல, வகுப்பு 'ஹோ' என்று சமுத்திர அலைபோல இரைச்சலிட, விரிவுரையாளர் நிசமாகவே கண்ணில் நீர்த்திரையுடன் வகுப்பை விட்டு வெளியே போனது பச்சாத்தாபமாக, பரிதாபமாக இருந்தது. ஸ்டாஃப் ரூமில் போய் ஆறுதல் சொல்ல நினைத்தான்.

வார இறுதியில் கோவிந்த ராவ் எழும்பூர் பால் டான்ஸுக்கு அவனை அழைத்துச் சென்றான். ஸ்டேஷ னிலிருந்து சொற்ப தூரத்தில் அந்த இன்ஸ்டிட்யூட். வாசலில் பச்சை தட்டி கட்டி, நாற்பது வாட் பல்புக்கு ஷேடு கூட இல்லாமல் வெளியே குறிச்சி மேசை போட்டு, 'சாரிட்டி பால்' என்று ஆங்கிலத்தில் துணியில் எழுதி, சோகையாகத் தொங்கிக் கொண்டிருந்தது.

ஒருத்தர் டிக்கெட் கிழித்து விற்றுக் கொண்டிருந்தார். உள்ளே ஹால் காலியாக இருந்தது. ஓரத்தில் ஒரு கிழவர் ஹாட் கவிழ்த்துக் கொண்டு பிச்சை எடுத்துக் கொண்டிருக்க, ''ரொம்ப சீக்கிரமா வந்துட்டம் போல ருக்கே கோவிந்தா.''

''இரு! கூட்டம் அம்மிரும்.''

''எனக்கு டான்ஸே தெரியாது கோவிந்தா.''

''எனக்கு மட்டும் தெரியுமா? ஏதாவது ஆடு! ஹாஃப் பீட்! கிம்மி டூ டிக்கெட்ஸ்!''கோவிந்தராவ் கிராப் வெட்டிக் கொண்டு சலவைக்கல் மாதிரி சவரம் பண்ணியிருந்தான். பளபளவென்று சட்டை போட்டுக் கொண்டிருந்தான். நடராஜனுக்கு டிரஸ் சரியாக இல்லை என்று வெட்கமாக இருந்தது. மேசையருகில் இருந்த ஆங்கிலோ இந்தியர் கழுத்தில் கருப்பு வௌவால் போல டை கட்டியிருந்தார் பச்சைக் கண்களால் பார்த்து இரண்டு டிக்கெட் கிழித்துக் கொடுத்தார். உள் பக்கமாகப் பிடித்துக் கொண்டு பிடித்த சிகரெட்டை நெருப்புப் பெட்டி மேல் அஜாக்கிரதையாக வைத்து, ''வேர் ஆர் தி கர்ள்ஸ்?'' என்றார்.

''வாட் கர்ள்ஸ்?''

''நீ எங்கள் விளம்பரத்தைப் பார்க்கவில்லையா? உடன் பெண்கள் இல்லாமல் உள்ளே அனுமதிக்க மாட்டோம். இரண்டு பெண்களை அழைத்து வாருங்கள். அவர்களுக்கு டிக்கெட் கிடையாது.''

''வா கோவிந்தா! டிக்கெட் பணத்தைத் திருப்பி வாங்கிண்டு சினிமா போயிடலாம்! எனக்கு டான்ஸ் வராது. இப்ப பொண்ணுக்கு எங்க போறது?''

''இரு ராஸ்கா! அப்படியெல்லாம் விட்ரலாமா ராஸ்கா?'' அவன் கண்கள் உலவின. ஹாட் கிழவன், ''காட் ப்ளெஸ், கிவ் மீ ஃபோர் அன்னாஸ்!'' என்றான்.

கோவிந்த ராவ் அவனிடம் போய் எதோ பேச, அவன் பழுத்த கண்களால் சிரித்து, ''கம் வித் மீ'' என்றான்.

அவன் பின்னே தயங்கிச் செல்ல, சற்று தூரத்தில் இருட்டில் சுவரருகில் இரண்டு பெண்கள் கவுன் அணிந்து சின்ன கைக்குட்டையால் மூக்கைத் துடைத்துக் கொண்டு காத்திருந்தார்கள். கோவிந்த ராவ் அவர்களை தைரிய மாக அணுகுமுன் கிழவனுக்குப் பைசா கொடுத்தான். நடராஜன் கிழவனிடத்திலேயே காத்திருந்தான். அவன் பழுப்பாகச் சிரித்து, ''ஹௌ எபவுட் யூ சன்?'' என்றான். பைக்குள்ளிருந்து ஒரு அணிலை எடுத்துக் காட்டி கண் கலங்கச் சிரித்தான். இதற்குள் கோவிந்த ராவ் அந்த இரண்டையும் அழைத்து வந்து விட்டான். ''ரீட்டா, திஸ் இஸ் நட்ராஸ். நட்டு, இவதான் குட்டி, உன் பார்ட்னர்!''

அந்தப் பெண் நடராஜன் அருகில் வந்து நின்று கொண்டு கைக்குட்டையை மூக்கில் துருத்திக் கொண் டாள். ரொம்பச் சின்னதாக இருந்தாள். கொஞ்சூண்டு மார்பு இருந்தது. ''அண்டர் ஏஜ் (Under age) மாலை கவுன் போட்டு கொண்டாந்துட்டான் கெயவன்! பர வால்லை. நல்ல தெடவு ஒண்ணும் பண்ணாது'' என்றான் கோவிந்தா.

நடராஜன் தனக்கு அளிக்கப்பட்டிருந்த பெண்ணைப் பார்த்தான். தக்காளிச் சிவப்பில் லிப்ஸ்டிக். திட்டுத் திட்டாக பவுடர் ''யூ டான்ஸ்?''

''ம்ஹூம்'' என்றான்.

''ஸும்மா அதுக்கூட எல்லாம் பேசாதே. ஒவ் வொண்ணத்துக்கும் ரூபா கேட்டா தராதே. ரூபா தனியா குடுத்தாச்சு.'' நடராஜனுக்கு இந்தப் பெண்ணை வைத் துக்கொண்டு என்ன செய்யவேண்டும் என்பது மர்மமாக இருந்தது.

கூட்டம் சேர ஆரம்பித்ததும் கோவிந்த ராவ் அவர்களை அழைத்துக் கொண்டு உள்ளே செல்ல, மரப் பலகை வேய்ந்த தரையில் எல்லாரும் நடப்பது கேட்டது. கோடியில் ஒரு வாத்திய கோஷ்டி உறையை உருவித் தயார் பண்ணிக் கொண்டிருந்தார்கள். ஸாக்ஸபோனைப் பெட்டியிலிருந்து விடுவித்து முழுசு பண்ணி, 'பீப்' என்று ஊதிப் பார்க்க, கருப்புக் கோட்டுக்காரன் மைக்கை, ''ஹலோ செக்! ஹலோ செக்!'' என்று சோதித்தான். சுமார் பத்துப் பதினைந்து பேர் சேர்ந்ததும் ஜிம் ரீவ்ஸ பாட்டு ஒன்றை வாசிக்க, ஒரே ஒரு ஜோடி ஒருத்தருடன் ஒருத்தர் பசை போட்டு ஒட்டிக் கொண்டு ஆடத் துவங்க, நடராஜன் கையை அந்தப் பெண் பிடித்துக் கொண்ட போது உள்ளுக்குள் புளகாங்கிதம், மின்சாரம் கலந்து பரவியது. அந்தப் பெண், ''கெட் மி எ ட்ரிங்க்'' என்றது.

நடராஜன் மின்னுவுக்கு இத்தனை விரைவில் துரோகம் பண்ணுவோம் என்று எதிர்பார்க்கவில்லை. அவள் கை அப்படி ஒன்றும் பட்டாக இல்லை. மின்னு கையோடு ஒப்பிட்டால் ஏதோ கொத்தவரங்காய் வற்றல் போலத்தான். இருந்தும் அதற்கு ஒரு ஆரஞ்சு பானம் வாங்கிக் கொடுக்க, வாத்ய கோஷ்டி இப்போது 'ராக் அரவுண்ட் தி க்ளாக்' வாசிக்கத் துவங்க, கோவிந்த ராவ் கொடுத்த காசுக்கு தக்கா புக்கா என்று ஒரு விதியும் இல்லாமல் ஆடினான். அந்த ஜோடி நடனப் பள்ளி ஆசிரியர்கள் போலும். ஒருவரை ஒருவர் சுழற்றி சுழற்றிப் பந்தாடுவதுபோல ஆட, கோவிந்த ராவும் தன் நடன முயற்சிகளைப் புறக்கணித்துவிட்டு வட்டமாக எல்லாரும் சேர்ந்து கொள்ள, நட்ட நடுவே அவர்களை ஆடவிட்டுக் கை தட்டினார்கள்.

நடராஜனை அந்தப் பெண் துறந்துவிட்டு மற்றொரு வனிடம் சிரித்துப் பேசிக் கொண்டு காணாமற் போய் விட்டது. நடராஜன் ஒதுங்கிக் கொண்டு அவர்கள் ஆடிய

பைத்தியக்கார நடனத்தை சுவாரஸ்யமில்லாமல் கவனித்துக் கொண்டிருந்தான். இப்போது பேருக்குப் பேர் வேறு வேறு லயத்தில் ஆடினார்கள். எவ்விதமான ஒற்றுமையும் இல்லை. ஒரு கட்டத்தில் ஒருவர் பின் ஒருவராக ரயில் வண்டிபோல ஓடினார்கள். பலர் பியர் குடித்தார்கள்.

கோவிந்த ராவ் திடீர் என்று தோன்றி, ''நடராஸா! போலாம் வா, எங்க உம்பொண்ணு? தாரை வாத்துட்டியா?''

கோவிந்த ராவுடன் இருந்த பெண் தள்ளாடிக் கொண்டிருந்தது. ''நான் ரீட்டாவை ராயபுரத்தில் கொண்டு விடவேண்டும். நீ ஹாஸ்டலுக்குப் போ'' என்று சொல்லிவிட்டு ராயபுரத்துக்கு எதிர்த் திசையில் அவளை இருட்டில் அழைத்துக்கொண்டு செல்லும்போது அவள் பிளவுஸை நீக்கி மார்பைப் பிடித்துப் பார்க்க ரொம்ப முயன்றான். அந்தப் பெண் இதற்கெல்லாம் பழகினவள் போல, ''லேட்டர் கோவிந்தா, லேட்டர்'' என்றாள்.

நடராஜன் கடைசி ரெயில் கடைசி கம்பார்ட்மெண்ட்டில் ஏறிக்கொண்ட போது, கோவிந்த ராவ் எப்படித் திரும்பி வரப்போகிறான் என்று யோசித்தான். பொறாமையாக இருந்தது. தன் கூட வந்த பெண்ணைச் சிதறிவிடாமல் கெட்ட காரியங்கள் செய்திருக்கலாம் என்று ஆதங்கமாக இருந்தது. அளவு கொஞ்சமாக இருந்தாலும் பெண் பெண்தானே! இருந்தும் நல்ல வேளை, கற்பை இழக்கவில்லை என்றும் எண்ணினான்.

## 7

காலையில் ஒர்க் ஷாப் கிளாஸிற்குக் கிளம்பும் போது கோவிந்த ராவ் சுத்தமாகக் குளித்துவிட்டு, தலை சீவிக்கொண்டு, ஏதோ பரிசப் பொருள்போல 'நீ கோஸம்' என்றெல்லாம் பாடிக்கொண்டு செல்வதைப் பார்த்தான்.

''ஹாய் ராஸ்ஸா! வந்து சேர்ந்தியா?'' இவன் எப்படி கடைசி ட்ரெயினுக்கு அப்புறம் எக்மோரிலிருந்து திரும்பி வந்திருக்க முடியும் என்று வியப்பாக இருந்தது. ''அப் புறம் என்ன ஆச்சு கோவிந்தா?'' என்றான்.

''அதெல்லாம் இப்ப சொல்ல மாட்டேன். எனக்கு கிளாஸ் இருக்குது.''

மாலை பப்புவுடன் லைப்ரரிக்குப் போனபோது சென் குப்தாவை மறுபடி பார்த்தான். பப்பு அவரருகில் சென்று சந்தேகம் கேட்டான். நடராஜன் உட்கார்ந்திருக்க, அவர் பப்புவுக்கு விவரமாக சொல்லித் தர, நடராஜன், சென்குப்தாவின் அகலமான நெற்றியையும் பட்டைக் கண்ணாடியையும் ஜிப்பா போன்ற முரட்டுச் சட்டையை யும், 'நோ ஸ்மோக்கிங்'கைக் கவனிக்காமல் கையைச் சொடுக்கிக் குடிக்கும் சார்மினாரையும், தீவிரமான கையசைவுகளுடன் அவர் அழுத்தமாகப் பேசுவதையும் கவனித்தான். முரட்டுத்தனமான விதிமுறையில் ப்ரொப ஸர் அழகாக இருப்பதாகத் தோன்றியது.

''நீ உன்னை வெற்றி கண்டால் நீயே உனக்கு உறவு. நீ உன்னை வெற்றி காண முடியவில்லை என் றால் நீயே உனக்கு சத்துரு.''

'பந்துராத்மனஸ்தஸ்ய
யேனாமைவாத்மனா ஜித
அனாத்மனஸ்துசத்ருத்வே
வர்தேதாத்மைவ சத்ருவத்.'

பப்புவின் பாடத்தைத் தவிர மற்ற விஷயங்கள் எல்லாம் சொல்லித் தருகிறார் போல இருந்தது ஒரு சிகரெட்டிலிருந்து மற்றதற்கு உயிர் கொடுத்துக் கொண்டு, 'கியர்காட் எக்ஸிஸ்டென்ஷியலிஸம்' என் றெல்லாம் பேசினவர் பளபளவென்று புத்தகங்களையும் ஒழுங்காகப் படிப்பவர்போல இருந்தது. எதற்காகவோ அவர்மேல் பாசம் கலந்த தாபம் ஏற்பட்டது. ஒருமுறை

நடராஜனைக் கண்ணாடி வழியாக, பெரிசாக, ஆமோதிக்கிறானா என்று பார்த்தார். மாதவியின் கணவர் என்று அவரை அங்கீகரிப்பது சிரமமாக இருந்தது. எழுந்து மர நிழலில் பாடம் சொல்லிக்கொண்டே அரிஸ்டாட்டில்போல நடந்தார். ஹாஸ்டல் வாசல் வரை வந்து அவர் தன் வீட்டுப் பக்கம் திரும்பும்போது, கஜராஜ் அவர் வீட்டை விட்டு வெளியே வந்து, ''குட் ஈவினிங் ஸார்'' என்றான். வாயிற் படியில் பதுமைபோல மாதவி நின்று கொண்டிருந்தாள்.

''கொஜொரோஜ்! வாட் ஆர் யூ டூயிங் ஹியர்? கோ டு யுவர் ரூம்!''

மாதவி என்னவோ அவரிடம் பெங்காலியில் சொல்ல, அவளருகில் சென்று, ''இதோ பார். இவனும் எனக்கு உறவுதான். இந்த தேவதை போன்ற பெண்மணியும் எனக்கு ஒரு உறவு. என் உடலுக்குத்தான் உறவு. ஆத்மாவுக்கு அல்ல; ஆத்மா ரொம்பத் தனிமையானது.''

''தத்!'' என்று அவர் மார்பில் செல்லமாகக் குத்தினாள் மாதவி. ப்ரொபஸருடைய அறிவுப் பிரகாசத்தின் முன் மாதவி, கஜராஜ் எல்லாமே அற்பம் என்று பின்னால் பப்பு மாடிப்படி ஏறும்போது சொன்னான்.

''இவன்பாட்டுக்கு சளைக்காம அவ பின்னாலயே சுத்தறாண்டா! ப்ரொபஸர் கோவம் தெரியாது. அவனுக்குக் கண் வெச்சிருக்கார் கத்தியால் குத்தக்கூடத் தயங்க மாட்டார்.''

''மாதவி இதுக்கெல்லாம் எப்படி அனுமதிக்கிறா?''

''அட, நீ கூடப் பேர் சொல்லிக் கூப்பிட ஆரம்பிச்சுட்டியா? சபாஷ், உருப்பட்டுருவே! மாதவி ஒரு நிம்ஃபோ!'' என்றான்.

புரியலை.''

''புரியாம இருக்கிற வரைக்கும் நல்லதுதான். த பாரு, ஹாஸ்டல் பூரா காஞ்ச பசங்க! இந்தப் பசங்க உருப்படுவாங்களா சொல்லு! இவங்க கூட சேரவே சேராதே. ஒரு நாள் இல்லை ஒருநாள், இந்த கஜராஜ், பார்த்திபன், ஏன், உன் கோவிந்தராவ் எல்லாரையும் சுடணும். செக்ஸ், செக்ஸ்! அதுவும் ராயனுக்குக் கல்யாணம் ஆயி குழந்தை இருக்கு! இதைப் போலக் கச்சடா ஹாஸ்டல் கிடையாது. நடுநடுவே குப்தா மாதிரி ஒரு ஜீனியஸும் இருக்கறதாலதான் நான் தாக்குப் பிடிக்கிறேன். எவன் கிட்டயும் சேராதே.''

நடராஜ் குழப்பமாக அறைக்குத் திரும்பினான்.

கிரிக்கெட் அணியைத் தேர்வு பண்ணுவதற்கு வலைக்கு வருமாறு நோட்டீஸ் ஒட்டியிருந்தது. கோவிந்தராவ் நடராஜனை, ''கிரிக்கெட் ஆடுவாயா?'' என்று கேட்டான்.

''பரவாயில்லை வந்து பாரு. ரிஸர்வா போடலாம். இல்லை அம்பயரா வா. ரூல்ஸ் தெரியுமில்லை?''

''சுமாராத் தெரியும்'' என்றான்.

''போதும் வந்துரு.

நெட்ஸில் கஜராஜ்தான் காப்டனாம். ஃபாஸ்ட் போலராம். கோல் போஸ்டிலிருந்து ஓடி வந்து காலின் கீழேயே குத்திக்கொண்டு ஷார்ட் பிட்ச் போட்டான். கோவிந்த ராவ் அதை ஹாஸ்டலே எதிரொலிக்கும்படி பளார் என்று ஏறக்குறைய சிக்ஸராகத் தூக்கியது மிக உற்சாகமாக இருந்தது. கோவிந்த ராவுக்குத் தெரியாத ஆட்டம் ஏதாவது இருக்குமா என்று தெரியவில்லை எந்த ஆட்டம் ஆடினாலும் கொஞ்சம் கிரேஸ், நளினம் இருந்தது. ஒரு 'கோவிந்த ராவ் டச்.'

பாலிடெக்னிக்குடன் ராயபுரத்தில் மாட்ச். மண்ணடி மைதானத்தில் ஆட்டம். கல்லூரியில் பஸ் கொடுத்திருந்

தார்கள். பஸ்ஸில் பதினைந்து பேர் கேன்டீனிலிருந்து லஞ்ச்செல்லாம் கட்டிக்கொண்டு மந்தாரை இலைகளும் 'கிட் பேக்'களுமாகப் புறப்பட்டுச் செல்வது உற்சாகமாக இருந்தது.

பார்த்திபன் டீமில் இல்லை. இருந்தாலும் கஜராஜுடன் வந்திருந்தான். பிரயாணம் முழுவதும் இரண்டு பேரும் ரகசியமாகப் பேசிக் கொண்டிருந்ததை நடராஜன் கவனித்தான். கோவிந்த ராவ் சுரத்தாகப் பாடிக் கொண்டே வந்தான். ரீட்டாவை அன்றைக்கு அப்புறம் என்ன செய்தான் என்று தகவல் கேட்காமலேயே விவரித் தான்.

''சரியான ராயபுரம் கிராக்கி நடராஜு. அங்க வா, அங்க வாங்குது. பார்த்தேன். எக்மோர்லருந்து ராயபுரமா? நான் லாட்ஜ் போலாம்ங்கறேன். ம்ஹூம் மாட்டங்குது. அப்புறம் பார்த்தேன். சர்ச்சு இருக்கு துல்லை. அதும் பின்னால ஸெமெட்டரி இருக்குதில்லை, அங்க சுவர் ஏறிக் குதிச்சு பீட்டர் சந்த்ரைய்யான்னு ஒருத்தர் சமாதி மேல வெச்சு ரீட்டாவைப் போட்டாச்சு! 'பாக்கெட்வேணும்,பாக்கெட்டில்லாம ஆவுறதில்லை'ன்னு சொல்லிச்சா, அதுக்கு சென்ட்ரல் போயாவணும். பைக்குள்ள கொஞ்சம் பவுடர் வச்சிருந்தனா... அத்தை எடுத்து...'' கோவிந்த ராவ் மேற்கொண்டு சொல்ல முயற்சித்தாலும் அவன் கண் கலங்கிய சிரிப்பு அதற்கு இடையூறாக இருந்தது.

அம்பயர் வரவில்லையென்று நடராஜனையே அம்பய ராகப் போட்டார்கள். டாஸ் ஜெயித்து கஜராஜ் ஏதோ ரிச்சி பெனோ மாதிரி பிட்சைப் பார்த்துவிட்டு பாட்டிங் தேர்ந்தெடுத்தான். கோவிந்த ராவும், கஜராஜுவும்தான் ஓப்பனிங். நடராஜன் அம்பயராக நுழைவதற்கு முன் ஆறு கற்கள் பொறுக்கிக் கொண்டான். இவர்கள் ஸைடு போலர் தப்படி தப்படியாக காம்பவுண்டு சுவர் வரை

அளந்து கொண்டான். அங்கேயிருந்து ஓடிவந்து ரொம்ப வேகமாகப் போடுவான் போலும். விக்கெட் கீப்பரும் தூரத்தில் நிற்க, மூன்று ஸ்லிப்புகள். அமர்க்களமாக ஏதோ டெஸ்ட் மாட்ச் போல நின்றார்கள். பந்தை கோவிந்த ராவ் தொட்ட உடனே பீறிட்டுக் கொண்டு பவுண்டரிக்கு விரைந்தது. ஃபீல்டு அட்ஜஸ்ட் பண்ணி மறுபடி போட்டதில் மறுபடி ஒரு பவுண்டரி அடித்தான். மூன்றாவது பந்தில் ஒரு சிங்கிள் தொட்டுவிட்டு கஜராஜுக்கு ஆட்டம் கொடுத்தான். கஜராஜுக்குப் போட்ட முதல்பந்து பிரமாதமான பந்து. சக்கென்று உள்ளே புகுந்தது. கஜராஜ் அதைத் தடுக்கும் வகையில் ஸ்டம்புக்கு நேர் எதிரே பாக் ஃபுட்டில் பாடுகளில் வாங்கிக் கொண்டான். சந்தேகமில்லாமல் 'எல்.பி. டபிள்யூ.' மண்ணடி, ராயபுரமே ''ஹௌ ஸாட்'' என்று அலறியது! நடராஜன் கொஞ்சம் தயங்கி மனச்சாட்சி உறுத்த, கை தூக்கிவிட்டான்.

சற்று நேரம் நின்று நிதானமாக கண் சிவக்கப் பார்த்துவிட்டு நடந்து செல்கையில், கஜராஜ் நடராஜனைப் பார்த்து, ''வெளியே வருவல்ல, பார்த்துக்கலாம்'' என்றான்.

ரன்னராக இருந்த கோவிந்த ராவ், ''ப்ளம் எல்பி! கவலைப்படாதே'' என்றான். கோவிந்த ராவ் 5 நாட் அவுட் எடுத்தும் அவர்கள் காலேஜ் தோற்றுப் போய்விட்டது. எதிர்க் கட்சியினர் மூன்று விக்கெட் நஷ்டத்தில் கொடுக்கப்பட்ட ரன்களை எடுத்துவிட்டார்கள்.

வேனில் ஏறினதும் கஜராஜ் நடராஜனின் காலரைக் கொத்தாகப் பிடித்தான்.

# 8

கஜராஜ் திரும்பச் செல்லும்போது வழி பூராவும் நடராஜனைப் பலவிதங்களில் சீண்டிக்கொண்டே வந்தான். கோவிந்த ராவ் எந்தவிதத்திலும் அவனுக்குப் பக்கபலம் தராதது மிகவும் கொடுமையாக இருந்தது. ஒரே ஒரு தடவை, "கோலு அது ப்ளம் எல்பிம்மா. அவனைப் போட்டு சத்தாய்க்காதே" என்றான். என்ன தான் எல்பியாக இருந்தாலும் முதல் பாலிலேயே அவுட் கொடுத்தது தப்பு என்றார்கள். இவர்களுக்கெல்லாம் தர்ம நியாயம், மனசாட்சி இருப்பதாகத் தெரியவில்லை.

ஒரு அளவுக்கு மேல் கஜராஜ் அடிப்பது தாங்க முடியாமல் ஒரு சிக்னலின்போது வேனைவிட்டு இறங்கிக் கொண்டு விட்டான். அங்கிருந்து மின்சார ரெயில் ஸ்டேஷனுக்கு நடக்க வேண்டியிருந்தது. பஸ்ஸுக்குச் சில்லரையில்லை. டிபன் வாங்கவோ, இடைப்பட்ட இரும்புக் கடையில் கஜராஜைக் கொன்று துண்டம் போடு வதற்கு அரிவாள் வாங்கவோ காசில்லை. ரயில் பாஸ் இருந்ததால்தான் ஆஸ்டலுக்குத் திரும்பி வர முடிந்தது.

ரெயிலிலேயே இன்று கஜராஜுடன் ஒன்றில்லை ஒன்று பார்த்து விடுவது என்று அசட்டுத் தைரியம் வந்தது. நேராக மெஸ்ஸுக்குச் சென்று சாப்பிட்டான்.

"என்ன நடராஜு, சொண்ட்டியா அவுட் கொடுத்து நம்ம டீமைத் தோக்க வெச்சுட்டியாமே? உன்னைப் போல துரோகி உலகத்தில உண்டா?" என்று பார்த்திபன் கேட்டான்.

"பார்த்திபன், உன்னை அப்புறம் கவனிச்சுக்கறேன். கஜராஜ் வந்தாச்சா?" என்றான்.

"வந்தாச்சு. ரூம்ல இருக்கான். உன்னைப் போலக் கக்கூஸு இருப்பானான்னு கேட்டான். கிடையா துன்னேன்."

''போறேன், போறேன்'' என்றான். ஜுரம் போலத் தான் இருந்தது. சாப்பிட்டதும் நேராக கஜராஜின் அறைக்குச் சென்று கதவைத் தட்டினான். 'கமின்' என்று சப்தம் கேட்க, கதவு தட்டினதிலேயே திறந்து கொண்டது. யாரும் நிமிர்ந்து பார்க்கவில்லை. நான்கு பேர் லுங்கி கட்டிக்கொண்டு புகைத்துக் கொண்டிருந்தார்கள். நடுவே ஒரு மெழுகுவத்தி எரிந்து கொண்டிருந்தது. கீழே கிடந்த சிகரெட் பாக்கெட்டில் சில சிகரெட்டுகள் உதிர்ந்து இருந்தன.

''கஜராஜ், உங்கிட்டே பேசணும்.''

கஜராஜ் நிமிர்ந்து பார்த்தான். ரேடியோவில் 'சல்தே சல்தே' கேட்டுக் கொண்டிருந்தது.

''கஜராஜ் உங்கிட்ட பேசணும்.''

அவன், ''கொஞ்சம் பொறுத்துப் பேசு'' என்றான்.

''தனியா

''என்னடா சொல்றான்?'' என்றான் சற்றுப் பொறுத்து. நான்கு பேரும் மார்பில் சட்டை போடாமல் சதிக்கூட்டம் போல உட்கார்ந்திருக்க, யாரும் தீர்மான மாக நிதானமாகப் பதில் சொல்லக்கூடிய நிலையில் இல்லை. ''தனியா வரணும், தனியா வரணும்'' என்று எல்லோரும் சுற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''கஜராஜ், நீ மட்டும் ஒரு ஆம்பிளைன்னா என்னை அரை மணியில் லான்ல வந்து பார்த்துரு. இல்லைன்னா நீ ஆம்பிளை இல்லை!''

''சரி'' என்று யாரோ பதில் சொல்ல, சற்று நேரம் திகைத்து நின்று கொண்டிருந்தான். அவர்கள் பிடிக்கும் சிகரெட் வாசனை வேறு மாதிரியாக இருந்தது.

கோவிந்த ராவின் அறைக்குப் போன போது அவன் கண்ணாடியைப் பார்த்துக் கொண்டு அதனருகில் பல்பு

வைத்து, ''கிருஷ்ணம் ராஸு மாரி இல்லை நானு?'' என்றான்.

''கோவிந்தா, நீ என் ப்ரெண்டுன்னு நினைச்சேன். நீ என்னை வேன்ல சப்போர்ட் பண்ணாதது ரொம்ப வருத்தமா இருந்தது. என்ன அடி அடிச்சான் பாத்தியா?''

''ஸாரிம்மா. ரொம்ப டயர்டா இருந்தேம்மா.''

''கோவிந்தா, இன்னிக்கு ராத்திரிக்குள்ள பிரச்னை தீர்ந்துரும்.''

''யென்ன?''

''கஜராஜ் விவகாரம். நேரா அவன் ரூமுக்குப் போயி அவனை அரை மணில லானுக்கு வரச் சொல்லி யிருக்கேன்.''

''எதுக்கு?''

''ஒண்டிக்கு ஒண்டி ஃபைட்டு. செத்தாலும் சரி. எனக்கு அவம்மேல இருக்கற வெறுப்பில, விரோதத்தில அதுவே எனக்கு ஒரு ஊட்டம், பலம்!''

கோவிந்த ராவ் முன்பக்கத்து நரை மயிரைத் தனியாகப் பிரித்துப் பிடுங்கி, ''அவன் எங்கடா வரப் போறான்? அவங்கள்ளாம் கஞ்சா அடிச்சுக்கிட்டு இருக் கான்க. அடிச்சிட்டு சன்வி சாப்ட்டு வர ராத்திரி பதினொண்ணு பன்னண்டு ஆயிரும்.''

''அப்ப அவங்க குடிச்சிட்டிருந்தது கஞ்சாவா? அதான் ஒருமாதிரி வாசனை!''

''தூளு நமக்கு ஒத்து வராது. உடம்பெல்லாம் பாயில்ஸ் வந்துரும்.''

கோவிந்த ராவின் அறையைவிட்டுத் திரும்பும்போது நடராஜன் யோசித்தான். கஞ்சா பிடிப்பது குற்றம்.

ஆஸ்டல் விதிகளின்படியும் குற்றம். போலீஸ் சட்டத்தின் படியும் குற்றம். கஜராஜ் அறையில் இந்த அக்கிரமம் நடக்கிறது. இதை யாரும் கண்டுகொள்ளாமல் இருக்கிறார்களே!

நடராஜன் ப்ரொபஸர் சென்குப்தாவின் வீட்டுக் கதவைத் தட்டினான். உள்ளே நாய் குரைப்பது கேட்டது. நடராஜனுக்குக் கையெல்லாம் வியர்த்தது. இப்போதே ஓடிப்போய் விடலாம் என்று தோன்றியது. தான் செய்வது ரொம்ப அபாயகரமான காரியம், திரும்பி விடலாம் என்று தீர்மானிப்பதற்குள் மாதவி சென்குப்தா கதவைத் திறந்தாள். அவளருகே சடைநாய் வாலை ஆட்டிக் கொண்டிருந்தது. அவ்வப்போது சாஸ்திரத் துக்குக் குரைக்க, ''ரோமு சுப்'' என்றாள். அவள் மெல்லிய நீலத்தில் ஹவுஸ் கோட் போல அணிந்திருந் தாள். படிப்பு விளக்கின் அருகே பெண் வீட்டுப் பாடம் செய்து கொண்டிருக்க மாதவி புன்னகைத்து, ''ப்ரொ பஸரைப் பார்க்க வேண்டுமா உனக்கு?'' என்றாள் ஆங்கிலத்தில்.

''ஆம்'' என்று தடுமாறினான்.

மறுபடி புன்னகைத்து, ''உள்ளே வா, உட்கார்'' என்றாள்.

தயக்கத்துடன் உள்ளே நுழைந்தான்.

''பார்த்தோ, ஸம் ஒன் டு ஸி யூ!''

''கமிங்'' என்று மாடியிலிருந்து பதில் கேட்டது. உட்கார, குட்டிப் பெண் அவனை நிமிர்ந்து பார்த்து விட்டு மறுபடி தன் பாடத்தில் ஆழ்ந்தது.

எதிரே மாதவி உட்கார்ந்தாள். உயரமான படிப்பு விளக்கின் ஷேடு கொடுத்த சிவப்புப் பழம் போன்ற வெளிச்சத்தில் சித்திரம் போல இருந்தாள். அவள்

சிரித்தால் கன்னம் லேசாகக் குழைவதை முதலில் கவனித்தான்.

''வாட்ஸ் யூர் நேம்?''

''நடராஜ்.''

''நடராஜ்—கஜராஜ்!'' என்று சிரித்தாள். ''வேர் இஸ் கஜராஜ்?''

''டோன்ட் நோ மேடம்.''

ப்ரொபஸர் சென்குப்தா நைட்கவுனும் பைப்புமாக வந்து, ''வாட்ஸிட் பாய்?'' என்றார்.

நடராஜன் தயக்கத்துடன் மாதவியைப் பார்க்க, அவள் உணர்ந்து கொண்டு, ''ஐ'ல் கோ'' என்று புறப்பட்டாள்.

''ஸார், நம் ஆஸ்டலில் மோசமான விஷயம் ஒன்று இப்போது நிகழ்ந்து கொண்டிருக்கிறது.''

அவர் அவனைத் துளைப்பது போல் பார்த்து, ''என்ன?'' என்றார்.

''கஞ்சா புகைத்துக் கொண்டிருக்கிறார்கள் ஒரு அறையில்.''

''இப்போதா?''

''ஆம்.''

''யார்?''

''கஜராஜுடன் நான்கு பேர்.''

''ஏன், உனக்குக் கொடுக்க மாட்டேன் என்று சொல்லி விட்டார்களா? அதனால்தான் என்னிடம் புகார் சொல்ல வந்தாயா?'' என்று சிரித்தார்.

''இல்லை ஸார். இது தப்பு என்று.''

''தப்புக்கள் எல்லாவற்றையும் திருத்துவது முடியாது. இருந்தும் நீ என்னிடம் வந்து சொன்னதற்கு நான் வந்து பார்த்தே ஆகவேண்டும். எந்த ரூம் சொன்னாய்? நம்பர் என்ன?''

''கஜராஜ் ரூம் ஸார்.''

''நம்பரை சொல்லித் தொலை. இல்லாவிட்டால் என்கூட வா. மாதவி!'' என்று விளித்து அவர்கள் பாஷையில் ஏதோ சொல்ல, மாதவி உள்ளேயிருந்து தோன்றி நடராஜனை நோக்கிப் புன்னகைத்து, ''குட் பை'' என்றாள்.

உடல் பூராவும் உதறல் எடுத்தது. ப்ரொபஸர் அனாவசியமாக இரைந்து பேசிக்கொண்டே வந்தார். அவர் பேச்சுக்குரல் கேட்டே அவர்கள் எல்லாரும் எலி போல ஓடி ஒளிந்து கொண்டு விடுவார்கள்.

கஜராஜின் அறைக்குச் சென்றதும் பேசிக்கொண்டே கதவைத் தட்டினார். கதவு திறந்து, உள்ளே ஒரு பையன் உட்கார்ந்திருந்தான். ''வேர் இஸ் கொஜராஜ்?''

''ஸார், மெஸ்ஸுக்குப் போயிருக்கிறான் ஸார்.''

சென்குப்தா மூக்கை உறிஞ்சி உறிஞ்சிப் பார்த்து விட்டு, ''சரி, கஜராஜை நாளைக்கு வந்து என்னைப் பார்க்கச் சொல்'' என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்.

அவர் போனதும் அந்தப் பையன் கையிலிருந்த புத்தகத்தை வீசி எறிந்துவிட்டு நடராஜனை முறைத்துப் பார்த்தான்.

''உன்னைப் போல பேமானி இருக்க முடியாது. கஜு வெளிய வா'' என்றான்.

# 9

ராத்திரி பதினோரு மணிக்கு மேல் அவர்களுக்கெல்லாம் போதை தீர்ந்துவிட்டது போலும். நடராஜனை வலுக்கட்டாயமாகப் புதிய கட்டிடத்துக்கு அழைத்துக் கொண்டு சென்றார்கள். இருட்டில் யார் யார் என்று கூடத் தெரியவில்லை. பார்த்திபன் குரல் கேட்டது. கஜராஜ் நிச்சயம் இருந்தான். அவன் குரல்தான் ஓங்கிக் கேட்டது. நான்கு பேரா, ஆறு பேரா என்று சொல்ல முடியவில்லை. புதிய கட்டிடத்தின் முடிக்கப்படாத முதல் மாடிக்கு அழைத்துச் சென்று தார் டிரம்போல இருந்ததில் அழுக்குத் தண்ணீரில் முக்கினார்கள்.

கொஞ்ச நேரம் தலையைத் தண்ணீருக்குள் கட்டாயமாக முக்கிப் பிடித்திருந்ததில் மூச்சுத் திணறியது. இன்னும் கொஞ்ச நேரம் தொடர்ந்திருந்தால் செத்துப் போயிருப்பான். சடக்கென்று ஒரு கணத்தில் அப்பா, அம்மா, மின்னு, மாதவி, அவர்கள் வீடு, கோவிந்தராவுடன் சென்ற டான்ஸ் என்று என்னென்னவோ காட்சிகள் தொடர்ந்தாற்போல வர, சாவுக்கு மிக அருகே தலையை வெளியே எடுத்தார்கள். மூச்சு வாங்கி, பெரிசாக வாய் பூராவையும் திறந்து கொண்டு சுவாசித்தான். திட்டக்கூட திராணி இல்லை.

இப்போது பேருக்குப் பேர் அவனை பாஸ்கெட் பால் மேட்ச் மாதிரிப் பந்தாடினார்கள். இவன் அவனிடத்தில் தள்ள, அவன் இன்னொருத்தனிடத்தில் தள்ள, ஒவ்வொரு முறையும் அடித்து, செவிட்டிலோ, தாடையிலோ, மார்பிலோ குத்திவிட்டுத்தான் அனுப்பினார்கள். இருட்டில் ரத்தம் வாய் பூராப் புளித்ததை உணர்ந்தான். ''ப்ளீஸ் விட்டுருங்கடா'' என்றுதான் கேட்க நினைத்தான். பேச வரவில்லை.

''ப்ரொபஸர்கிட்ட கோள் சொல்லுவியா? இந்த வாய்தானே?'' என்று போனஸாக உதடுகளின் மேல் கஜராஜ் அடிக்க, ஒரு பல் பாதியாக உடைந்து அதைத் துப்ப வேண்டியிருந்தது. அதற்கப்புறம் மயக்கம் போலத் தான் உணர்ந்தான். இனிமேல் அடித்தால் பாதகமில்லை என்று தோன்றியது. வலி ஒரு எல்லைக்குமேல் சென்று சிரிப்புக்கூட வந்தது. அவர்கள் அவனை மிதித்துவிட்டு, சரக் சரக்கென்று காலணிகள் ஒலிக்க விலகுவது இங்கிலீஷ் சினிமாவில் பார்த்த மாதிரி இருந்தது. கொஞ்ச நேரம் அப்படியே கிடந்தான். மயக்கம் தெளிந்தது. வலி அதிகப்படியானதாலா, குறைந்ததாலா என்று தெரியவில்லை, எழுந்திருக்க முடிந்தது. மெல்லத் தேய்த்துக்கொண்டே மாடிப் படிகளின் திசையை நோக்கி நகர்ந்தான். 'கோவிந்தா, கோவிந்தா' என்று தன்னால் முடிந்தவரை கத்திப் பார்த்தான். அவனுக்கே கேட்காமல் ஹீனமாக வெளிப்பட்டது சப்தம். காத்திருந்தான். எதிரே ஹாஸ்டலில் பல சன்னல்களில் விளக்கு தெரிந்தது.

நடராஜனுக்கு அத்தனை வலியின் மத்தியிலும் சிந்தனை தெளிவாக இருந்தது. நடராஜன் தீர்மானித்து விட்டான். 'நிதானமாக யோசித்து, திட்டமிட்டு, கஜ ராஜைக் கொல்லப் போகிறேன். இது சாமிமேல் ஆணை. இவனைக் கொல்வதுதான் என் நோக்கம். மேற்படிப் பல்ல, அமெரிக்கா போவதல்ல, மின்னுவைக் கல்யாணம் செய்வதல்ல. அதெல்லாம் இந்தச் சபதத்தை நிறைவேற்றி விட்டு அதன்பின் பிழைத்திருந்தால்தான். இனி இதுதான் என் குறிக்கோள். யாரிடமும் சொல்ல வேண்டாம். உள்ளுக்குள்— மனசின் ஆழமான உள்ளுக்குள் என் குறிக்கோள் மிக மிகத் தெளிவாகி விட்டது. இனி நடராஜனை யாரும் அசைக்கப் போவதில்லை., படிப்பு, கிளாஸ் போவது எல்லாம் இரண்டாம் பட்சம்தான். கஜ ராஜ், வருகிறேன்!'

கோவிந்தராவின் குரல் கேட்டது. ''ராஸு! ராஸு!''

அருகே வந்து, ''ஓ மை காட். எந்த முண்டா கொடுக்கர்டா இந்தப் பணி செய்தது? அய்யோ!'' அவன் முகத்தில் டார்ச் வெளிச்சம் பட, அப்போதுதான் தன் சட்டையெல்லாம் ரத்தம் பெருகியிருப்பதைக் கவனித்தான்.

''கஜராஜ் ''

''பப்பு இப்பதான் வந்து சொன்னான், உன்னை எல்லாரும் புதுக் கட்டிடத்துக்குக் கூட்டிப் போயிருக்கிறதா. பிக்சர் பார்த்துட்டு இப்பதாம்பா வரேன். டெண்ட்டுக்குப் போயிருந்தேன். ராஸு! ராஸு! உயிர் இருக்கா?'' மூக்கருகில் வைத்துப் பார்க்க, ''புடி பப்பு.'' அவர்கள் அவனை உயர்த்தி மெல்லப் படியிறங்கி அழைத்துச் செல்ல, நடராஜன் முழுவதும் நினைவிழந்தான்.

விழித்தபோது விட்டத்தின் மேல் சுற்றிக்கொண்டிருந்த மின் விசிறியையும் அருகே ட்ரிப் பாட்டிலையும் பார்த்தான். பப்புவின் முகத்தை அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது, ''நட்ஸ். எப்டி இருக்கே?''

''கஜராஜ், கஜராஜ்.''

''தெரியும்'' என்று கையை லேசாக அழுத்தினான்.

''அவனை, அவனை...

''என்ன நட்ஸ்?''

வேண்டாம். 'சொல்ல வேண்டாம் யாரிடமும் சொல்ல வேண்டாம். உயிருடன் இருப்பதே பெரிசு. உள்ளே சென்குப்தா வந்து, ''ஹௌ இஸ் ஹி நௌ?'' என்றார்.

பப்பு எழுந்து, ''பெட்டர் ஸார்.''

சென்குப்தாவுக்குப் பின்னால் அந்த இனிய முகத்தைப் பார்த்தான். மாதவி! கைகளில் மலர்க்கொத்து வைத்திருந்தாள். ''ஹௌ ஆர் யூ?'' என்றாள். ''பெட்டர்'' என்றதும் மலர்க் கொத்தை வைத்தாள். அவள் பின்னால் கோவிந்த ராவ் நின்று கொண்டு, ''உங்கள் புன்னகையே போதும் சிகிச்சைக்கு'' என்றான். அவள் சிரித்தாள். ப்ரொபஸர் பைப்பைப் பற்ற வைக்காமல் கடித்துக்கொண்டு, ''எதற்காக சண்டைக்குப் போகிறாய்?''

''அய்யோ, அவர்களாகத்தான் என்னை இழுத்துக் கொண்டு...''

''உங்களுக்குள் என்ன பிரச்னையிருந்தாலும் தீர்த்து வைக்க நான் இருக்கிறேன் அல்லவா? என்னிடம் சொல்லக் கூடாதா? எதற்கு வார்டனாக இருக்கிறேன்?''

கோவிந்தராவ், ''ஸார், இவன் மற்ற பேர் வம்புக்குப் போகாதவன். அவர்கள் ரூமில் நடந்ததைப் பற்றி உங்களிடம் புகார் சொன்னதால்தான்...''

''கஜராஜ் சொன்னான், இவன்தான் வலுக்கட்டாயமாக ரூமுக்குப் போய் அவனை 'சண்டைக்கு வா' என்று கூப்பிட்டானாம். நான்கு பேர் சாட்சிகள் வைத்திருக்கிறான்.''

''ஸார், இது அநியாயம்!''

''இதோ பார், மாணவர்களுக்குள் சண்டையில் என்னால் ஒரு எல்லைக்கு மேல் குறுக்கிட முடியாது, குறுக்கிடவும் கூடாது. இது நீங்களே தீர்த்து வைக்க வேண்டிய விஷயம். கோவிந்தோ, நீ ஏன் இதைத் தீர்த்து வைக்கக் கூடாது? கஞ்சா அடிப்பதைப் பற்றிக் கண்டித்து நோட்டீஸ் ஒன்று ஒட்டி வைத்தேன். போர்டில் பார்த்தாயா?''

''ஸார், இந்த விஷயத்தைப் போலீஸ் கம்ப்ளெயிண்ட் கொடுக்க வேண்டும்'' என்றான் பப்பு. ''என்னையும் ஒருமுறை இப்படித்தான் அடித்துப் போட்டார்கள்.''

''எதற்கு?''

''தனியாகச் சொல்கிறேன்" என்று மாதவியைப் பார்த்தான். அவள் பேசாமல், சதா புன்னகைத்துக் கொண்டு நடராஜனையே பார்த்துக்கொண்டு இருந் தாள். அவள் எதற்காக வந்திருக்கிறாள் என்று தெரிய வில்லை. கோவிந்த ராவ், ப்ரொபஸர் சென்குப்தா யாருக்கும் நடராஜனைப் பற்றி அதிகம் கவலையிருப்ப தாகத் தெரியவில்லை. பார்க்கப் போனால் உள்ளூர அவர்கள், 'இப்படிப் போய் உதை வாங்கினாயா' என்று மனசுக்குள் புன்னகைத்துக் கொள்வது போலத்தான் இருந்தது. பப்பு ஒருத்தன்தான் நிஜமாக வருத்தப் படுகிறவன் போல் இருந்தான். 'இதெல்லாம் எனக்குத் தேவையில்லை. நான் தீர்மானித்தாகி விட்டது.'

''அதோ பார், நான் கொஜராஜை இங்கே வர வழைத்திருக்கிறேன். நொடராஜிடம் மன்னிப்புக் கேட்க. அதற்கு அவன் சம்மதித்திருக்கிறான்!''

''வேண்டாம்'' என்றான் நடராஜன்.

''சார், அவன்மேல் ஒரு காயம் இருக்கிறதா பாருங்கள்.''

''இருக்கிறது! கையில் பலத்த வெட்டு!''

''இவனும் அடித்திருக்கிறான். கொஜராஜ்!''

'நாம் எங்கே அடித்தோம்!' என்று வியந்தான். கஜராஜ் வருமுன்னே வாசனை வந்தது. பிரமாதமாக டி—ஷர்ட் போட்டுக்கொண்டு பெரிய டார்ஜான் போல உள்ளே நுழைந்து ப்ரொபஸரையும் மாதவியையும் பார்த்துச் சிரித்து வணங்கினான்.

''கஜராஜ், திஸ் இஸ் டு பேட்! இன்னும் ஒருமுறை நிகழ்ந்தால் உன்னை ஹாஸ்டலை விட்டே துரத்த வேண்டி வரும். அண்டர்ஸ்டேண்ட்?''

கஜராஜ் பயந்ததுபோல முகத்தை வைத்துக் கொண்டு, ''ஸாரி ஸார்!''

''அப்பாலஜைஸ் டு நாட்ராஜ். ஸே ஸாரி!''

''ஸாரிடா. மன்னிச்சுக்க!''

நடராஜன் அவனைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான். 'எங்க போறே நீ? நானும்தான் எங்க போறேன்? நிறுத்தி நிதானமா...'

''ஸாரின்னு சொன்னனில்லை!''

''ஆல்ரைட். கமான் ஷேக் ஹாண்ட்ஸ்!''

கஜராஜ் சாஸ்திரத்துக்கு வலது கையில் பாண்டேஜ் கட்டியிருந்தான். நடராஜனால் இடது கைதான் கொடுக்க முடிந்தது. கொடுக்கும்போது, 'நிச்சயம் நிச்சயம்' என்று தான் மனத்தில் எண்ணினான்.

அவர்கள் எல்லோரும் புறப்பட்டுப் போனதும், பப்பு மட்டும்தான் இருந்தான். ''பாத்தில்ல அக்கிரமத்தை? இந்த சென்குப்தாதான் என்ன வீக் பர்ஸனாலிடி பாத்தியா? எல்லாருக்கும் தெரியும், உன்னை இந்தப் பசங்க வலுக்கட்டாயமா அழைச்சுட்டுப் போனது! சும்மா அவனுக்கு சப்போர்ட்டா இருக்கான் பாரு! மூஞ்சி முன்னாலயே பொண்டாட்டியை ரெண்டு பேரும் சைட் அடிக்கிறானுங்க. வாயை மூடிண்டு, 'நெக்ஸ்ட் டைம் இஃப் இட் ஹாப்பன்ஸ்' '' —ப்ரொபஸர் போலவே பப்பு பேசிக் காட்டியது சிரிப்பு வந்தது.

''ப்ரொபஸர் ஏன் இவனுக்கு சப்போர்ட் பண்றாரு?''

பப்பு கிட்ட வந்து அவன் காதில், ''ப்ரொபஸரே கஞ்சா அடிக்கிற ஆசாமி. அவனுக்கு இவன்தானே சப்ளை. ஒண்ணும் நல்லவர் இல்லை. இடையில் கோவிந்த ராவ் மூத்திரம் குடிச்ச மாடு மாதிரி அவளைப் பார்த்துக்கிட்டு அசடு வழியறான். ஒண்ணும் நல்லாவா இருக்கு?”

''டைரக்டர் கிட்ட சொல்லலாமா?''

''டைரக்டரும் சென்குப்தா கட்சிதான் தெரியுமா?''

''அதெப்படி?''

''த பாரு. பொண்டாட்டி அழகா இருந்துட்டா ஒருத்தனுக்கு வர்ற அந்தஸ்து இருக்குது பாரு! நட்டு, நாமெல்லாம் கொஞ்சம் நாகரிக நாய்கள். அவ்வளவ் தான்.''

பப்புவிடம் தன் திட்டத்தைப் பற்றிச் சொல்லலாம் போலத்தான் இருந்தது.

## 10

'வேண்டாம். சுஜராஜைக் கொல்லத் தீர்மானித்து விட்டதை மற்ற பேரிடம் சொல்லாமல்தான் வைத்திருக்க வேண்டும். எந்த விதத்திலும் சந்தேகம் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். வேண்டுமென்றால் கொஞ்சம் அவனுடன் நெருங்கிப் பழகலாம்.' இவ்வா றெல்லாம் நடராஜன் நினைத்தான்.

ஆஸ்பத்திரியில் ஐந்து நாள் வைத்திருந்தார்கள். கோவிந்த ராவ் முதல் முதல் ஒருமுறை வந்து பார்த்த துடன் சரி. பப்பு ஒருத்தன்தான் தினம் தவறாமல் வந்து பார்த்தான். பப்பு ஒருமாதிரி 'இன்டெலக்சுவல்' என்று தெரிந்தது. தமிழில் நிறையப் படித்திருந்தான் போல.

ஜானகிராமனின் 'தவம்', 'பரதேசி வந்தான்' போன்ற கதைகளை வாசித்துக் காட்டினான். கொஞ்சம் அயர்ந்தால் கவிதை எழுதி விடுவான் போலத் தோன்றியது. அவனிடத்தில் எல்லா விஷயங்களிலும் ஒருவிதமான அறிவு முதிர்ச்சி இருந்தது. எல்லோரையும் அவன் சரியாகக் கணித்து வைத்திருந்தான். அவன் மரியாதைக்கு உரியவர் ப்ரொபஸர் சென்குப்தா ஒருவர்தான் என்று தெரிந்தது. மற்றவருக்கு எல்லாம் விஷய ஞானம் போதாது என்றான்.

ரஸ்ஸல், காஸ்ட்னேடா போன்றவர்கள் பற்றிப் பெரிசாகப் பேசினாலும் ஒரே ஒரு விஷயம் பப்புவின் பேரில் கொஞ்சம் உறுத்தியது. ஆஸ்பத்திரியில் தனியாக இருக்கும்போது பப்பு நடராஜனை அவ்வப்போது தடவிக் கொடுத்தது ஒரு மாதிரியாக இருந்தது. நடராஜனுக்கு இளவயதில் 'சுப்பா, சுப்பா' என்றொரு கிரிக்கெட் பிளேயர், அவனை ரேழிக்கு அழைத்து இரண்டு பக்கமும் கதவைத் தாளிட்டுக் கொண்டு இருட்டில் புரியாத மாதிரி நடந்து கொண்டது ஞாபகம் வந்தது. அந்த விதத்தில் பப்புவின் பேரில் இயற்கையாக ஒரு வெறுப்பும் அருவருப்பும் வந்தாலும், மற்ற விஷயங்களில் இவ்வளவு சூரனாக இருப்பதால் தன்பால் அவன் காட்டின உண்மையான ப்ரீதியாலும் அவனுடைய வினோதமான நடத்தையைத் தாங்கிக்கொள்ளலாம் போல இருந்தது. மேலும் பப்பு நன்றாக மஸாஜ் செய்து உடம்பு பிடித்துவிட்டான்.

ஆஸ்பத்திரியிலிருந்து வந்து இரண்டு மூன்று நாள் காலேஜ் போகாமல் அறையிலேயே இருந்தான் ஒரு முறை சுஜராஜ் வந்து, ''எப்படி இருக்கே?'' என்று விசாரித்து, 'தான் பரவாயில்லை' என்று சொன்னான். அவனைப் பார்த்து சிரிக்கக் கூடச் சிரித்தான் இவன் மேல் வெறுப்புக் குறையாமல் இருக்கவேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டான்.

ஹாஸ்டல் ரீடிங் ரூமில் எக்ஸ்சேஞ்ச் ப்ரொபஸர் ஃபூர்னியே என்பவருடன் செஸ் ஆடினான். அவரை மற்ற பேர் எல்லாரும் 'ஃபூனே' என்றுதான் அழைத்தார்கள். வாட்டர் மெலன் போல வெயிலில் சிவந்த முகம். சற்றே குள்ளம். பென்சிலால் வரைந்தது போல உதடுகள். அதில் லேசான கள்ளத்தனமான சிரிப்பு. வலுவான புஜங்களில் பச்சை நரம்பு ஓடுவது தெரிந்தது. அவருடன் செஸ் ஆடுவது சுவாரஸ்யமாகவே இருந்தது. அவர் இங்கிலீஷ்தான் புரிவது கஷ்டமாக இருந்தது. செஸ் மூவ் எல்லாம நோட்டுப் புத்தகத்தில் எழுதிக் கொண்டு அலசி விளையாடியும் நடராஜனிடம் ஒருமுறை தோற்று விட்டார். நல்ல பிளேயராம். காலேஜ் டோர்னமெண்ட்டில் சாம்பியன் அவர்தானாம். நடராஜன் 'நிம்ஜோ இண்டியன் டிபென்ஸ்' ஆடினதாக அவர் சொல்லித்தான் தெரியும்.

''கம் து மை ஹவுஸ். வி'ல் ப்ளே!'' என்றார். ஒருமுறை பப்புவுடன் போயிருந்தான்.

வீட்டில் ஏகமாகப் பூனைக் குட்டியும் வாட்டர் கலரும் மெலிதான விளக்கும் ஒருமாதிரி அடைத்தாற்போல வாசனையுமாக இருந்தது. வீட்டை அலங்காரமாக வைத்திருந்தார். அலமாரியில் விதவிதமான பைப் வகைகளும் ராமேசுவரம் சோழியும் இருந்தது. ஒரு அழகான பெண்ணின் போட்டோவும் பக்கத்தில் ஒரு சிரிக்கும் குழந்தை படமும்.

''மை ஒய்ஃப்'' என்றார்.

''இஸ் இட்! ஒய் டோன்ட் யூ ப்ரிங் ஹர் எலரங் ஸார்?''

அவர் தோளை ஒருமாதிரி குலுக்கிக் கொண்டு, ''வி ஆர் திவோர்ஸ்ட்! மேரேஜ் இல்லே இல்லே! தாத்தர் வித் மதர்.'' மறுபடி தோளைக் குலுக்கிக்

கொண்டு சிரித்தார். பச்சையான கண்கள். மெஸ்ஸிலிருந்து சாப்பாடு ஒரு பெண் டிபன் பாக்ஸில் கொண்டு வைத்தாள்.

'லைக் து ஈத்?''

'இல்லை' என்று அவர்கள் வந்து விட்டார்கள். பப்பு வெளியே வந்ததும், ''ஃபூர்னியே எப்படி?'' என்று கேட்டான்.

''பேரே வாயில் நுழையலையே! ரொம்ப நல்லவன். பாவம், பொண்டாட்டியை விட்டுட்டு எப்படி இந்தத் தேசத்தில வந்து தனியா இருக்கானோ!''

''தனியா? இவனா? சரிதான்! கன்னங்கரேல்னு ஒரு ஒரு பொண்ணு டப்பா கொண்டு வெச்சுது பாரு?''

''ஆமா.''

''அதை இத்தனை நேரத்துக்குப் பந்தாடிகிட்டு இருப்பான்! துர்பீஜம்!'' என்றான்.

''அடப்பாவி! என்னடா நாக்கில நரம்பில்லாமப் பேசறே!''

''வேணா போய்ப் பார்க்கலாம் வரயா? காம்பஸ் முழுக்கத் தெரியுமே! டகரடை அய்யர் கூடச் சொல்லுமே! அந்தப் பெண்ணு போட்டுட்டிருக்கு பாரு ஸாரி?''

''ஆமா?''

''ஃபாரின் ப்ரெஞ்சு! குடுத்த காசுக்கு நன்னா சக்கையா வேலை வாங்கிடுவான். வெளில வரப்ப அந்தப் பொண்ணு கிழிஞ்ச நாரா வரும் பாரு!''

''ஆனா பொண்ணு மூஞ்சி சகிக்கலையே.''

''மூஞ்சியை ஏண்டா பார்க்கறே. உடம்பைப் பாரு.''

''எப்படிரா? அத்தனை சிவப்பா இருக்கிறவன் இந்தக் கரிமுனியை...''

''த பாரு, பட்டினத்தார் சொன்னாப்பல எத்தனை பேர் தொட்ட முலை, நட்ட குழின்னு, இதுக்கெல்லாம் அழகாவது ஒண்ணாவது. நட்டு, நான் எல்லாம் பார்த்தாச்சு. ஒண்ணுமே இல்லைடா! உண்மையான சினேகிதம், துல்லியமான சினேகிதம், இண்டெலக்சுவலா சமானமா இருக்கிற இரண்டு ஆண்களுக்குள்தான் இருக்க முடியும்!''

பப்பு அவன் தோளில் கை போட்டு உடன் நடந்தான்.

முதல் வருஷ மாணவர்களை வரவேற்கும் முறையில் டக்கிங், ராகிங் எல்லாம் கோலாகலமாக நடந்தபோது கஜராஜைக் காணவில்லை. கிரிக்கெட் டீம் அண்ணாமலை போயிருந்தது. கோவிந்த ராவும் இல்லை. இவர்கள் போய் அத்தனை மேட்சிலும் தோற்க வேண்டும் என்று விரும்பினான்.

எல்லாரும் திரும்பி வந்ததும், 'ப்ரேக்கிங்' என்று விநோதமான பெயர் கொண்ட பார்ட்டி நடந்தது. அதற்குக் காலையிலிருந்தே பப்பு தன் ரூமில் வந்து புல்புல்தாராவில் சாதகம் பண்ணிக் கொண்டிருந்தான். ஆர்க்கெஸ்ட்ராவாம். அவர்கள் என்ன பாட்டு வாசிக்கிறார்கள் என்று கண்டுபிடிக்க முடியவில்லை. பார்த்திபன் மவுத் ஆர்கன் ஒரு சுருதியிலும், தபலா ஒரு சுருதியிலும் இருக்க புல்புல்தாரா பூனைபோல ஒலிக்க, மூன்றாம் வருஷ சர்தார்ஜி ஒருவன் 'கவ்வாலி பாடியே தீருவேன்' என்று காதைப் பொத்திக்கொண்டு ஓவென்று இரைந்தான். நடராஜனுக்குச் சிரிப்பாக வந்தாலும் அடக்கிக் கொண்டு, ''பிரமாதம்'' என்றான்.

ப்ரொபஸர் சென்குப்தாதான் தலைமை தாங்கி ஜோக் அடித்துப் பேசினார். அவருக்கருகில் நாகப்பழ நிறத்தில்

சாரி கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்த மாதவியையே எல்லாரும் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந் தார்கள். ''இவ மட்டும் ஒரு நா கிடைச்சா!'' என்று பக்கத்திலிருந்த பையன் நடராஜிடம் சொன்னான். ''ஹாய் எம் பேர் குமாரு!''

அந்தப் பக்கம் இருந்தவனிடம், ''வரியா மச்சி, அர்ராக் அடிச்சுட்டு அம்மாவைப் பார்க்கப் போலாம்?''

''எதுக்குடா?''

''எனக்கு நிறைய சந்தேகம்டா!''

''என்னடா சந்தேகம்?''

''சில எடங்கள்ள கை வைச்சா எப்டி இருக்கும்னு சந்தேகம். அம்மாவாலதான் தீர்த்து வைக்க முடியும்!'' ஒவ்வொரு வாக்கியத்துக்கு இடையிலும் 'ஓஹோ' என்று சிரித்தார்கள்

பதினாறு எம் எம். ப்ரொஜக்டரில் போட்டு உதறி உதறி சினிமா காட்டினார்கள் 'ஸ்காரமவுஷ்' என்று. சினிமாவின் பீம் வெளிச்சத்தில் புகை சோம்பேறித் தனமாகச் சுழன்று கொண்டிருக்க, தீவிரமாக கஞ்சா வாசனை வீசியது. நடராஜன் மெல்ல அவர்களை விட்டு விலகி நடந்தான். நிலா வெளிச்சம் ரொம்பவும் சோஷ லிஸ்ட்டாகக் குடிசை விளிம்புக்கெல்லாம் வெள்ளி தீற்றி யிருந்தது. இருட்டிலும் வெளிச்சத்திலும் சென்குப்தாவும் மாதவியும் நடந்து செல்வது தெரிந்தது. ப்ரொபஸர் அவளிடத்தில் கையை காலை அசைத்துப் பெரிசாகப் பேசுவது கேட்டது.

விருட் விருட்டென்று அந்தக் கருப்புப் பெண், ப்ரொபஸர் 'ஃபூர்ணியே'க்கு உயரமான டிபன் பாக்ஸில் சாப்பாடு எடுத்துக்கொண்டு செல்வது தெரிந்தது. சென்குப்தாவும் மாதவியும் மர நிழலின் விளிம்பில் ஒரு கல்

பாலத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருக்க, அவர்கள் பேச்சில் 'கொஜொராஜ்' என்று இரண்டு மூன்று முறை கேட்டபோது வயிற்றில் சின்னதாகக் கத்தி குத்துப்போல உணர்ந்தான். மெல்லத் தன் அறைக்குத் திரும்பி வந்த போது அவனுடைய எண்ணங்கள் கலைக்கப்பட்ட தேன் கூடுபோல அலைந்தன. பப்புவின் மெலிதான சிநேகிதத்தில் பொதிந்துள்ள ஒருவிதமான அனாசாரம், ப்ரெஞ்சு ப்ரொபஸரின் கோட்டுச் சிரிப்பு, கன்னங்கரேல் என்று அவர் படுக்கையில் புரளும் காத்தாயியோ, மகமாயியோ, கருநீலப் புடவையில் சலவைக்கல் பொம்மைபோல நிலாவில் மாதவி, இருளில் சென்குப்தாவின் பைப் நெருப்பு, அடித்தளத்தில் ஒத்திப் போடப்பட்டுள்ள பழி கஜராஜ்.

அறைக் கதவின் இடுக்கில் தெரிந்த கடிதத்தில் கையெழுத்து குண்டு குண்டாக, இதுவரை பார்த்திராத தாக இருந்தது. கிழித்துப் பிரித்து முதலில் கடைசியில் கையெழுத்தைப் பார்த்தான்.

இப்படிக்கு,
ஆர். மீனாட்சி.

மின்சாரம் தாக்கினதுபோல ஆகிவிட்டது.

''என் மதிப்பிற்குரிய நடராஜன் அவர்களுக்கு,

மின்னு தெண்டம் சமர்ப்பித்து எழுதிக்கொண்டது. நான் இப்பவும் லீவுக்கு எங்கள் மாமா வீட்டிற்கு வந்து இருக்கிறேன் வருகிற ஞாயிற்றுக்கிழமை 17-ம் தேதி வரைக்கும் இருப்பேன். உங்கள் அம்மா என்னிடம் ஒரு அலாரம் கடிகாரம் கொடுத்தனுப்பியிருக்கிறார்கள். இது பற்றிக் கடிதமும் எழுதியிருக்கலாம். அதைப் பெற்றுக் கொள்ள மேற்காணும் விலாசத்தில் வந்தால் பெற்றுக் கொள்ளலாம். இந்தக் கடிதம் கிடைத்த விவரத்தைத் தயவுசெய்து யாரிடமும் சொல்ல வேண்டாம். இதைப் படித்துச் செய்தி அறிந்ததும் கிழித்துப் போடவும். இங்கு வரும்போதுகூட உங்கள் அம்மாவிடமிருந்து கடிதம்

வந்ததின் பேரில் கடிகாரத்தை வாங்கிக்கொள்ள வந்த தாகச் சொல்லவும். நான் ஊருக்குக் கிளம்பிப் போவதற் குள் இங்கு வந்து பார்க்க முடிந்தால் சந்தோஷமாக இருக்கும்.

இப்படிக்கு,
ஆர். மீனாட்சி.''

கடிதத்தில் மருந்துக்குக்கூட காதல் வார்த்தைகள் இல்லாவிட்டாலும் நடராஜனுக்கு, கடிதம் முழுவதுமே கவிதையில் எழுதியிருந்தது போல இருந்தது. கிழித்துப் போடுவதாவது! நடராஜன் அந்தக் கடிதத்தை முதன் முறை வாசித்துவிட்டு உடனே இரண்டாம் முறையும் வாசித்தான். பாத்ரூம் போய்விட்டு, பல் தேய்த்துவிட்டு, கொசுவலைக்குள் தன்னைச் செருகிக்கொண்டு புத்தம் புதுசாக வந்ததுபோல, இதுவரை கடிதத்தைப் படித்தே இராதவன் போல மூன்றாம் முறை படித்தான். விளக்கை அணைத்துத் தூங்கப் போகுமுன் ஏதோ ஒரு சந்தேகம் வந்து ஒருமுறை படித்துப் பார்த்துவிட்டு, தூங்கிப் போய் விட்டான். நள்ளிரவில் ஒரு முறையும், அதிகாலையில் ஒரு முறையும் படித்துவிட்டு கிளாஸுக்குப் போகும் போது அதை பைக்குள் வைத்துக்கொண்டு பிஸிக்ஸின் போதும், அப்ளைடு மெக்கானிக்ஸின்போதும் ஒரு தடவை படித்துவிட்டதில் ஒரு நாளில் அந்தக் கடிதம் கசங்கி நாயாய்ப் போய்விட்டது.

சாயங்காலமே திருவல்லிக்கேணியில் கொடுத்திருந்த விலாசத்துக்குச் சென்று விசாரித்தான்.

''எம்பேரு நடராஜன். நான் இங்க ஹாஸ்டல்ல இருக்கேன். இங்க எங்க ஊர்லருந்து மீனாட்சின்னு யாரோ வந்திருக்கிறதாகவும்...''

''மின்னு! அந்தப் பையன் வந்துட்டான்.''

உள்ளே திடுதிடுவென்று சப்தம் கேட்க, மின்னு தெரிந்தாள். நிச்சயம் ஓடி வந்திருக்கிறாள்.

மூச்சு இரைக்க, ''வாங்கோ, உள்ள வாங்கோ'' என்றாள்.

மின்னு புதுசாக மூக்குக் குத்தி மெல்லிய தங்கக் கம்பி யின் நுனியில் கல் வைத்திருந்தாள். கன்னத்தில் லேசாக ஒன்றிரண்டு பருக்கள் தெரிந்தாலும் அட்டகாசமாக இருந்தது. பாவாடை தாவணியை இறுக்கிக்கொண்டு, ''மாடிக்குப் போகலாம் வாங்கோ'' என்றாள்.

# 11

அந்த வீடு திருவல்லிக்கேணியில் பழைய மாதிரி இருந்தது. வாசலில் மரக் கதவில் சித்திர வேலைப் பாடுகள் இருந்தன. கூடத்தில் ஊஞ்சல். ரூமுக்கு ரூம் தாண்டும் வாசல்களில் எல்லாம் குழாய் மணி. பெரிய கண்ணாடி. தலைமாட்டில் எண்ணையாக ஈஸி சேர்.

''மின்னு, சௌக்கியமா இருக்கியா?'' என்றான்.

''சௌக்கியத்துக்கு என்ன! நீங்க?''

''பரவாயில்லை.''

''நிறையத் தலைமயிர் வளத்துண்டு இருக்கிங் களே!''

''ஷாப்புக்குப் போறதுக்கு டயம் இல்லை.''

''கொஞ்சம் கருத்தாப்பல வேற.''

''ஒர்க் ஷாப்ல போட்டு வாட்டறான்.

''பாடம் எல்லாம் ரொம்பக் கஷ்டமா இருக்கோ?''

'உன்னைப் பத்திச் சொல்லு மின்னு.''

''அப்பா அம்மால்லாம் எனக்கு ஜாதகம் பார்த் துண்டு இருக்கா. வேற என்ன சொல்ல? மூக்குக் குத்திண் டேன். இந்த லீவுக்குத்தான் என்னை வெளில விட் டிருக்கா.''

''இது யாராம்?"

''எங்க மாமா. வாங்க மாடிக்குப் போகலாம்.''

நடராஜனுக்கு அந்த வரவேற்பிலேயே நரம்புகள் எல்லாம் சிலிர்த்துக்கொண்டன. மின்னு சென்னைக்கு வந்ததும் என்ன தைரியமாகிவிட்டாள்! ''வாங்கோ மாடிக்கு'' என்று தனியாகக் கூப்பிடுகிறாளே! அப்பா அம்மா இல்லாத தைரியம்தானே!

உள்ளுக்குள்ளேயே மரப்படி வைத்து மாடியில் இதே போலப் பெரிய ஹாலாக இருந்தது. ஓலைப்பாய்ப் படுக்கைகள் எல்லாம் சுருளாக வைத்திருக்க, மர பீரோ, ரவிவர்மா படங்கள் என்று அதிகம் புழக்கத்தில் இல்லாத இடம்போல இருந்தது.

மின்னு தன் பெட்டியைத் திறந்து, ''முதல்ல உங்க அலாரம் கடிகாரம்'' என்றாள். அதை வாங்கிக்கொள்ளும்போது கை பட்டது. ''அப்புறம்?''

''நீ சொல்லு மின்னு.''

''சீது பாஸ் பண்ணிட்டான். ரங்கா எய்ட்த்ல பஸ்ட் ராங்க் வாங்கிருக்கா. எனக்குத்தான் மேல படிக்கிறதா, இல்லையான்னு அம்மாவுக்கும், அப்பாவுக்கும் தினப்படி சண்டை. அதான் ஓடி வந்துட்டேன்.''

மின்னுவைக் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தான். மாதவி சென்குப்தாவெல்லாம் இவளோடு ஒப்பிட்டால் அழகோடு சேர்த்தியே இல்லை. தாவணி இறுக்கத்தில் அவள் லேசான மார்புக்குள் தங்கச் சங்கிலி ஒளிந்துகொண்டிருந்தது. அப்படியே அவளை அணைத்துக்கொண்டு ''பச்சக்'' என்று சத்தமாக முத்தம் கொடுக்கவேண்டும் போலிருந்தது. அதற்குப் பதிலாக, ''கடைசியா என்ன சினிமா பாத்தே?''

''சினிமாவா! அதெல்லாம் யார் விடறா? எங்கப்பா வருஷத்துக்கு ஒரு சினிமாதான் மாட்டு வண்டில அழைச்

சுண்டு போவா. அதுவும் குழந்தைகள் இருக்கிறதா. டான்ஸ் கீன்ஸ் இருக்கக் கூடாது. நீங்க இங்க நிறைய சினிமா பாத்திங்களா?''

''இல்லை மின்னு. வந்ததிலிருந்து உன்னையே நினைச்சுண்டு இருந்தேன்.''

''பொய்யைப் பாரு! ஒரு லெட்டர் போடக் கூடாதா?''

''நேரா உனக்கா?''

''உங்கம்மாவுக்குப் போடறபோது விசாரிச்சு எழுதக் கூடாதா? நான் உங்கம்மாவைக் கேட்டுண்டே இருப்பேன். உங்கம்மா நல்ல மாதிரி. எங்க அம்மா அப்பா தான்...''

''என்ன மின்னு?''

''பெரிய எடமா பாக்கணுமாம்!''

''நடக்காது. அதெல்லாம் நடக்காது மின்னு.''

''நீங்க பாஸ் பண்ணிட்டு வர எத்தனை வருஷமாகும்?''

''மூணு வருஷம்!''

''அப்பாடா'' என்றாள். அவனைக் கண்ணோடு கண்ணாகப் பார்த்தாள். மின்னுவுக்கு லேசான பூனைக் கண். இருந்தாலும் இந்த மாதிரி நேராக அச்சடித்தாற் போலப் பார்க்கத் தெரிந்தவள். மின்னுவைக் கையைப் பிடித்தான். அவள் மெலிதாகத் தடுத்தாள்.

''ஏன் மின்னு?''

''அங்க பாருங்கோ'' என்று சன்னலுக்கு வெளியே காட்ட, ஒரு சிறுமி அவர்களைக் கண்கொட்டாமல்

பார்த்துக் கொண்டிருந்தாள். கையில் பாதி கடித்த பிஸ்கட்டு. கரிய கண்களில் ஒரு முத்து கண்ணீர்.

''மின்னு, நீ ஞாயிற்றுக் கிழமைதானே போறே?''

''ஆமாம்.''

''சனிக்கிழமை ஹாஸ்டல் டே இருக்கு. எங்க ஹாஸ்டலுக்கு வரயா? என் ரூம் எல்லாம் பார்க்கலாம்.''

''எப்படி நான் தனியா வரது?''

''நான் வந்து அழைச்சுண்டு போறேன்.''

''எல்லாரும் வரலாமா?''

''ம். வரலாமே!''

''அப்ப நான் மாமாவைக் கேட்டுச் சொல்றேனே?''

''எப்படியோ, நான் சனிக்கிழமை இங்க வரேன். சாயங்காலம் ரெடியா இருக்கணும்.''

''பார்க்கலாம்.''

''பார்க்கலாம் எல்லாம் இல்லை. நீ வர. அவ்வளவு தான்.''

அவன் உற்சாகமாகப் புறப்படுமுன் அந்தப் பெண்ணைப் பார்த்து, ''பாப்பா, உம் பேர் என்ன?''

''அனுகாதா!''

''ராவராதா? போய் ஒரு டம்ளர் தூத்தம் கொண்டு வாயேன்.''

அவள் தலையை ஆட்டிவிட்டுப் போனபோது சட்டென்று மின்னுவை எடுத்துக் கட்டிக்கொண்டு அவசர

மாக அவள் வாயில் முத்தம் கொடுக்க முயற்சி பண்ணி னான். அவள் தீர்மானமாக அவனைத் தள்ளி, ''சே! இப்படியெல்லாம் பண்ணா நான் அப்புறம் உங்களோட பேசவே மாட்டேன் தெரியுமா'' என்றாள். மற்றொரு முறை முயற்சி பண்ணியபோது, ''ராஜு, ராஜு'' என்று கத்தினாள். அந்த அலறலில் உடனே விலகிக்கொண்டு அவளைக் குற்ற உணர்ச்சியுடன் பார்த்தான். ''இஷ்ட மில்லையா?''

''இப்ப இல்லை'' என்றாள்.

''ராஜு ஊர்ல இருக்கான்'' என்று வாசலில்தான் சொன்னாள். அவள் சிரிப்பு மின்சார ரெயிலில் ஏறுகிற வரை கேட்டுக் கொண்டிருந்தது. சனிக்கிழமை அவள் ஹாஸ்டலுக்கு வருவதாகச் சொல்லி விட்டாள். அதில் ஒரு எதிர்பார்ப்பும், கூடவே ஒரு கலக்கமும் தயக்கமும் இருந்தது.

''நீ கூட்டிட்டு வா ராஸு. நான் பார்த்துக் கறேன்.''

''இந்த கஜராஜ் மாதிரி ஆளுங்க கலாட்டா பண்ணப் போறானோன்னு தயக்கமா இருக்கு!''

''சேசே! ஹாஸ்டல் டேம்போது அவன் அவன் குட்டி தள்ளிக்கிட்டு வருவான். அவனவன் அதது மேலவே அடேன்ஷனா இருப்பான். நீ என்ன செய்றே, பப்பு கிட்ட உன் கர்ள் ஃப்ரண்டை ஒப்படைச்சுரு. ரொம்ப ஸேஃப்!'' என்று சப்தமில்லாமல் தோளைக் குலுக்கிச் சிரித்தான்.

பப்பு கோவிந்த ராவை முறைத்துப் பார்த்து, ''யூ ஸ்டிங்க்!'' என்றான்.

''பப்பு, நான் சொல்றது நிஜமில்லையா? உனக்கு கர்ள்ஸ்னா இண்ட்ரஸ்ட் இல்லைதானே!''

''கொள்ட்டி! உன் பொண்டாட்டியைக் கூட்டிட்டு வா காட்றேன்.''

''சே! எம் பொண்டாட்டிய நான் இங்க ஏன் கூட்டி வரேன்? அது என்னா அழகு தெரியுமா! தகதகன்னு.''

''எல்லாம் போட்டோ பார்த்திருக்கேன். மரப்பாச்சு!''

''நான் ராயபுரத்திலிருந்து ரெண்டு கர்ள் ஃப்ரண்ட்ஸ் கொண்டாந்துரப் போறேன். ஒண்ணு மெயின். மற்றது ஆக்ஸ்லியரி.''

வெள்ளிக்கிழமை இரவு ப்ரொபஸரின் வீட்டில் பெரிசாக விளக்கெரிய வாசலில் லானில் நிறைய சேர் போட்டு நிறையப் பேர் பெரிய பார்ட்டி போல உட்கார்ந்திருக்க, மாதவி சில்க் மாதிரி தலை மயிரை அலைய விட்டுக் கொண்டு பெரிய வட்டமான தட்டில் கூல்ட்ரிங்க்குடன் அவர்கள் ஊடே உலவிக் கொண்டிருந்தாள். சென்குப்தா அங்கிருந்து இரைந்து, ''நொடோரோஜ்'' என்று விளித்தார். ப்ரெஞ்சு ப்ரொபஸருடன் செஸ் ஆடக் கிளம்பிக் கொண்டிருந்தவனை, 'கம்' என்றார். ''பெரிய பார்ட்டி நடக்கிறது. கொஞ்சம் உதவி செய்'' என்றார்.

அவன் உள்ளே வந்து லானில் நிற்க, மாதவி அவனைப் புன்னகைத்து, ''நடராஜ், பி என் ஏன்ஜெல். உள்ளே போய் போலா எடுத்து வைத்திருக்கும் பொருட்களையெல்லாம் எடுதது வா.''

உள்ளே போனபோது ஹாலில் கஜராஜ் உட்கார்ந்திருந்தான்.

''நீ எங்கடா இங்கே வந்தே?''

''ப்ரொபஸர்தான் கூப்பிட்டார்.''

''ஒரு பொம்பளையைப் பார்த்தா உடனே பல்லை இளிச்சிட்டு வந்துர்றதா?''

''போடா. உன்னோட பேச நான் தயாராயில்லை. ஹூ இஸ் போலா?''

''ஸாப்!'' என்று கிச்சனில் குரல் கேட்க அந்த ஹிந்திக்காரன் பளபளப்பான தட்டுகளில் சப்பாத்தி சப்ஜி எல்லாம் எடுத்து வைத்திருந்ததை நடராஜன் வெளியே கொண்டு வைத்தான். அவனிடமிருந்து வாங்கி வாங்கி மாதவி மேசையில் அடுக்கும்போது, ''என்ன இது, இந்த மாதிரி ஒரு டிரஸ்ஸா?'' என்று வியந்தான். அவள் மார்பகங்கள் சந்தேகத்துக்கு இடம் வைக்காமல் தெரிந்தன. அதுவும் குனியும்போது அத்தனை கெஸ்ட்டுகளும் அங்கேயே பார்த்துக் கொண்டிருக்க, ப்ரொபஸர் மட்டும் லாக்கின் தியரி ஆஃப் நாலெஜ் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். மற்ற ப்ரொபஸர்களின் மனைவிகளும் இருந்தார்கள். எல்லாரும் மம்மி போல உட்கார்ந்திருந்தார்கள். தேவைப்பட்ட அளவுதான் சிரித்தார்கள். மாதவிதான் எல்லாரிடமும் புன்னகையுடன் பேசினாள். கூல்டிரிங்க் மட்டுமின்றி விஸ்கி போன்ற பானங்களும் இருப்பதைக் கவனித்தான்

நடராஜன், 'அதையெல்லாம் சாப்பிட்டு முடித்துவிட்டு, யாராவது மாதவி மேல் கைவைக்கப் போகிறான்' என்றுதான் எண்ணினான். கஜராஜ் அறுத்த வெள்ளரிக்காய், மீன் கட்லெட் எல்லாம் எடுத்து, ''ஹியர் யூ ஆர்'' என்று புன்னகையுடன் வந்தான் மாதவியுடன் சேர்ந்து ஒவ்வொருவராக விசாரிக்க ஆரம்பித்தான்.

சென்குப்தா, ''உன் சண்டையெல்லாம் தீர்ந்து விட்டதா இல்லையா?''

லேசாக அவர் தலை ஆடியது.

''இல்லை'' என்றான்.

''முண்டகோபானிஷத் படி'' என்றார். இப்போதே லேசாகக் குடி என்றுதான் தோன்றியது.

பார்ட்டி வினோதமாக இருந்தது. பெண்கள் சர்பத் குடித்துவிட்டு உணவின் மேல் படையெடுக்க, ஆண்கள் உணவில் அக்கறையின்றி, இருக்கிற பாட்டிலை குடித்துத் தீர்ப்பதில்தான் கவனமாக இருந்தார்கள். கொஞ்சம் கொஞ்சமாக அவர்களிடையே கலகலப்பும் அனாவசிய மான அன்னியோன்யமும் அதிகமாகியிருந்தது. ராத்திரி பதினொரு மணியானதும் அவர்கள் ஒவ்வொருவராக விலக ப்ரொபசரின் இரைச்சலும், கொட்டமும், 'குட்நைட், குட்நைட்'டும் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவலும் அட்டகாசச் சிரிப்புமாக அரைமணி ஆயிற்று. அந்த லான் முழுவதும் மிச்சங்கள் கிடக்க ப்ரொபஸர் கடைசி குட்நைட் சொல்லிவிட்டு, ''கொஜொராஜ்'' என்று கர்ஜித்தார்.

''எஸ் ப்ரொபஸர்'' என்றான் கஜராஜ். மாதவிக்கு உதவி செய்து கொண்டிருந்தான்! ''கொஜராஜ்'' என்று மறுபடி அதட்ட, மாதவி நிமிர்ந்து பார்த்து, ''பார்த்தோ, கோ டு பெட்!'' என்றாள்.

சென்குப்தா நேராக கஜராஜிடம் வந்து, ''பத்தமீஸ் பத்மாஷ்! என் மனைவியைத் தொடுவாயா? அவளைத் தொடுவாயா? மதராஸி நாயே! தொடுவாயா? ஒரு விரலால் தொடுவாயா?''

''பார்த்தோ, யூ ஆர் ட்ரங்க். போய்ப் படுத்துக் கொள்'' என்று மாதவி அவரைப் பிடித்து நிறுத்த, அவளை மீறிக்கொண்டு கஜராஜை நோக்கிப் பெரிய விஸ்கி பாட்டிலால் அவனை மண்டையில் அடிக்க முற்பட்டுக் கீழே விழ இருந்தவரை நடராஜன் பிடித்துக் கொண்டான்.

''ஐயம் ஷாரி. ஐ'ம் ஷாரி!" என்று சென்குப்தா தள்ளாடினார். ''என் மனைவியைப் போல ஏமாற்றுக்காரி கிடையாது.''

''பார்த்தோ! மிஸ்டர் நடராஜ், நான் பார்த்துக் கொள்கிறன். உன் ரூமுக்குப் போ!''

''நோடாராஜ்! போகாதே! என் மனைவியைப் பற்றிக் கேட்டுவிட்டுப் போ. ஷி இஸ் எ ஸ்லட். ஷி இஸ் எ பிட்ச்!''

சென்குப்தா கீழே உட்கார்ந்து புல்வெளியில் படுத்துக் கொண்டு ஏதோ பெங்காலியில் பாடத் துவங்க, ''நீங்கள் இருவரும் உங்கள் அறைக்குச் செல்லுங்கள். நான் கவனித்துக் கொள்கிறேன். போலா! எஜமானனைத் தூக்கு!'' என்றாள் மாதவி. இப்போதும் புன்னகைதான்!

# 12

காலையில் இருந்தே ஒலிபெருக்கி அலறியது. வர்ண விளக்குகளை விரயமாகப் பகலிலேயே எரியவிட்டுக் கொண்டிருந்தார்கள். கிரிக்கெட் மைதானத்திலிருந்து 'மாட்' வி.ஐ.பி.க்களுக்காக வந்தது. வைஸ் சான்ஸலரோ யாரோ வருவதாக எல்லாரும் மார்பில் பெரிசாக பாட்ஜ் குத்திக்கொண்டு அலைந்தார்கள். கஜராஜைக் காண வில்லை. நேற்றைய சம்பவத்துக்கு அப்புறம் சென்குப்தா அவன் வெளியே வந்தால் சிதைத்து விடுவார் என்றுதான் எண்ணினான். க்ரேட் க்ரேட்டாக சோடாவும், ஆரஞ்சு பானமும் வந்திறங்க, நடராஜனுக்கு உற்சாகமாகவே இருந்தது.

காலை பத்து மணியிலிருந்தே கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். 'எப்போது சாயங்காலம் மூன்று மணிக்கு திருவல்லிக்கேணி போய் மின்னுவை அழைத்து வருவோம்!'

கோவிந்த ராவ் ராயபுரத்திற்கு சரக்கு வாங்கி வரப் போயிருந்தான். மற்றொரு கோஷ்டி ரூம் ரூமாக ரிகர்ஸல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். 'வீரபாண்டிய கட்ட பொம்மன் இன்றிருந்தால்' என்கிற தலைப்பில் கச்சா புச்சா என்று ஒரு நாடகம் எழுதி ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தார்கள். சிரிப்பார்கள் என்கிற உத்தேசத் தோடு ஹரி கதா காலட்சேபம் வேறு! '

''கோவிந்தா ஜீவன ஸ்மரணம்'' என்று பாகவதர் உல்டாவாக ஆரம்பிப்பாராம். சிஷ்யகோடிகள், ''கோபிகா! கோபிகா!'' என்பார்களாம். அதற்கு சிரிப்பார்களாம். இந்த மாதிரி 'கடி' ஜோக்ஸ் நிறையவே இருந்தது. மற்றொரு கோஷ்டி ஜூலியஸ் சீஸரில் உள்ள அந்தோணியின் பிரசங்கத்தை ஒருவன் பொழிய, மற்றொருவன் மொழி பெயர்க்கப் போகிறானாம். 'நண்பர்களே, ரோமம் உள்ளவர்களே! நாட்டுக் கட்டைகளே' (ஃப்ரெண்ட்ஸ், ரோமன்ஸ், அண்ட் கண்ட்ரிமன்) மின்னு சிரிப்பாளோ என்று கவலையாக இருந்தது நடராஜனுக்கு.

நடராஜன் மின்னுவுக்காக மூன்று முறை அலங்காரம் பண்ணிக் கொண்டான். கோவிந்தாவின் ரூமுக்குப் போய் அவன் வைத்திருந்த மிடில் ஈஸ்ட் செண்ட்டை தாராளமாகப் பூசிக்கொண்டு மீசையை ட்ரிம் பண்ணிக் கொண்டு, இருக்கிறதுக்குள்ளேயே சிறப்பான சட்டை போட்டுக் கொண்டு, கடிகாரம் ஓட மறுத்தது போல் அடிக்கடி மணிக்கட்டைப் பார்த்துக் கொண்டாள். பப்பு வந்து, 'ரொம்ப ஷோக்காக இருக்கிறாய். முத்தம் கொடுக்கலாம் போல இருக்கிறது' என்று, 'ட்ரையல் ஆஃப் ஆஸ்கர் வைல்டு' படிக்கச் சொன்னான். இத்தனை அமர்க்களத்திலும் ஃபூர்னியே ப்ரொபஸருக்கு சாப்பாடு டிபன் பாக்ஸில், கருப்பாயியோ மாரியாயியோ எடுத்துக் கொண்டு செல்ல, நடராஜன் பப்புவிடம் நேற்று செண்குப்தா வீட்டில் நடந்ததைச் சொன்னான்.

''சென்குப்தாவுக்கு விவஸ்தை கிடையாது. நேத்திக்கு இத்தனை சத்தம் போட்டானோல்லியோ, இன்னிக்குப் பாரு, சுஜராஜைக் கட்டி முத்தம் கொடுப்பான் பாரு! நீ எங்க பொறப்பட்டுண்டு இருக்கே இப்ப?''

''நான் சொல்லலையா பப்பு? மின்னுவை அழைச்சுண்டு வரப்போறேன்.''

''ஓ எஸ். கோவிந்த ராவ் கூட நக்கலாப் பேசினான்! ஒருநாள் இல்லை ஒருநாள் எங்கிட்ட செருப்படி வாங்கிக்கப்போறான். இவன் டோப் அடிக்கிறதெல்லாம் அம்பலம் பண்ணாட்டி பார்! நட்டு, நீ ரொம்ப ஷோக்கா இருக்கடா, இன்னைக்குக் கட்டி முத்தம் கொடுக்கலாம் போலவே இருக்கு.''

அவன் கையைப் பிடிக்கும்போது பரபரப்புடன் அவனிடமிருந்து விடுவித்துக் கொண்டு ரூமைப் பூட்டிக் கொண்டு கிளம்பி விட்டான்.

ரெயில், பஸ் எல்லாம் உபயோகித்து திருவல்லிக்கேணி போய்ச் சேர மூன்றேகால் ஆகிவிட, எல்லாரும் வாசலில் காத்திருந்தார்கள்.

''இவா எல்லாருமா வரப்போறா மின்னு?''

''ஆமாம். அவாள்ளாம் வரணும்னு ஆசைப்பட்டா.'' நடராஜன் நம்பிக்கையிழந்து அவர்களைப் பார்த்தான். பட்டுப் பாவாடை கட்டிக்கொண்டு மார்பில் பின் குத்தி கைக்குட்டை கொண்ட பத்து வயதுப் பெண், இரண்டு வாண்டு, தலைபூரா எண்ணெய் பளபளக்க வாரிக் கொண்ட ஒரு சுமார் வயசுப் பையன். ''அவாள்ளாம் எங்க மாமா புள்ளை, சித்தப்பா பொண்ணு...''

எல்லாரையும் அழைத்துக்கொண்டு செல்ல வேண்டியிருந்தது. மின்னு கையில் 'ரத்தக் கருப்பன் என்கிற

சிவகாசி புஸ்தகம் வைத்துக்கொண்டு கண் கொட்டாமல் பஸ்ஸிலும் எலக்ட்ரிக் ட்ரெய்னிலும் படித்துக் கொண்டிருந்தாள். அவ்வப்போது எதாவது கேட்டால் நிமிர்ந்து ஒரு வார்த்தை பதில் சொல்லிவிட்டு ரத்தக் கருப்பன்!

நடராஜனுக்கு மின்னுவுடன் இந்த சாயங்காலத்தைப் பற்றிய எதிர்பார்ப்புக்களே வேறு மாதிரி இருந்தது. அவளை ஹாங்கர் பக்கம் கொண்டு சென்று கன்னத்தைப் பிடித்து நிலா வெளிச்சத்தில் பார்த்து காதல் வார்த்தைகள் பேசலாம் என்றால் லேசாக வானம் மூட்டமாக பிசு பிசு என்று தூறல். சட்டென்று ஓபன் ஏர் நாற்காலிகள் எல்லாம் நூறு ஜனங்கள் ஒத்துழைத்து ஆடிட்டோரியத்துக்கே கொண்டு போக ரகளை. வைஸ் சான்ஸலர் வர நேரமாகியது. மின்னுவுடன் வந்திருந்த எல்லாருக்கும் மூன்று முறை நடராஜன் ஆரஞ்சு பானம் வாங்கித் தர, அந்தப் பையன்களில் ஒருத்தன் கக்கூஸ் போகவேண்டும், ரொம்ப அவசரம் என்று, கொஞ்சம் தாமதித்தால் சபையிலேயே போய்விடுவான் போலக் கையை உதறித் துடித்தான். அவனை அழைத்துக்கொண்டு பக்கெட்டில் தண்ணீர் பிடித்துக்கொண்டு வந்து முடிவதற்குள் அந்தப் பெண், ''மின்னு, ஆத்துக்குப் போகலாம், அப்பா ஏழரைக்குள்ள வந்துரச் சொல்லியிருக்கா'' என்று ஆரம்பித்துவிட்டாள்.

'ஜூலியஸ் சீஸரு'க்கு விசில் மேல் விசில் பறக்க, மின்னு, ''என்ன எல்லாரும் ரௌடிப் பசங்களா இருக்கா, இவாதான் உங்க கிளாஸ்மேட்டா?'' என்றாள். அதனிடையில் கோவிந்தராவ் வேறு வந்து சற்றே தள்ளாடி, ''என்ன ராஜூ, குட்டி தள்ளிக்கிட்டு வந்திருக்கியா? ஹய்! சோக்கு! ஜம் ஜம்பல் மரி வெய்தா லாகரி'' என்றான்.

''கோவிந்தா பிஹேவ் யு'ர்ஸல்ஃப்'' என்று அதட்டினான்.

மின்னு மிகவும் முகத்தைச் சுருக்கிக்கொண்டு, ''தத்! போலாம் போலாம்'' என்றாள். ''என்னைக் கூட்டிண்டு வரணும்னுகூட இல்லை. நாங்களே போய்ப்போம்'' என்றாள்.

வெல்வெட் திரை எலக்ட்ரிக்கல் வயரிங்கில் மாட்டிக்கொண்டு ப்யூஸ் போய் இருட்டானபோது மின்னுவைத் தொட்டான். அவன் கையை வெடுக்கென்று கிள்ளி விட்டாள். வெளிச்சம் வந்ததும் சிரித்துக்கொண்டிருந்தாள்.

பப்பு முகத்தைக் கைக்குட்டையால் துடைத்துக்கொண்டு மேடையில் பேசும்போது, 'ஆஸ்கர், ஆஸ்கர்' என்றார்கள். அவன் மூக்கு நுனி சிவந்தது. நல்ல இங்கிலீஷ் பேசினான்.

கவ்வாலி சகிக்கவில்லை. என்னைப் பிடி, உன்னைப் பிடி என்று இஷ்டத்துக்குப் பாடிக்கொண்டிருக்க, பட்டென்று திரையை மூடிவிட்டார்கள். மின்னு கிளம்பி விட்டாள்.

நடராஜனுக்கு மின்னுமேல் கோபமாக இருந்தது, அப்படி பிகு பண்ணிக்கொள்கிறாளே என்று. அவளைத் திரும்ப திருவல்லிக்கேணியில் கொண்டு விடுவதை அவன் பொறுப்பாக ஏற்றுக்கொள்ள, கக்கூஸ் போனவன் நடராஜன் தோள் மேலேயே தூங்கிப் போய்விட்டான். அந்தப் பெண்ணோ ஏழரை ஏழரை என்று புலம்ப, பாதி ப்ரோக்ராமில் எழுந்து கிளம்பிவிட்டான். மௌனமாகத் தான் அவர்கள் திரும்பினார்கள். மற்றொரு பையன் 'பசிக்கிறது' என்று ஸ்டேஷனுக்கு ஸ்டேஷன் சொல்லிக் கொண்டே வர, மின்னுவுடன் ஒரு காதல் வார்த்தை பேசக்கூட சந்தர்ப்பம் இல்லாமல் திரும்பி வந்தபோது

சுருணைத் துணி மாதிரி உணர்ந்தான். கோபத்தால் அழுகையே வந்தது.

திரும்ப வந்தபோது ஹாஸ்டல் விழா முடிந்து விட்டது. எல்லாரும் காலி நாற்காலிகளைத் திசைக்கொன்றாகப் போட்டுக்கொண்டு பேசிக்கொண்டிருந்தார்கள். டின்னர் சாப்பிடவில்லை. தீர்ந்துபோய் பாத்திரத்தின் ஓரத்தில் கொஞ்சம் புலால்தான் பாக்கியிருந்தது. நம்பூதிரி பெண் வேஷம் போட்டுக்கொண்டு ஆடின காபரே டான்ஸ் ரொம்ப நன்றாக இருந்ததாகவும், நம்பூதிரியை லான் பூரா நான்கைந்து பேர் துரத்தியதாகவும் சொன்னார்கள். சென்குப்தா அட்டகாசமாகப் பேசிக்கொண்டிருந்தார். மாதவியைக் காணவில்லை. ரபீந்திர சங்கீத் பாடினாளாம். கஜராஜ், பப்பு சொன்னதுபோல சென்குப்தாவுடன் குலவிக்கொண்டிருந்தான். இருட்டிலே ஃபூர்னியேவுக்கு எடுப்பு சாப்பாடு கொடுத்து வந்த பெண் இடுப்பைப் பிடித்துக்கொண்டு ஒரு மாதிரி சைடு வாங்கி நடந்து சென்றாள். மழை மேகமெல்லாம் விலகி முழுச் சந்திரன் பால் கொட்டியிருந்தது.

டிசம்பர் ஜனவரியில் மழை பெய்தது. ஏப்ரலில் எல்லாருக்கும் பரீட்சை ஜுரம் வந்து ராத்திரி விழித்திருக்க, பென்ஸிட்ரின், டெக்ஸாட்ரின் எல்லாம் தேடினார்கள். ராத்திரி மூன்று மணிக்கு ஹீட்டரில் ஆம்லெட் போட்டுச் சாப்பிட்டார்கள். கோவிந்த ராவ் சின்னச் சின்னதாக, பிட்டு பிட்டாக எழுதி வைத்துக்கொண்டு இடது கால் சாக்ஸில் இது, கக்கத்தில் இது என்று அதற்கு ஒரு அட்டவணை வேறு தயாரித்துக்கொண்டான். ஓப்பன் புக்ஸ் டிஸைன் பேப்பரில் எப்படிக் காப்பி அடிப்பான் என்று வியந்தான். பையனிடம் கொடுத்து முரளி கிருஷ்ணாவுக்கு அனுப்பி விடுவானாம். முரளி தன் பேப்பர் மட்டுமல்லாது கோவிந்த ராவுக்கும் ஒரு பிரதி எழுதித் தருவானாம். அப்படி எல்லாம் இருந்தும்

எப்படி கோவிந்தராவால் பாஸ் செய்ய முடியவில்லை என்று ஆச்சரியமாக இருந்தது.

கஜராஜ் பரீட்சை பற்றிக் கவலையே இல்லாமல் இருந்தான். நடராஜன் உயிரைக் கொடுத்துப் படித்தான். பப்புவுக்கு இது கடைசி வருஷமாக இருப்பதால் அவனும் தீவிரமாகத்தான் படித்தான். இருந்தாலும் அவன் படிப்பதில் அதிகம் அலட்டிக் கொள்கிறாற்போலத் தெரிய வில்லை. நடுநடுவே அஸிமோவ், டாஸ்டாயவ்ஸ்கி என்றெல்லாம் படித்துக் கொண்டிருந்தான். இருந்தும் பப்புதான் எப்போதும் முதல் ராங்க் வாங்குவான் என்று கேள்விப்பட்டிருக்கிறான்.

பப்புவிடம் தெரிந்துகொள்ள வேண்டியது எத்த னையோ இருக்கிறது. விரும்பத்தக்கதும் எத்தனையோ இருக்கிறது, ஒன்றைத் தவிர!

''இதில என்ன தப்பு இருக்குங்கறே நட்டு? இது ரொம்ப நாச்சுரல்! பல மிருகங்கள்ட்ட இருக்கு. ஹாமில்டன்னு ஒருத்தன் பாபூன் குரங்குகள்ட்ட இருக் கிறதைப் பற்றி ஆராய்ச்சிக் கட்டுரை எழுதியிருக்கான். ஆதிமனிதர்கள்கிட்ட இது மரியாதைக்குரியதா இருந்தது. நாலாயிரம் வருஷத்துக்கு முன்னர்டி எகிப்தில ரெண்டு கடவுள்களே ஹோரஸ் அண்ட் செட்டுன்னு சினேகிதமா இருந்திருக்கா. அஸ்ஸைரியன், கார்த்தஜீனியன், டோரியன், ஸ்கைத்தியன், நார்மன்னு பலவகை வம்சங்கள்ள இது இருந்திருக்கு. கிறிஸ்டியானிட்டி வந்ததும் இதை அமுக்க வெச்சாலும் ஷேக்ஸ்பியர், மார்லோ, பேக்கன், மைக்கல் ஆன்ஜெலோ இப்படி எத்தனையோ ஸீனியர்ஸெல்லாம் இருந்திருக்கா. அமெரிக்கா காலேஜ்கள்ள அறுபது பேருக்கு ஏழு பேர் இது. உனக்கு அப்புறம் புரியும் நட்டு... இட்ஸ் ஸம்திங் போயட்டிக்'' என்றான்.

நடராஜன் ஸ்மித்தியில் சரியாகப் பண்ணவில்லை. எலக்ட்ரிக்கலில் ஸில்லியாக ஒரு தப்பு பண்ணியிருந்தான். காம்ப்லெக்ஸ் வேரியிபிள்ஸில் ஒரே ஒரு தப்பு. மற்றபடி எல்லா பேப்பரும் நன்றாகப் பண்ணியிருந்தான்.

அம்மாவிடமிருந்து கடிதம் வந்தது. 'மின்னுவை நீ ரொம்ப நன்றாகப் பார்த்துக் கொண்டதாகவும் அவளுக்கு பட்டணம் எல்லாம் சுற்றிக் காட்டியதாகவும் சொன்னாள். ரொம்ப சந்தோஷம். பரீட்சை முடிந்த கையோடு ஊருக்கு வந்துவிடு. உன்னைப் பார்க்க அதிக ஆவலாக இருக்கிறேன்.'

கடைசி நாள் பரீட்சை முடிந்ததும் உடம்பு பூரா காற்றடித்து ஒய்ந்த மாதிரி இருந்தது. பலபேர் சாயங்கால ரெயிலுக்கே மூட்டை கட்டிக்கொண்டு கிளம்பி விட்டார்கள். ஹாஸ்டல் துரிதமாகக் காலியாகிக் கொண்டிருக்க, மெஸ் வெறிச்சென்று இருந்தது. பப்புவுடன் நடந்து வந்தபோது இலைகள் எல்லாம் உதிர்ந்து பூமியே தெரியாமல் காய்ந்த இலைகள் பரவியிருந்தன.

பப்புவின் கையில் இங்க் கறை பெரிசாக இருந்தது.

''எப்படிப் பண்ணே நட்டு?''

''நல்லாத்தான். நீ?''

''நானும்தான். நட்டு, அடுத்த வருஷம் உன்னைப் பார்க்க முடியாது நான்.''

நடராஜனுக்கு அப்போதுதான் சுருக்கென்று தைத்தது.

''கான்வக்கேஷனுக்கு வருவே இல்லை?''

''சொல்ல முடியாது. வேலை தேடணும். மேற்படிப்பு பார்க்கணும். வெல்! இட்ஸ் பீன் எ ப்ளெஷர் நோயிங் யூ நட்டு! ஏதோ ஒரு விதத்தில நான் உன்னை விரும்

பினேன். என்னைப்பத்தி எதுவும் தப்பா நினைச்சுக் கலையே நீ?"

''சேச்சே!''

''ராத்திரி கிளம்பறியா?''

''ஆமாம், இனிமே நாம் பார்த்துக்க மாட்டோம்னு நினைக்கிறேன்.''

''ஆமாம்.''

''பரவாயில்லை'' என்று அவன் கையை இறுக்க மாகக் குலுக்கினான். ''மறக்க மாட்டியே?''

''இல்லை பப்பு. நீ ஞாபகம் வெச்சுண்டா சரி.''

# 13

டகரடை அய்யருக்குக் கடன் பாக்கி என்று பலபேர் ரெயில்வே கேட்டுக்கு வேலியைத் தாண்டித் தாண்டிக் குதித்து ஊருக்குப் போனார்கள். அய்யர் பிளாட் பாரத்தில் கல்லுளி மங்கனாக நின்றாலும் வசூல் பண்ண முடியாது. கிடைத்தது போதும் என்று ரொம்பச் சத்தம் போட்டுவிட்டு விட்டுவிடுவார். சில பேர் லீவு முடிந்து வந்துகூடக் கணக்கை செட்டில் பண்ணலாம் என்றாலும் கடைசி வருஷ மாணவர்கள்தான் அதிகம் ஏமாற்றுகிறார் களாம்.

நடராஜன் அய்யருக்கு பாக்கி வைக்கவில்லை. இவரைப் பார்த்தால் பரிதாபமாக இருந்தது. மிலிட்டரி ஸர்ஜெண்டாகவோ என்னவோ இருந்திருக்கிறாராம். கோவிந்த ராவ் பொய் என்பான். ''இந்த உயரத்துக்கு வெறும் ஜெண்டாகக் கூட எடுக்க மாட்டான்.'' அவருக்கு அவர் சைஸிலேயே பெண்களாம். எப்படிக் கல்யாணம் பண்ணி வைப்பது என்ற கவலையிலேயே இன்னும் இரண்டு இன்ச் குறைந்து விட்டாராம். கோவிந்த ராவ்

தலையைச் சுற்றிப் பதினைந்து ரூபாய் வரவு வைத்துக் கொள்ளச் சொல்லிவிட்டுத்தான் ஊருக்குப் புறப்பட்டான். ''கோவிந்தா, கடைசி வருஷம் வேற. நீ எப்படி திரும்பி வரப்போறே!'' என்றால். ''பரவாயில்லை அய்யர். நான் ஷ்யூரா பெயில்! எங்க போறேன்'' என்றான்.

நடராஜன் ஊருக்குத் திரும்பு முன் பார்பர் ஷாப்பில் போய் தலையைத் தீர வெட்டிக் கொண்டான். பாதி பாரம் ஒழிந்தாற்போல இருந்தது. மேலும் அப்பா உள்ளேயே விடமாட்டார். இந்த முறை தைரியத்தை வரவழைத்துக் கொண்டு மின்னுவைப் பற்றி அம்மா விடமாவது ஒரு வார்த்தை சொல்லிவிட வேண்டும் என்று தீர்மானித்தான். 'இன்னும் இரண்டு வருஷம்தானே! முடிந்த பிற்பாடு உடனே வேலை கிடைத்துவிடும். இன்றைக்கெல்லாம் இவளுக்கு என்ன வயது?' என்றெல்லாம் மின்னுவின் கல்யாணத்தைத் தனக்காக ஒத்திப் போடப் பல காரணங்கள் கண்டுபிடித்துக் கொண்டிருந் தான். கொள்ளிடம் பாலத்தில் ரயில் உருளும்போதே எழுந்துவிட்டான். ஜங்ஷனுக்கு வந்து பஸ் பிடித்து ஊர் போய்ச் சேர எட்டரையாகி விட்டது.

காவேரியில் தண்ணீர் இன்றி வரண்டிருந்தது. பம்ப் ஸ்டேஷனிலேயே தண்ணீர் இல்லையென்றார்கள். பயிர் எல்லாம் அறுவடை செய்து பசுமையற்றிருந்தது நிலம். அப்பா, ''பரீட்சை எப்படிப் பண்ணியிருக்கிறாய்?'' என்றார். அம்மா, ''இளைத்திருக்கிறான்'' என்றாள். ஆலமரத்தடியில் பஸ்ஸுக்காகக் காத்திருந்தவர்கள் எல்லாரும், ''எப்ப வந்தே தம்பி?'' என்று விசாரித்தது ஆறுதலாக இருந்தது. எட்டு இட்லி சாப்பிட்டான். எண்ணெய் தேய்த்துக் கொண்டு குளித்தான். மின்னு 'ஆனந்தவிகடன்' கொடுத்துவிட்டு, 'கல்கி' வாங்கிப்

போக வந்தாள். அவனைப் பார்த்ததும் திடுக்கிட்டு, ''எப்ப?'' என்றாள்.

''கார்த்தாலைதான் வந்தேன். பரீட்சை முடிஞ்சதும் உன்னைப் பார்க்க!''

''என்னடி மின்னு?''

''விகடனை'க் கொடுத்துட்டு 'கல்கி' வாங்கிண்டு வரச் சொன்னா. அப்றம் தேன்குழல் அச்சு வேணும்னா.''

''அவாள்ளாம் வந்தாளா?''

'எனக்கு அதெல்லாம் தெரியாது மாமி'' என்றாள். மின்னுவையே பார்த்துக் கொண்டிருந்தான். அவள் கண்கள் அவனைச் சந்திக்க மறுத்தன.

''மின்னுவுக்குக் கல்யாணம் பண்ணப் போறா, தெரியுமோல்லியோ? திருச்சில ஆண்டார் ஸ்ட்ரீட்டில பெரிய வக்கீலாம். அவர் பையனாம். அவனும் அட்வகேட்டாம். பெரிய இடமாம். மின்னுவுக்கு ரொம்ப அதிர்ஷ்டம்!''

''மாமி, நான் போய்ட்டு அப்றம் வரட்டுமா?''

''இரு, 'கல்கி' வாங்கிண்டு போயேன். தேங்குழல் அச்சு வேண்டாமா?''

''அப்றம் வந்து வாங்கிக்கறேன் மாமி.''

''மின்னு, அம்மா சொல்றது நிஜமா?''

''வர வெள்ளிக்கிழமை நிச்சயதார்த்தம்'' என்றாள் அம்மா.

''மின்னு, அம்மா சொல்றது நிஜமா?''

''எனக்கு ஒண்ணும் தெரியாதுப்பா!'' என்று அவள் அவனை நிமிர்ந்து ஒருமாதிரி பார்த்துவிட்டுப் போனாள். இப்போது மூக்கில் ரெகுலராக மூக்குத்தியுடனிருந்தாள். நடராஜனுக்கு வயிற்றில் பந்துபோல ஒரு என்னவோ அடைத்துக் கொண்டு விட்டது!

''நல்ல பொண்ணு. நானும் உனக்குப் பார்க்கலாம்னு தான் இருந்தேன். அவா அவசரப்படறா. நாம போய், அதுவும் புள்ளையாத்தில காத்திருன்னு சொல்ல லாமோ?''

''சொன்னா என்னம்மா? என்ன அவசரம்னு இந்த இத்தனை சின்னப் பொண்ணுக்கு கல்யாணம் பண்றா? நீங்கள்ளாம் தடுத்து நிறுத்தக் கூடாதா?''

''அது அவ்வளவு ஒண்ணும் சின்னதில்லை தெரி யுமோ? பரீட்சையில ரண்டு விசை குண்டு!''

''என்னம்மாது! அக்கிரமம்மா!''

''என்னடாது, வயசுக்கு வந்த பொண்ணுக்குக் கல் யாணம் பண்ணி வெச்சா அக்கிரமமா? அது அயனான இடம். ஏகாந்தரத்துக்கு சொத்து!''

''சொத்தைக் கொண்டு உடம்பில போடு!''

''உனக்கு ஏண்டா இத்தனைக் கோவம் வரது?''

'எல்லாரும் சேர்ந்து பாழாப் போங்கோ' என்று கிளம்பிவிட்டான். மதகுக்குப் பக்கத்தில் சோலை நிழலாக இருக்கும். அங்கே போய் உட்கார வேண்டும்போல இருந்தது. நடக்கும் போது அழுகை வந்தது. மின்னு மயிலாப்பூரிலேயே சொன்னாள், 'எனக்குக் கல்யாணத் துக்குப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்' என்று. இப் போது என்ன செய்வது? எப்படி நிறுத்துவது? மின்னு என்ன இப்படி எந்தவித எதிர்ப்பும் இல்லாமல் எப்படி

ஒப்புக்கொண்டு விட்டாள்? அவள் என்ன செய்வாள்? அவளுக்கு ஏதாவது அதிகாரமோ உரிமையோ இருக்கிறதோ? என் அப்பா மிராசு. தங்கக் கடுக்கன் போட்டுக் கொண்டு வெற்றிலை செல்லமும் மோதிரமுமாக, சீரழிந்த சமுதாயத்தின் கடைசி வாரிசுகளில் ஒருவர். வாய்க்காலில் கூடத் தண்ணீர் அதிகமில்லை. எல்லாமே வரட்சி! நான் எதற்குப் படித்து பாஸ் பண்ணி வேலைக்குப் போய் குட்டிச்சுவராகி...

மின்னுவை எத்தனை நாளாகத் தெரியும்! காக்காக் கடி நாளிலிருந்து, இரண்டு பேரும் நாடாக் கட்டிலை 'வி' மாதிரி போட்டுக் கொண்டு அதனுள் ரகசியமாக உட்கார்ந்து கொண்டு பாதாங்காய்க்கு ரகசியங்களை விற்றதிலிருந்து மின்னு, மின்னு என்று எத்தனை கனவுகளின் நாயகியாக இருந்திருக்கிறாள்! நடராஜனுக்கு ரொம்ப ஏமாற்றமாக இருந்தது. எனக்கும் அவளுக்கும் என்ன வயசு வித்தியாசம் இருக்கும்? என்ன செய்வேன்?

நடராஜன் மத்தியானம் வீடு திரும்பும்போது மின்னுவின் வீட்டு வாசலைக் கடக்கும்போது திடீர் என்று தீர்மானித்தவன் போல உள்ளே நுழைந்தான்.

கோடைப் பந்தல் போட்டு வில்வண்டி சாய்ந்து இளைப்பாறிக் கொண்டிருந்தது. மாடுகள் இரண்டும் குளிப்பாட்டி வெள்ளை வெளேர் என்றிருந்தன.

''யார்ப்பா தம்பி?''

''அய்யாவைப் பார்க்கணும்.''

''யார்னு சொல்றது?''

''நடராஜன்னு மெட்றாஸ்லருந்து வந்திருக்கிறதா சொல்லு போ.''

மின்னுவின் அப்பா, ''யார்றாது'' எனத் துண்டு நுனியால் மூக்கைத் திருகிக்கொண்டே வந்து 'அதிஷ்' என்று தும்மிவிட்டு, ''யாரு, நீயா? வா வா, நான் யாரோன்னு பார்த்தேன். படிப்பெல்லாம் எப்படி?''

''சரியாத்தான் இருக்கு மாமா!''

''நம்மூருலருந்து என்ஜினியரிங் படிச்சுட்டு விசுவநாதன்னு பரோணில இருக்கான். உங்கப்பாவுக்குக் கூட ஒன்றுவிட்ட உறவாகணும்.''

''மாமா, மின்னுவுக்குக் கல்யாணமாமே?''

''ஆமாம். நீதாம்பா வந்து நடத்தி வெக்கணும். மின்னுவைச் சின்ன வயசிலேருந்து தெரியும் உனக்கு...''

''மாமா நீங்க பண்றது ஒரு அக்கிரமம். மின்னுவோட சம்மதம் இல்லாம இதைச் செய்திருக்கிங்க. அவளைக் கேட்டிருந்தா நிச்சயம் என்னைத்தான் கல்யாணம் பண்ணிக்கிறதா சொல்லியிருப்பா. அவளை இப்ப கூப்பிடுங்கோ பார்க்கலாம்' என்றுதான் சொல்ல நினைத்தான். அதற்குப் பதிலாக, ''சரி மாமா!'' என்று கிளம்பி வந்துவிட்டான்.

திரும்பி வந்ததும் புறக்கடையில் துணி துவைக்கும் கல்மேல் ரொம்ப நேரம் உட்கார்ந்திருந்தான். இன்றைக்கு சாயங்காலமே ஹாஸ்டலுக்குத் திரும்பிப் போய்விடலாம் என்றுதான் எண்ணினான். எப்படியும் வெள்ளிக்கிழமைக்குள் போய்விட வேண்டும். ஊரை விட்டுப் போய்விட வேண்டும். இருப்பதில் எனக்கு மனச் சுமை அதிகரிக்கும். என்ன ஒரு கோழை நான். மின்னுவுக்கு நாற்பது பக்கம் நோட்டைக் கிழித்து இரண்டு மூன்று தடவை கடிதம் எழுதிப் பார்த்தான். பின்புறக் கதவைத் திறந்து பச்சையாக ஓடும் வாய்க்காலில் அந்தக் கடிதங்களை மிதக்கவிட்டான். 'எதற்கும் தைரியமில்லாம உனக்கு எப்படிக் கல்யாணமாவது! கஜராஜ் போட்டு

உன்னை அந்தச் சாட்டு சாட்டினான். அதையே சமாளிக்கத் தெரியாத கோழை நீ. உனக்கு எங்கே தைரியம் வரும்! நீ ஆஸ்டலுக்கும் திரும்ப மாட்டாய். வெள்ளிக்கிழமை அவர்கள் வீட்டுக்குச் சென்று சமர்த்தாய் சந்தனப்பேலா ஏந்துவாய். தூ!'

அம்மா, ''என்னடா வந்ததிலருந்து சுரத்தில்லாம இருக்கே?''

''நம்ம பத்மனாபா கொட்டாயை டெண்ட்டுலருந்து மாத்திட்டா தெரியுமோ? நெல்லு மிஷின் இருந்த தோல்லியோ, அதற்குப் பக்கத்தில இன்னொரு கொட்டாய் வந்திருக்கு. அதில வந்து என்னவோ ஓடறதுன்னு சொன்னாளே. சிரிப்பா இருக்காம். பார்த்துட்டு வாயேன்!''

''வேண்டாம்மா.''

''உடம்பு சரியில்லையா? பித்தம், அஜீர்ணம் எதாவது?''

''இல்லைம்மா.''

''ட்ரெய்ன்ல வந்த களைப்பா இருக்கும். சாப்பிட்டுட்டுத் தூக்கம் போடு. சரியாப் போயிடும்.''

யாரிடம் சொல்வேன்? பப்பு ஒருத்தன்தான் இதற்குச் சரியானவன். சரியாக விவரமாக அவன் ஆலோசனை கூறுவான். அவன் ட்ரெய்னிங்குக்கு பம்பாய் போயிருக்கிறான். ஊருக்குப் போய் ஒரு வாரத்தில் கிளம்பி விடுவான். அதற்குள் அவனுக்கு எழுதி, பதில் வந்து, அதற்குள் வெள்ளிக்கிழமை வந்துவிடுமே! நடராஜனுக்கு நிச்சயதார்த்தங்களை எப்படித் தடுத்து நிறுத்துவது என்கிற ஐடியாவே இல்லை.

மின்னுவாவது ரொம்ப சோகமாக இருப்பாள் என்று எதிர்பார்த்தான். அவள் ஒன்றும் அதிகம் வருத்தப்படுகிற

மாதிரியும் தெரியவில்லை. அவளும்தான் என்ன செய்வாள்? சொல்லிச் சொல்லிப் பார்த்தாள். மயிலாப்பூரில் சந்தித்தபோதே கடிதம் எழுதி வரவழைத்துச் சொன்னாள். நடராஜனுக்கு சமூகக் கட்டுப்பாடுகளை உடைத்து விட்டு சினிமாவில் போல மின்னுவின் கையைப் பிடித்துக் கொண்டு ஓடவேண்டும் என்றுதான் ஆசை.

எப்படி என்றுதான் புரியவில்லை. யாராவது தைரியமாக இருக்கவேண்டும். மின்னுவும் கோழை. நான் அதைவிடக் கோழை. அவளாவது கொஞ்சம் அழுத்தமான பெண் என்று சொல்லலாம். உள்ளே என்ன யோசிக்கிறாள் என்று சொல்வது கடினம். ஆனால் அவள் என் மேல் அன்பாக இருந்தது என்னவோ சத்தியம். இப்போ வக்கீல் வீட்டுத் தொழுவத்தில் கட்டி விடுவார்கள். வேளா வேளைக்கு போஜனம், பலகாரம் எல்லாம் கொடுத்து வெள்ளிக்கிழமை எண்ணெய் தேய்த்துக்கொள்ள வைத்து... சே, என்ன சோகம் இது! அம்மா அப்பா யாரிடமும் கம்யூனிகேட் பண்ண முடியாத படி அத்தனை தனியனாக வளர்ந்து விட்டேன்.

வெள்ளிக்கிழமை திருச்சினாப்பள்ளியிலிருந்து கார் வரும் வரும் என்று எதிர்பார்த்தாகள். மின்னு வீட்டில் மாவிலைத் தோரணமும், செம்மண் கோலமும் போட்டிருந்தது. பல பேர் பட்டுப்புடவை கட்டிக்கொண்டு உலவினார்கள். மேல் மாடியிலிருந்து எல்லாம் தெரிந்தது. வண்டிக்குக் கூடப் புதுசாக பெயிண்ட் அடித்தாற் போல இருந்தது.

ஆனால் மின்னுவைப் பார்க்க மாப்பிள்ளை வரவில்லை. ராத்திரி எட்டு, எட்டரை மணிவரை காத்திருந்துவிட்டு எல்லாருே் போனதும்தான் அப்பாவும் அம்மாவும் வீட்டுக்கு வந்து சேர,

''ஏன் அவாத்தில வரலையாம்?''

''மாப்பிள்ளைக்கு யாரோ மொட்டைக் கடுதாசி எழுதிட்டாளாம்.''

''எதைப் பத்தி?''

''அந்தப் பொண்ணு ஏற்கனவே கள்ள சினேகிதம் வெச்சிண்டிருக்குன்னு. யாருக்கோ பொறாமை.''

''அதானே? என்ன தங்கமான பொண்ணு அது. அதைப் போய் விசாரிக்காம நம்புவாளோ?''

''என்னமோ அவாளுக்கும் இஷ்டமில்லை போலருக்கு. நாளைக்குத்தான் தகவல் பூராவும் தெரியும்.''

அப்போது வாசலில் கொஞ்சம் குழப்பமாகக் குரல்கள் தொனிக்க, நடராஜன் எட்டிப் பார்த்ததில், ''ஓய் கூப்பிடும் உம் பையனை'' என்று அதட்டல் கேட்டது.

''என்ன வேணும்?''

''மொட்டைக் கடுதாசி அவன்தான் எழுதி விட்டிருக்கான் ஓய்...!''

# 14

நடராஜனுக்கு எதிர்பாராத விதத்தில் அப்பாவிடமிருந்து சப்போர்ட் வந்தது ஆச்சரியமாக இருந்தது. மின்னுவின் அப்பா வந்து காச்சுமூச்சு என்று கத்தி முடிக்கும் வரை காத்திருந்துவிட்டு, ''ஓய்! பேச வேண்டியதைப் பேசியாச்சோல்லியோ?''

''ஆச்சு.''

''அந்த மொட்டைக் கடுதாசி உம்மகிட்ட இருக்கா? சம்பந்தியாத்தில இருக்கா?''

''சம்பந்தியாவது ஒண்ணாவது அவாத்திலருந்து டிரைவர் பஸ்ஸைப் பிடிச்சுண்டு வந்து இந்த மாதிரி

லெட்டர் வந்திருக்குன்னு சொல்லச் சொன்னாங்கன்னு கொடுத்துட்டுப் போயிட்டான்.''

''அதைக் கொடும்.''

கடிதத்தை அவர் வாங்கிப் பார்க்கும்போது மின்னுவின் அப்பா நடராஜனை திராவகம் கலந்து பார்த்தார். ''த பாரும்! இந்தக் கடுதாசி என் பையன் எழுதினது இல்லை! வேணா போலீஸ்ல கொண்டு காட்டிப் பிராது கொடும். எனக்குக் கவலையில்லை. இது அவன் எழுத்தே இல்லை!''

''ஏம்பா ஒரு பெண்ணோட லைஃபை ஸ்பாயில் பண்றயே! இது உனக்கே நியாயமா சொல்லு.''

''மாமா, நான் அந்த மாதிரியெல்லாம் லெட்டர் எழுத மாட்டேன் மாமா!''

''நீ வந்து மின்னுவை கல்யாணம் பண்ணிக்க ஆசை வெச்சிண்டிருந்தியா இல்லையா, சொல்லு.''

நடராஜன் அப்பாவைப் பயத்துடன் பார்த்துக் கொண்டு ''ஆமாம்'' என்றான்

''டேய்! அவர்தான் போக்கணம் கெட்டுப் பேசறார்னா நீயுமா? படிப்பை முடிக்காம கல்யாணம் என்னடா கல்யாணம்?''

''படிப்பை முடிச்சப்புறம்தாம்பா.''

''அதுக்கும் இன்னும் ரெண்டு வருஷம் இருக்கு' ரெண்டு வருஷத்துக்குள்ள என்ன என்னவோ நடந்துரும். பாரு, உனக்கு படிப்புதான் முக்கியம். படிச்சு பாஸ் பண்ணிட்டு வெளில வந்துட்டு என்ன வேணா பண்ணிக்கோ. கவலையில்லை. ஆனா அதுக்கு முன்னாடி இந்த மாதிரி வாலாட்டினா ஒட்ட நறுக்கிடுவேன்.''

''இப்ப எனக்கு என்ன பதில் சொல்றீர்?''

''இத பாரும். பொண்ணு கொஞ்சம் சுமாரா யிருந்துட்டா எல்லாருக்கும்தான் அதைக் கல்யாணம் பண்ணிக்க ஆசையாயிருக்கும். சன்னிதித் தெருவில எந்தப் பக்கம் போய்க் கேட்டாலும் என் பையன் மாதிரி தான் சொல்லுவான். அதனால இந்தக் கடுதாசியை அவங்கள்ள யார் வேணா எழுதியிருக்க முடியும். எம் பையன் எழுதலை. நீர் என்ன வேணா பண்ணிக்கும். எனக்குக் கவலையில்லை.''

''நான் இதை விடறதில்லை'' என்று துண்டை உதறிக்கொண்டே சென்றார். அப்பா அவர் போன திசை பார்த்துச் சிரித்துவிட்டு, ''ஆமாம். இவன் பெரிசாக என்ன பண்ணிவிட முடியும்? கையாலா காதவன்.''

அம்மா, ''ஏண்டா இதெல்லாம்? உனக்கு புத்தி போறாது'' என்றாள்.

''நான் ஒண்ணும் எழுதலைமான்னா'' என்று எரிந்து விழுந்தான்.

''எது எப்படியோ போறது. போய் கைகால் அலம்பிண்டு வா, சாப்பிடலாம். ஒழுங்கா அக்கப்போர் இல்லாம ஊரைப் பார்க்கப் போய்ச் சேரு.''

நடராஜன் கொல்லைப்பக்கம் போய் அவரைக் கொடிகளுக்கிடையில் இருந்த கல்லில் உட்கார்ந்து கொண்டு யோசித்தபோது, பின் கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. திறந்து பார்த்ததில் மின்னுதான் நின்றுகொண்டிருந்தாள். வியர்க்க விறுவிறுக்க, பின்பக்கத் திட்டி வாசல் வழியாக அவர்கள் வீட்டிலிருந்து ஓடிவந்திருக்கிறாள்.

''ஏன் மின்னு?''

''கடுதாசியை நான்தான் எழுதிப் போட்டேன்.''

''மின்னு'' என்றான் உணர்ச்சிவசப்பட்டு. ''உனக்கு இருக்கிற தைரியம் கூட...''

''அதெல்லாம் அப்புறம் பார்த்துக்கலாம் மெட்றாஸ்ல பார்க்கலாம். அனேகமா மைக்கல்மாஸ் போது மறுபடி வருவேன். தைரியமா இருங்கோ'' என்று சிரித்துவிட்டு ஓடிப்போய் விட்டாள்

நடராஜனுக்கு உடல் பூராவும் புதிய தெம்பு வந்தது.

சமையலறையில் கீழே உட்கார்ந்து கொண்டு இலை போட்டுச் சாப்பிடும்போது அப்பா அவசரமாக முடித்து விட்டு எழுந்திருக்க, அவர் போனபின், ''அம்மா, மின்னுவை நான்தாம்மா கல்யாணம் பண்ணிக்கப் போறேன்.''

''அவாதாம்பா அவசரப்படறா. கொஞ்சம் வயசா யிடுத்தோல்லியோ.''

''நீ போய் அவாத்தில எப்படியாவது சொல்லி டும்மா. நான் படிச்சுட்டு வந்ததும், என்ன ஒரு ரெண்டரை வருஷம் காத்துண்டிருக்க மாட்டாளா?''

''அதெப்படி நாம புள்ளையாத்துக்காரா சொல்ல முடியும்?''

''எல்லாம் சொல்லலாம்மா. இதுனால என்ன வாம்?''

''என்னவோ போ. நடக்கறது எதுவும் சொல்லிக்கும் படியா இல்லை'' என்றாள்.

ஊருக்குத் திரும்ப ஒண்ணரை மாத லீவில் மின்னுவை எப்படிச் சந்திப்பது என்று திட்டமிடுவதிலேயே நாட்களைக் கழித்தான். மின்னுவை அவர்கள் வீட்டில் சிறைப்படுத்தி வைத்திருந்தார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். திட்டி வாசல் கதவை அடைத்துப் பூட்டி

விட்டார்கள். டெண்டு சினிமாவுக்குப் போவதில்லை. வாயிற் திண்ணையில் புளியங்கொட்டைகளை வைத்துக் கொண்டு பாவாடை விரித்து ஆடுவதைப் பார்க்க முடியும்.

சில சமயம் ஜாக்கெட்டில் பேனா குத்திக்கொண்டு மாட்டு வண்டியில் ஜல் ஜல் என்று ஹிந்தி கிளாஸுக்குப் போவாள். பாட்டு சப்தம் கேட்கும். அவளுக்கு பரத நாட்டியம் சொல்லிக் கொடுக்க ஒரு ஜில்பா வந்து கொண்டிருந்தான். தேவர் ஹாலில் அரங்கேற்றம் கூடப் பண்ணப் போகிறார்கள் என்றார்கள்.

ஜூன் மாதம் காலேஜ் திறந்துவி ம்.

அந்த தினத்துக்கப்புறம் மின்னுவின் கல்யாணப் பேச்சும் கொஞ்சம் அடங்கிவிட்டாற் போலத்தான் தோன்றியது. ஆனால் நேர்முகமாக அவளுடன் பேசச் சந்தர்ப்பமே இல்லை. ஊருக்குப் போவதற்கு முன் என்ன என்னவோ பிளான் எல்லாம் போட்டுக் கொண்டிருந்தான். மொட்டை மாடி ஏறித் தாண்டிக் குதித்து கல்லில் கடிதத்தைச் சுற்றிப் போடலாமா என்றெல்லாம் யோசித்தபோது ஹாலில் பேச்சுக் குரல் கேட்க, யாரென்று பார்த்தான்.

மின்னு அம்மாவுடன் பேசிக் கொண்டிருந்தாள். குத்தகைக்காரர்கள் நிறையப் பேர் வருகிறார்களாம். பெரிசாகப் பாத்திரம் வேண்டும் என்று கேட்டு வந்தாள். அம்மா அது பரண்மேல் இருப்பதாகச் சொல்லி நடராஜனை ஏணி போட்டு எடுத்துக் கொடுக்கச் சொல்ல, நடராஜன் பரண்மேலே குடைந்து கொண்டிருக்கும்போது மின்னுவும் ஏணிப் படிகளில் கால் வைத்து ஏறி வந்தாள்.

பாத்திரங்களை அசைத்து சப்தம் பண்ணிக் கொண்டே, ''ஊருக்குப் போறாப்பலயா?'' என்றாள். மின்னுவைப் பார்த்தான். முகப்பருவை என்னவோ

களிம்பெல்லாம் போட்டுத் தேவையில்லாமல் கட்டுப் படுத்தி வைத்திருந்தாள். கொஞ்சம் பெருத்துப் பூத்து, நெற்றியில் வியர்வையும் சதிப்பார்வையுமாக நடராஜனை முழுசாக ஒரு ஹார்மோன் புயலாக ஆக்கி வைத்திருந் தாள். அவள் குரலில் இருந்த இனிமை, லேசான கரகரப்பு, வியர்வை, பவுடர், எல்லாம் கலந்த ஒரு வாசனை. பாத்திரத்தை சப்தம் பண்ணும் கைவளை யோசை, மூங்கிலை இறுக்கமாகப் பிடித்திருந்த கை விரல்கள்...

அவளைப் புஜத்தில் தொட்டுப் பார்த்தான். கண்ணால் கடிந்து கொண்டாள்.

''இந்தப் பாத்திரம் இல்லை ''

இருவரும் பாத்திரம், பரண் எதையுமே கவன மில்லாமல் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டே, தொட்டுக் கொண்டே பேசிக் கொண்டிருக்க, ''பரவா யில்லை, பெரிசா ஒரு கெட்டில் இருக்கு பாருங்கோ அதுக்குப் பின்னால...''

நடராஜன் அவள் கழுத்தைத் தடவிக் கொடுத்து, முகத்தால் முகத்தைத் தேய்த்து, ''இந்தப் பாத்திரமா?'' என்றான்.

''இல்லை இதுக்குக் கீழ.''

''இந்தப் பாத்திரமா?'' என்றான்.

''இல்லை. இதுக்குக் கீழ.''

நடராஜன் அவள் மார்பின் மேல் முகத்தை வைத்து அழுத்த, பல்லால் அவள் அவன் காது நுனியைக் கடிக்க...

''ம்ஹூம் இதில்லை'' என்றாள் மின்னு.

லீவு முடிந்து ஜங்ஷனில் ஏறும்போது நடராஜ னுக்குக் கண்ணில் நீர் ததும்பியதை அப்பா தப்பாக

நினைத்துக்கொண்டு, ''எங்களுக்கு மட்டும் உன்னை விட்டுப் பிரியறதில வருத்தமில்லையா நட்டு, என்ன பண்றது? அவாவா தொழில்? உத்தியோகம், படிப்புன்னு பிரிஞ்சு போகத்தானே வேண்டியிருக்கு'' என்றார்.

ராத்திரி பூராவும் பர்த்தில் நீல விளக்கைக் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டு விழித்திருந்தான். இவளையே, இவளையே இப்படி நினைத்துக் கொண்டிருந்தால் எப்படிப் படிப்பது? எப்போது படிப்பது, பாஸ் பண்ணுவது?

படித்து முடிக்க வேண்டியது கட்டாயம். அதுதான் உனக்கு அந்தஸ்து, வேலையெல்லாம் தரப் போகிறது. அதுதான் மின்னுவையும் தரப் போகிறது. மின்னு என்னை மறக்கவே மாட்டாள். எனக்காக நிச்சயம் காத்திருப்பாள். அவளை அன்றைக்குப் பரணில் பல தடவை தொட்ட வலது கையைப் பொறாமையுடன் பார்த்துக் கொண்டான். 'மின்னு, மின்னு' என்று பல முறை சொல்லிக் கொண்டான். மின்னு பிக்னிக் போன போது மற்ற பெண்களுடன் எடுத்துக்கொண்ட போட்டோ ஒன்று கொடுத்திருந்தாள். பாக்ஸ் காமிரா 120 சைஸில் நாற்பது பெண்கள்! மின்னு இருக்கிற இடமே தெரியவில்லை. இருந்தும் அதை மார்புச் சட்டையில் பத்திரமாக வைத்திருந்தான். நடராஜன் காதல் பற்றி அவ்வளவு படித்திருந்தாலும், காதல் என்கிற உணர்ச்சி வயிற்றில் ஒரு மாதிரியான சங்கடம் போலத்தான் இருந்தது. ஒரு சதா சங்கடம்.

திரும்ப ஹாஸ்டலுக்குப் போனபோது பாதிப் பேர் வந்திருந்தார்கள். ஜவாஹர் ப்ளாக்கில் ரூம் கொடுத்திருந்தார்கள். கோவிந்தராவ் வழக்கம்போல பெயில் என்று தெரிந்தது. பப்பு பாஸ் பண்ணி தங்க மெடல். கஜராஜூக்கு இன்னும் மூன்று சப்ஜெக்ட் இருந்தது.

பார்த்திபன் குண்டு. நடராஜன் முதல் வருஷத்தில் இரண்டாவது ராங்க்கில் பாஸ் பண்ணியிருந்தான். ரத்தன்லால் என்கிற வடக்கத்திக்காரன் முதல்! அவன் சிவப்பாக இருப்பதால் மார்க் நிறையப் போடுகிறார்கள் என்று நடராஜன் நினைத்தான். ஃபூர்னியே கோடைக் கானல் போயிருந்தார். கோவிந்த ராவ், கஜராஜ் இருவரும் வருவார்கள் என்று தோன்றவில்லை. புதிதாக அட்மிட் ஆனவர்களை நடராஜன் மற்ற சகாக்களுடன் சுவரில் உட்கார்ந்து கொண்டு, ''என்ன பிரதர் வெங்கடேஸ்வராவா?'' என்று கலாட்டா செய்தான். உடன் வந்த அப்பாக்களையெல்லாம் கூப்பிட்டு சீரிய ஸாக விசாரித்துக் கொண்டிருந்தான். ஒரு நோஞ்சான் பையனை ஸ்டேஷனுக்குப் போய் பாக்கு வாங்கி வரச் சொன்னான்.

மீனாட்சி சுந்தரம் என்கிற பையனை மின்னு என்று கூப்பிட்டான்.

நடராஜன் ராங்க்கைப் பார்த்து அவனுக்கு நிறையப் பேர் சினேகிதர்கள் ஏற்பட்டார்கள். சென்ற வருஷம் ஹாஸ்டலில் சேர்ந்தபோது இருந்த தயக்கம், பயத்துக்கு இந்த வருஷம் ஹாஸ்டலே தன்னுடையது போல் இருந்தது. பப்பு பம்பாயில் ட்ரெய்னிங்கில் இருப்பதாக வும் ஜி.ஆர்.இ. டோஃபெல் எல்லாம் எழுதி இருப்பதாக வும் கடிதம் போட்டிருந்தான்.

ப்ரொபஸர் ஃபூர்னியே வந்த மாத்திரத்தில் அந்தப் பெண் எடுப்புச் சாப்பாடு எடுத்துச் சென்றாள். இந்த முறை வயிறு பூசிவிட்டாற்போல இருந்தது.

வெறும் காற்று அடித்து இலைகளை விரட்டியது. டெம்பரேச்சர் நாற்பத்தொன்று என்றெல்லாம் போனது. வானம் மழை என்று அடிக்கடி பொய் சொல்லியது. பப்புவும் கஜராஜும் ஏறக்குறைய ஒரே தினத்தில் திரும்ப வந்தார்கள்.

''என்ன பப்பு வந்துட்டே?''

''ட்ரெய்னிங் முடிஞ்சு போச்சு. வந்தாச்சு.''

''வேலைக்குப் போகலை?''

''டில்லியில் கிடைச்சுது. வெயில்! இண்டர்வ்யூவுக்குப் போயிருந்தேன். ஆனா அந்த வெயில் நமக்குத் தாங்காதுப்பா. ரெண்டு மூணு அமெரிக்கன் யூனிவர்ஸிடில அட்மிஷன் கிடைச்சிருக்கு. செப்டம்பர்லதான் போகணும். அதுவரைக்கும் காலேஜ்லயே லெக்சரரா இருக்கலாம்னுட்டு திரும்பி வந்துட்டேன்.''

'அப்ப எனக்கு நீ லெக்சரரா?

''ஆமாம். உனக்கு, கஜராஜுக்கு, கோவிந்த ராவுக்கு'' என்று சிரித்து, ''நட்டு, உன்னைப் பார்க்கத் தாண்டா திரும்பி வந்தேன்'' என்றான்

## 15

ஒரு வருடத்தில் என்ன மாற்றங்கள்! கஜராஜும் நடராஜனும் ஒரு கிளாஸ். பப்பு இவர்கள் இருவருக்கும் வாத்தியார் கோவிந்தா ஒரு வருஷம் கிட்டே வந்து உத்திரவாதமாக அடுத்த வருஷம் இவர்களுடன் சேர்ந்து கொள்ளத்தான் போகிறான்!

''த பாரு மொரம் ராஸு

''மொரமா, அது என்ன கோவிந்தா?''

''மொரம். ட்ரீ! அதோ பாரு. அது சின்னச் செடியா இருந்தப்ப இந்த ஹாஸ்டலுக்கு வந்தேன். ஹூம், நீங்க பாஸாயிட்டுப் போயிருவீங்க. நானும் கஸக்கோலும் குண்டி தேச்சுக்கிட்டு இங்கதான் இருக்கப் போறோம். கஜூ, எனக்காவது டுபாக்கோ மாமனார் உண்டு. ஃபாதர்-இன்-லா! உனக்கு யாருடா?''

"பப்பு மாதிரி ஆளுங்கள்ளாம் சொல்லித் தந்தா உருப்படுவோமா?"

"ஏண்டா?"

"சரியான ஹோமம்" என்றான். நடராஜன் புரியாமல் பார்க்க, கஜராஜ் அவனைப் பார்த்து "இவனைப் பாரு! பொட்டி! டபுள் ஓ! ஸ்லாம் பாம்!"

புரிந்துகொள்ள விருப்பமில்லாமல் நடராஜன் அங்கிருந்து விலக, கோவிந்தா கஹ்ஹஹ்ஹ என்று சிரித்தான். மாதவி சென்குப்தா ஊரிலிருந்து திரும்பி வந்தபோது நோட்டிஸ் போர்டில், "வெல்கம் மாதவி, மை ஸ்வீட்ஹார்ட்" என்று யாரோ எழுதி வைத்திருந்ததை சென்குப்தா மவுனமாகப் பார்த்துக் கிழித்துப் போட்டார். புதிய மெஸ் செக்ரட்ரி வியாழக்கிழமை தோசைக்குப் பதிலாகப் பூரி என்று பிரமாதமாக நோட்டீஸ் ஒட்டியிருந்தான். சில லெக்சரர்கள் ராஜீநாமா செய்துவிட, கிளாஸ் நடக்கவில்லை. 'நான்-டீச்சிங் ஸ்டாஃப்' ஸ்ட்ரைக் பண்ணப் போவதாக பயமுறுத்திக் கொண்டிருக்க, கஜராஜ், தான் மாணவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர்களுக்கு ஆதரவு தருவதாக வாக்களித்தான்.

தேர்தல் பிரமாதமாகத்தான் நடந்தது. ரெண்டு வருஷத்துக்கு ஒருமுறை தேர்தல் அது. கஜராஜ் டை கட்டிக்கொண்டு சேவித்துக்கொண்டு ஆப்செட் லித்தோவில் மூன்று கலரில் ஃபாஸ்டர் அடித்திருந்தான். அவனுக்கு எதிராக ப்ரேம் ஷீல் என்கிற வடக்கத்திக் காரன், தன்னைத் தேர்ந்தெடுத்தால் என்ன செய்வேன் என்று ஆக்கபூர்வமாக நோட்டீஸ் அடித்து விநியோகித்தான்.

நடராஜனும், மறைமுகமாக பப்புவும், ஏன், கோவிந்தராவ் கூட ப்ரேம் ஷீல் பக்கம் உழைத்தார்கள்.

பார்த்திபன், வேணுகோபால், குண்டுராமு எல்லாரும் ஒலிபெருக்கியெல்லாம் வைத்து கஜராஜ் பக்கம் உழைத்தார்கள். பரபரப்பாக இருந்தது தேர்தல். போலீஸ் வண்டியொன்று காம்பஸுக்கு வெளியே காத்திருக்க, சென்குப்தாவும் சிவில் ப்ரொபஸர் சின்னசாமியும் ரிட்டர்னிங் ஆபீசர்ஸ். ரூம் ரூமாகப் போய் வாக்காளர்களை பாண்ட் மாட்டி அழைத்துக் கொண்டு வந்து தொண்ணூறு சதவிகிதத்துக்கு மேல் ஓட்டுப் பதிவு.

ராத்திரியே எண்ணவேண்டும் என்று அடம் பிடித்தான் கஜராஜ். சாராய பாட்டில்கள் வெற்றி கொண்டாட வாங்கி வைத்திருந்தார்கள். சின்னசாமி இருட்டில் பல்பு வெளிச்சத்தில் எண்ண மாட்டேன் என்று சொல்லி ஓட்டுப் பெட்டிகளை மூடிக் காவல் வைத்துப் பூட்டிவிட்டார், மறுநாள் ஞாயிற்றுக் கிழமை எண்ணிக் கொள்ளலாம் என்று. கஜராஜ் ராத்திரி ரூம் ரூமாக வந்து, அவனுக்கு எதிராக உழைத்தவர்களையெல்லாம் சத்தம் போட்டான். வரம்பில்லாமல் கெட்ட வார்த்தைகளை உபயோகித்தான் 'வடநாட்டு அடிவருடிகள்' [ஷீல் பஞ்சாபியாம்], 'மேனேஜ்மெண்ட் அடிவருடிகள்' என்றெல்லாம் பேசினான். கோவிந்தா, ''தோத்துப் போகப் போறான். அதான் கத்தறான்'' என்றான்.

ஓட்டு எண்ணும்போது முதல் மணி நேரத்திலேயே தெரிந்து விட்டது. அத்தனை போஸ்டர் அடித்துச் செலவழித்திருந்தாலும் கஜராஜ் 256 ஓட்டு வித்தியாசத்தில் தோற்றுப் போயிருந்தான் ப்ரேம் ஷீலை மலர் மாலை போட்டு ஓப்பன் ஜீப்பில் வைத்து சேவித்துக் கொண்டே ஹாஸ்டல் முழுவதுமாகச் சுற்றி வந்து, கஜராஜ் ரூமுக்கு எதிரே காட்டுக் கத்து கத்தினார்கள். ப்ரேம், கஜராஜின் அறைக்குச் சென்று, ''நோ ஹார்ட் ஃபீலிங்க்ஸ்'' என்று கை குலுக்கினாலும், கஜராஜின் பார்வையில் கத்திகள் தெரிந்தன. ''டேய் நட்டு, நீ எங்கே போயிருவே? உங்க கிளாஸ் ஆளையே சப்போர்ட்

பண்ணமாட்டே? ஒரு தமிழனை சப்போர்ட் பண்ண மாட்டே இல்லை! எங்க போயிருவ பார்க்கலாம். உன் வண்டவாளம் எல்லாம் வெளிய வருதா இல்லையா பார்க்கலாம்'' என்றான். நடராஜனுக்குப் பயமாக இருந்தது.

பப்பு, ''அப்படித்தான் பேசுவான். தோத்த ஆவேசம். கவலைப்படாத, ஏதாவது வாலாட்டினா அவனை ரஸ்டிகேட் பண்ணிரலாம். நான் இப்ப ஸ்டாஃப். ஞாபகம் வெச்சுக்க. எதுக்கும் அவனைக் கூப்பிட்டு நான் சொல்லிர்றேன்'' என்றான்.

நடராஜனுக்கு இதெல்லாம் கலக்கமாக இருந்தாலும் மின்னுவிடமிருந்து வந்த கடிதம் உற்சாகம் அளித்தது. ''அம்மாவும் அப்பாவும் எனக்குத் தீவிரமாகப் பிள்ளை பார்த்துக் கொண்டிருந்தாலும் அப்பா ரொம்ப ரொம்ப ஜாதகப் பைத்தியமாக இருப்பது ஒருவாறு சௌகரியமாக இருக்கிறது. வாய்க்காலில் ஜலம் வந்துவிட்டது. காகிதப் பூக்களை மிதக்கவிட்டு அதில் உங்களுக்குச் செய்திகள் அனுப்புகிறேன். எப்போது மறுபடி மயிலாப்பூர் வர சந்தர்ப்பம் கிடைக்கும் என்று காத்துக் கொண்டிருக் கிறேன். இதுவரை அபாயகரமானதாக எதும் நிகழ வில்லை. இதற்கு நீங்கள் பதில் எழுத வேண்டாம் நன்றாகப் படித்து பாஸ் பண்ணிவிட்டு வரவும். இதுவரை சமாளித்து விடலாம் என்றுதான் தோன்றுகிறது. எனக்குப் புதுசாக ஒரு தோஷம் கண்டுபிடித்து, ஆறு மாசம் எதோ ஹோமம் பண்ண வேண்டும் என்று ஒரு அனுமார் ஜோசியர் சொல்லிப் போயிருக்கிறார். அவர் வாழ்க! இப்படிக்கு மின்னு'' போன்ற கடிதங்கள், ஒருவழிக் கடிதங்கள், நடராஜனைக் கிறுக்கனாக்கி யிருந்தன.

கண்ட கண்ட வேளைகளில் கடிதத்துக்கு முத்தம் கொடுத்துக் கொண்டிருந்தான். மின்னுவைத் தொட்ட

போது ஏற்பட்ட உணர்ச்சிகளையெல்லாம் ஞாபகப் படுத்திக் கொண்டான்.

மாதவி சென்குப்தா வெக்கேஷனுக்கு ஊர் சென்றிருந்தவள் திரும்ப வந்தபோது கொஞ்சம் மாறியிருந்தாற் போலத் தோன்றியது. தலைமயிரையோ, வகிடையோ எதையோ மாற்றி விட்டிருந்தாள். சென்குப்தா வழக்கம் போலத்தான் இருந்தார். கஜராஜ் அவர்கள் வீட்டுக்கு சேவகம் பண்ணுவதை விடவில்லை. மாதவி பின்னாலேயே சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் அலைந்தான். சிரித்துப் பேசிக்கொண்டு டென்னிஸ் கோர்ட்டில், காண்டீன் வாசலில், புட்பால் மைதானத்தில்...மற்ற பேர் தப்பாகப் பேசலாம் என்பதைப் பற்றி சென்குப்தாவோ, மாதவியோ, கஜராஜோ கவலைப்படுகிறாற் போலத் தெரியவில்லை.

ஒருதினம் நன்றாக மாட்டிக்கொள்ளப் போகிறான் என்றுதான் பேசிக் கொண்டார்களே தவிர, நடைமுறையாக ஏதும் செய்யத் தெரியவில்லை. ப்ரொபஸருக்குத் தன் மனைவி மேல் அசைக்க முடியாத நம்பிக்கை இருக்க வேண்டும்.

''இல்லைடா, ப்ரொபஸருக்கு கட்ஸ் இல்லைடா'' என்றான் பப்பு. அவன் சொல்லித் தருவது மிக நேர்த்தியாக இருந்தது. நெட்வொர்க் அனலிஸிஸ் போன்ற அத்தனை கஷ்டமான பாடத்தை கல்கியின் 'பார்த்திபன் கனவு' போல சுவாரஸ்யமாகச் சொல்லிக் கொடுக்க பப்புவால்தான் முடியும். அவனை மாணவர்கள் எல்லோரும் சூழ்ந்துகொள்ள, பாச்சலர்ஸ் ஸ்டாஃப் குவார்ட்டர்ஸில் பப்பு பல இளம் மாணவர்களை அறைக்கு அழைத்து அரிஸ்டாட்டில் போலப் போதித்தான்.

பப்புவின் அறையில் மர்லின் மன்ரோவிலிருந்து கலிலியோ வரை படங்கள் ஒட்டியிருக்கும். பப்புவுக்கு எது எப்போது பிடிக்கும் என்று சொல்ல முடியாது. காரனியாவின் முற்றுப்புள்ளியில்லாத, பாரா இல்லாத நாவலை ஒருமுறை படித்துக் கொண்டிருப்பான். ஒரு முறை சரோஜாதேவியின் 'வலிக்கும் இரவுகள்.'

அறைக்குள் சென்றபோது பப்பு அவனைப் பார்த்ததும் முகமலர்ந்து தோளில் கை வைத்து முதுகில் தட்டிப் பக்கத்திலே உட்கார வைப்பான். இந்த முறை போனபோது பப்பு ரொம்ப கோபத்தில் இருந்தான். ''நட்டு,உங்கிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும்.''

''என்ன பப்பு?''

''இந்த லெட்டரைப் பாரு.''

டைரக்டருக்கு எழுதப்பட்டிருந்த கடிதம். ஜி. செல்வ குமார் என்கிற பையனின் அப்பா எழுதிய கடிதம். அதைப் படித்து முடித்ததும் நடராஜன் பப்புவை நிமிர்ந்து பார்த்து, ''அநியாயம்'' என்றான். ''இது எப்படி?''

''எல்லாம் கஜராஜ் செஞ்ச வேலை. நட்டு, நான் உங்க மாதிரி பாய்ஸ் கூட சிநேகிதமாக இருந்தது வாஸ்தவம்தான். என்கிட்ட சில அன்கன்வென்ஷனலான அபிப்ராயங்கள் இருக்கலாம். கொள்கைகள் இருக்கலாம். ஆனா இந்த மாதிரி நான் எப்பவாவது நடந்துண்டிருக்கறனா? என்ன ஒரு அநியாயம் பார்த்தியா?''

''டைரக்டர் என்ன சொன்னார்?''

''அவர் நல்லவர். எங்கிட்டயே கடுதாசியைக் கொடுத்துட்டார், இந்த மாதிரி கடிதம் வராம பார்த்துக்க என்று. இது நிச்சயம் கஜராஜ் செய்கிற விஷயம் நட்டு. எனக்காக ஒரு காரியம் செய். இந்த செல்வகுமாரைப் போய்ப் பார்த்துக் கேளு.''

''என்ன கேக்கணும்?''

''அவன் அப்பாகிட்ட அவன் கம்ப்ளெயிண்ட் பண்ணினானான்னு எனக்கு நேராகக் கேக்கறதில கொஞ்சம் தயக்கம் இருக்கிறதைப் புரிஞ்சுப்பேன்னு நினைக்கிறேன்.''

செல்வகுமாரைக் கேட்டதில் சத்தியமாக அவன் அம்மாதிரி அப்பாவுக்கு, யாருக்கும் கடிதம் எழுதவில்லை.

''பப்பு என்ன மாதிரி லெக்சரர்! அவர்மேல் கோள் சொல்வேனா?''

''செல்வா, இதைப் போய் நீ டைரக்டர் கிட்ட சொல்வியா?''

''தாராளமா.''

'அப்ப கஜராஜை ஒழிச்சுக் கட்டிரலாம்.'

அந்த சந்தோஷச் செய்தியைப் பப்புவிடம் சொல்லிவிட்டுத் திரும்பி வந்த கையோடு அந்த அதிர்ச்சி தரும் செய்தி கிடைத்தது. செல்வகுமார் டைரக்டரிடம்போய், அந்தக் கடிதத்தில் கண்டிருப்பது யாவும் மெய்யென்று சொல்லி விட்டதாகவும், டைரக்டர் வேறு வழியின்றி பப்புவை ராஜினாமாக் கடிதம் கொடுக்கும்படியாகச் சொல்லிவிட்டதாகவும் செய்தி கிடைத்தது. பதறிப் போய் பப்புவின் அறைக்குச் சென்றபோது அவன் புத்தகங்களை அட்டைப் பெட்டியில் அடுக்கிக் கொண்டிருந்தான்.

''வா நட்டு! நீ எனக்காக எடுத்துக்கிட்ட முயற்சிக்கெல்லாம் தாங்க்ஸ். ஆனா...''

''பப்பு, சத்தியமா சொல்றேன். அந்த செல்வகுமார் எங்கிட்ட ஒரு மாதிரி சொன்னான். ஆனா டைரக்டர்கிட்ட வேற மாதிரி சொல்லி விட்டான்.''

''கஜராஜ் அவனைப் பயமுறுத்தியிருக்கான்! த பாரு நட்டு, ஒரே ஒரு ஆளு கஜராஜ்! அவனுடைய அராஜகத்தை அடக்க முடியவே இல்லை. அவன் எலக்ஷனல தோத்த கோபத்தை எம்மேல இப்படி அபாண்டமாப் பழி சுமத்திக் காட்டறான். எனக்கு அப்படியே இந்த கஜராஜுங்கறவனைக் கழுத்தை நெரிச்சுக் கொன்னுடலாம் போல ஆத்திரம் வர்றது. சமூகம், சட்டம், கட்டுப்பாடுகள் இருக்கு. ஆயிரம் ஷரத்துக்கள் இருக்கு!''

''ஒரு ஆளு என்ன கலக்கு கலக்கறான் பாரு ஹாஸ் டலையே!''

''இப்ப 'நான்-டீச்சிங் ஸ்டாஃபோ'ட சேர்ந்துண்டு ஸ்ட்ரைக் வேற ஒண்ணு ஆர்கனைஸ் பண்ணி உங்களை கிளாஸுக்குப் போக விடாம பண்ணப் போறான். இதுக்கு ஒரு நியாயம், இதுக்கு ஒரு எல்லையே இல்லையே! யாராவது இவனை...''

''ரிஸைன் பண்ணிட்டியா பப்பு?''

''ஆமாம்.''

''இது ஒரு விதத்தில கோழைத்தனம் இல்லையா? உம்மேலே குற்றம் எதும் இல்லாம இருக்கிறப்ப?''

''இதுல சிக்கல் என்னன்னா எம்மேல குற்றமில் லைன்னு அப்பழுக்கில்லாம சொல்ல முடியாது'' என்று நிமிர்ந்து நடராஜனைப் பார்த்தான். நடராஜன் பேச வில்லை.

''இருந்தாலும் நான் ஒண்ணாந்தேதி விட்டுட்டுப் போறதுக்குள்ள இவனை ஏதாவது வழி வெச்சுட்டுத் தான் போகப் போறேன்'' என்றான்.

அறைக்குத் திரும்பியபோது மின்னு மயிலாப்பூர் வரப்போவதாகக் கடிதம் வந்திருந்தது.

# 16

மின்னு வந்திருக்கிறாள் என்று தெரிந்ததும் உடனே சட்டை பளபளப்பாக இரவல் வாங்கிப் போட்டுக்கொண்டு உற்சாகமாகத் திருவல்லிக்கேணிக்குக் கிளம்பிவிட்டான். மாம்பலத்தில் இறங்கி நடக்கும்போது மின்னுவுக்குப் பூ வாங்கிக்கொண்டு போகலாம் என்று உத்தேசித்தான். அவர்கள் வீட்டில் சின்னச்சின்னதாக நிறையப் பெண்கள் இருப்பது ஞாபகம் வரவே அந்த யோசனையைக் கைவிட்டான்.

அங்கே போனபோது மின்னு நடராஜனைத் தேடிக் கொண்டு ஹாஸ்டலுக்குத்தான் போயிருப்பதாகச் சொன் னார்கள்.

''தனியாவா?''

''இல்லை, கூட விசுவநாதன் போயிருக்கான். என்னவோ அவசரமா உன்னைப் பார்க்கணும், உன் னோட பேசணும்னு இருந்தாப்பா!''

'அப்படியா' என்று யோசித்தவாறே திரும்பினான். என்ன அவசரம்? மறுபடி கல்யாண முயற்சியாகத்தான் இருக்கும்! பாவம் மின்னு, எத்தனைதான் கல்யாண அலைகளைத் தடுப்பாள்! பாழாய்ப்போகிற படிப்பு முடிந்து தொலைத்து, வேலை கிடைத்து... இன் னும் எத்தனை வருஷம், எத்தனை மாசம் கல்லாட்டம் பாக்கியுள்ளது? மின்னு என் கண்ணே, அதுவரை சமா ளிக்க உன்னிடத்தில் தைரியமும் தந்திரச் செயல்களும் இருக்கின்றனவா! பஸ்ஸே! ஓடேன் வேகமாக! என் மின்னுவைப் பார்க்கப் போகிறேன் என்பது உனக்குத் தெரியாதா? எச்சில் பண்ணும் கண்டக்டரே, சீக்கிரம் டிக்கெட் கொடேன். எத்தனை நேரம் வியர்வைக் கசகசப் பில் எங்களைக் காக்க வைப்பாய்? வாகனங்களே நகருங்

களேன், விளக்குகளே பச்சை காட்டுங்களேன், நான் என் மின்னுவைப் பார்க்க ஓட்டமாக ஓடவேண்டும்!

திரும்ப ஹாஸ்டலுக்கு வந்தபோது, லேசாக மாலை வேளை. இருட்டிவிட்டது. அறைக்குப் போனால் அங்கே விசுவநாதன், [வயது பத்து] அமர் சித்ர கதா படித்துக் கொண்டிருந்தான். ஹாஸ்டல் தினத்துக்கு வந்திருந்து அடிக்கடி கக்கூஸ் போக வேண்டும் என்று தொந்தரவு பண்ணியவன்.

''எங்கடா மின்னு?''

''டென்னிஸ் கோர்ட்டுக்குப் போயிருக்கா!''

''எதுக்குடா?''

அவன் 'சாந்த துக்காராமி'லிருந்து நிமிர்ந்து பார்த்து, ''இந்த ரூம்ல இருக்காரில்லே நடராஜ மாமா, அவரைப் பார்க்கப் போயிருக்கா!''

''டேய் அந்த மாமா நான்தாண்டா!''

''நீயா! அப்ப டென்னிஸ் ஆடிண்டிருக்கிறதா ஒரு ரெண்டு பேரு வந்து மின்னு சித்தியை அழைச்சுண்டு போனாளே!''

''ரெண்டு மாமாவா? அதில ஒருத்தன் தடியா இருந் தானா?''

''ஆமா, அரை டிராயர்.''

கஜராஜ்! அதிர்ந்து போய் டென்னிஸ் கோர்ட்டுக்கு ஓடினான். அங்கே பந்து பொறுக்கும் பையனுடன் ஸிவில் ப்ரொபஸர் ஆடித் தோற்றுக்கொண்டிருந்தார். கோர்ட்டு வெறிச்சென்றிருந்தது.

''டேய் கிருஷ்ணய்யா, கஜராஜ் வந்தானா இங்க?''

''இல்லிங்களே... தண்டவாளப் பக்கம் ஒரு பொண்ணைக் கூட்டிக்கிட்டு ஒரு கால் அவர் முன்னால போய்க் கிட்டு இருந்தாங்க கஜராஜூம் பார்த்திபனும்!''

அய்யோ!

தண்டவாளத்தருகில் வேலியோரத்தில் ஓடினான். முழுசாக இருட்டிக்கொண்டிருந்தது. தண்டவாளத்தின் ரயில் தீட்டல் மட்டும் கடன் வாங்கிய ஒளியில் பளிச் சென்று படுத்திருந்தது. எதிரே இரண்டு பேர் வேகமாக நடந்து வருவது தெரிந்தது. கிட்டத்தில் வந்ததும், ''கஜராஜ் நில்லு!''

''யார்ப்பா? ஓ! நம்ம நட்டு!''

''எங்க அந்தப் பொண்ணு?''

''எந்தப் பொண்ணு! என்னடா பாத்து சொல்றான் இவன்!''

''கஜராஜ், எனக்குக் கெட்ட கோபம் வரும்!''

''உனக்கெல்லாம் எதுக்கு நாயனா பொண்ணு? அதான் பப்பு இருக்கானே!''

நடராஜன் கீழேயிருந்து கல் பொறுக்கி அவன் மேல் வீச, அவன் குனிந்துகொள்ள, ஹாங்கர் தகரத்தின் மேல் ஆக்ரோஷமாக மோதிச் சப்தமிட்டது.

அப்போதுதான் மின்னுவின் குரல் கேட்டது. மின்னு தான்! எந்த சந்தர்ப்பத்திலும் அதை மறக்கமாட்டான். சந்தோஷத்தில், சாகசத்தில், துக்கத்தில், திகிலில்.

இப்போது திகில் குரல்தான். அதை நோக்கிக் கலக்கமாக ஓட, ஒன்றிரண்டு பேர் தண்டவாளம் தாண்டி, 'என்ன, என்ன' என்று ஓடி வர, கஜராஜும் பார்த்திபனும் இருட்டில் மறைய, வேலி ஓரத்திலிருந்து மின்னுவின் குரல் கேட்டது.

''யாராவது வாங்களேன். யாராவது வாங்களேன்.''

''மின்னு! மின்னு!''

''யாரு? யாரு?''

''நான்தான் நடராஜன். வந்துட்டேன் மின்னு!''

''யாருப்பா பொண்ணு?''

''அந்த ரெண்டு பேரும்... அந்த ரெண்டு பேரும்...?''

''மின்னு சொல்லாதே.''

''அவங்க என்னை வந்து...

''வேண்டாம் மின்னு. சொல்லாதே! அதெல்லாம் சொப்பனம்!''

மெல்ல அவளைக் கைத்தாங்கலாக நடத்தி அழைத்து வர அரை மணி நேரம் ஆகிவிட்டது. ''மின்னு சித்தி! மின்னு சித்தி! எங்க போயிட்ட?''

''விசுவநாதா, நீ நகரு!எதித்தாப்பல 26ஆம் நம்பர்ல ஒரு மாமா இருப்பார். நான் அவசரமா கூப்பிட்டேன்னு சொல்லு!''

''மின்னு சித்தி, விழுந்துட்டியா?''

''நீ போடா!''

மின்னு படுத்துக்கொள்ள மறுத்தாள். பிரமிப்பில் இருந்தாள்.

''டென்னிஸ் கோர்ட்டில இருக்காங்கன்னு சொல்லி என்னைக் கூட்டிண்டு போறதா சொன்னா ரெண்டு பேரு! பார்த்தா நல்லவாளா இருந்தா. தேனொழுகப் பேசினா. என்னை வேலிப் பக்கமா கூட்டிண்டு போய் கீழே சாச்சு இடுப்பு மேல, மார் மேல எல்லாம் கை போட்டான் கடன்காரப் பாவி! நான் ஒரு கத்துக் கத்தினேன் பாருங்கோ! அப்படியே அவன் தலைமயிரைப் புடிச்சு உலுக்கி விரலை ஒண்ணொண்ணா கடிச்சுட்டேன். அப்படியும் திமிர்றான். ரெண்டு பேரா இருக்கான்.

நாடாக் கயிற்றைக் கழட்டறான். நல்ல வேளை, அதுக்குள்ள யாரோ ஒருத்தர் ரெண்டு பேர் வந்து, ''ஏய்?''ன்னு சத்தம் போட்டா. பயந்துண்டு விட்டுட்டா.

''நீங்க சித்த வெளியில போறீங்களா? பாவாடை தாவணியைச் சரியாக் கட்டிக்கணும்.''

நடராஜன் வெளியே வந்து நின்றான். அவன் முகத்தின் தசை நார்கள் நடுங்கின. மயிர்க்கால்கள் நின்று கொண்டன. வயிற்றில் அமிலம் பொங்கியது.

கஜராஜ்!

பப்புவும் சின்னப் பையனும் ஒட்டமும் நடையாக வந்து சேர, ''என்ன நட்டு?''

''கஜராஜும் பார்த்திபனும் மின்னு மேல... மின்னு மேல...'' சிறுவனைப் பார்த்தான். ''டேய் உள்ளே போடா!''

''அடப்பாவி! எப்படிரா!''

''என்கிட்ட அழைச்சுண்டு போறதா சொல்லி ஏமாத்தி... பப்பு ஐ வாண்ட் டு கில் ஹிம். எனக்கு வேற எதுவுமே முக்கியமில்லை. பப்பு ஐ ஜஸ்ட் வாண்ட் டு கில் தட் ஸன் ஆஃப் எ பிட்ச்! அவனைக் கொல்லலைன்னா நான் ஜன்மம் எடுத்தது வீண்! பப்பு, ஏதாவது ஒரு வழி சொல்லு. ஏதாவது ஒரு ஆயுதம் கொடு. நான் அந்தப் பொறுக்கிப் பயலைக் கொன்னே ஆகணும். அப்படியே எனக்கு ரத்தம் பொங்குது.''

அறைக்குள்ளே விசும்பல் ஒலி கேட்டது.

''டேக் இட் ஈஸி நட்டு.''

''இன்னிக்கே கொல்லணும்!''

''அதெல்லாம் அத்தனை சுலபமில்லை நட்டு. எனக்கு மட்டும் அவன் மேல கோபமில்லையா? என்னை

அவமானப்படுத்தி வேலையிலருந்து ராஜினாமாச் செய்ய வெச்சான். எனக்கும் அவன் மேல உன் மடங்கு ஆத்திரம் தான்! அதுக்காக என்ன செய்ய முடியும்? இம்மாதிரி பைத்தியக்காரத்தனமா கொலை செய்யப்போறேன், அது இதுன்னு பதறாதே. இந்த மாதிரி எல்லாம் மத்த பேர்கிட்ட பேசாத. தப்பா நினைச்சுப்பா!"

''நினைச்சுக்கட்டும். ஐ டோன்ட் கேர். எனக்கு அவனைக் கொன்னுட்டுத்தான் மறு வேலை!''

''உளறாதே. திங்க்ஸ் ஆர் நாட் தட் ஸிம்பிள். த பாரு, இதைப்பத்தி யார்கிட்டயும் இனிமே பேசாதே!'' பப்பு அவன் தோள் மேல் கை வைத்து, ''இதுக்கெல்லாம் நளினமாப் பழி வாங்கற வழிகள்ளாம் இருக்கு! நீ உள்ள போய் அந்தப் பொண்ணை சமாதானப்படுத்து. மற்ற தெல்லாம் அப்புறம் பார்த்துக்கலாம். இனிமே இதைப் பத்தி மூச்சு கூட விடாதே! என்ன?'' பப்பு நடராஜனின் தோள் மேல் கைவைத்து அழுத்தினான்.

நடராஜன் மெல்லக் கதவைத் திறந்து—அறைக்குள் சென்றபோது அந்தச் சிறுவன் கட்டில் விளிம்பில் சித்திரக் கதை படித்துக் கொண்டிருக்க, மின்னு வெற்றுப் பார்வை பார்த்துக் கொண்டு வீற்றிருந்தாள். மூக்கு சிவந்திருந்தது. நடராஜன் உள்ளே நுழைந்ததைக் கவனிக்கவில்லை.

''மின்னு மின்னு! ஐ'ம் ஸோ ஸாரி!''

உள்ளங்கையால் நெற்றியில் அடித்துக் கொண்டு, ''என் விதி! என்னை செருப்பால அடிச்சுக்கணும். இங்க வந்ததே தப்பு!''

''மின்னு, நீ பார்த்துண்டே இரு. அவனை... அவனை...''

மின்னு அவனை நிமிர்ந்து பார்த்தாள். ''நீங்களா? ஹ்ம்! வாடா விச்சு!''

''மின்னு! மின்னு! நான் கூட வரேன் மின்னு. இரு! இரு!''

அவள் எதுவும் பேசாமல் விருவிருவென்று நடக்க, அவள் பின்னால் ஸ்டேஷன் வரை நடந்தான். டிக்கெட் வாங்கும்போதோ, பெண்கள் பெட்டியில் ஏறி உட்காரும் போதோ, மின்னு நடராஜனிடம் பேசவே இல்லை. ட்ரெய்னுடன் சற்று ஓடிவிட்டுத் திரும்புகையில் மூன்றாவது பாதையில் ஒரு எக்ஸ்பிரஸ் ஜகஜகவென்று வேகமாகக் கடக்க, நடராஜன் ஒருகணம் பாய்ந்து விடலாமா என்று யோசித்தான். இல்லை. இன்னும் இல்லை. ஒரே ஒரு கடமை பாக்கியிருக்கிறது. கஜராஜைக் கொல்லுவது. இந்த முறை நிஜம்! எனக்கு வேறு எதுவும் வாழ்வில் பாக்கியோ, எதிர்பார்ப்போ இல்லை. கஜராஜைக் கொன்றதும் நான் பிறந்ததன் பலன் கிடைத்து விடுகிறது...

கஜராஜின் அறைக்குச் சென்று கதவைக் காலால் உதைத்துப் பார்த்தான். பூட்டியிருந்தது.

''என்னடா நட்ஸ், எதுக்கு அவனை இடிக்கிறே!''

''அவனைக் கொல்லணும்டா!''

''ப்ரொபஸர் வீட்ல பாத்தியா?''

சென்குப்தாவின் வீட்டில் கதவைத் தட்டியபோது மாதவிதான் திறந்தாள்.

''எஸ்!''

''மாடம், கஜராஜ் வந்தானா?''

அவள் அவனை சந்தேகமாகப் பார்த்து, ''இல்லையே ஏன்?''

''கொல்ல வேண்டும் அவனை!''

மாதவி அவனைப் பார்த்துப் புன்னகைத்து விட்டு, ''டு தட்! குட்நைட்!'' என்று கதவைச் சாத்தினாள்.

# 17

ராத்திரியெல்லாம் கஜராஜைக் கொல்லுவது பற்றியே யோசித்துக் கொண்டிருந்தான். இதயம் எரிந்தது. மின்னுவுக்கு நிகழ்ந்ததைப் பற்றி நினைக்கவே விரும்பவில்லை. தூக்கம் என்பது மருந்துக்கும் வர வில்லை. சன்னல் வழியாக கஜராஜ் வந்து சேரும் நேரத்தை எதிர்பார்த்து நோக்கிக் கொண்டு விழித்திருந் தான்.

எப்படியேனும் அவனைக் கொலை பண்ணியே தீர வேண்டும். ஆத்திரம் அடங்கிவிடக் கூடாது. படிப்பு முக்கியமாகப் படவில்லை. இப்போது பப்பு சொன்னது போல நளினமான முறைகளையெல்லாம் பயன்படுத்த விரும்பவில்லை. நேராகச் சென்று கஜராஜைக் கூடிய சீக்கிரம் கொன்றுவிட வேண்டும்.

கஜராஜ் சொல்லி வைத்தாற்போல அந்த வாரம் பூராவும் காணவில்லை. எப்படியோ மூக்கில் வியர்த்து எங்கோ ஸிடிக்குப் போய்ப் பதுங்கியிருக்க வேண்டும். கஜராஜையும், பார்த்திபனையும் காணோம். அன்று சாயங்காலம் மின்னுவுக்குச் செய்தது தப்பு என்று அவர்களே உணர்ந்து தலைமறைவாகி விட்டார்களோ? பின் படிப்பதற்குக் கல்லூரிக்கு வரவே மாட்டார்களோ? வகுப்பிலும் காணவில்லையே அவர்களை?

ஒருமுறை டென்னிஸ் கோர்ட்டைத் தாண்டிச் செல்லும்போது சென்குப்தா, ''நொடொராஜ், டிட் யூ ஸீ கொஜோராஜ்?'' என்றார்.

''நோ ஸார், ஐ'ம் லுக்கிங் ஃபார் ஹிம்.''

''ஐ'ம் ஆல்ஸோ லுக்கிங் ஃபார் ஹிம்.''

''ஐ வில் கில் ஹிம் ஸர்!''

''குட்'' என்று சிரித்துக்கொண்டே சென்றார். கொஞ்ச நேரம் கழித்துத் திரும்பிப் பார்த்து. ''சில சமயம் எனக்குக் கூட அவனைக் கொல்ல வேண்டும் போலத் தோன்றுகிறது.''

நடராஜன் அருகில் சென்றான். ''ஸார், நம்ப மாட்டீர்கள். எங்கள் ஊரிலிருந்து ஒரு பெண் என்னைப் பார்க்க வந்திருந்தாள். அவளை ஏமாற்றி லைன் பக்கம் அழைத்துக் கொண்டு போய்...'' ப்ரொபஸர் காத்திருக்க, நடராஜன் ''ஹி மொலஸ்டட் ஹர் ஸர்'' என்றான் கண்களைத் துடைத்துக் கொண்டு.

''ச்சீ, டு பேட்! டு பேட். தட் பாஸ்டர்ட், என் மனைவியிடம் வம்பு செய்தான். மாதவி அவன் கன்னத்தில் அறைந்துவிட்டு அனுப்பியிருக்கிறாள். அதனால்தான் ஒரு வாரமாக அவனைக் காணவில்லை. என்னிடம் பயம். நானும் அவன் வரத்தான் காத்திருக்கிறேன்.''

''பப்புவும் அவனுக்காகத்தான் காத்திருக்கிறான் சார்.''

''யா யா... கொஜராஜ்தான் கடிதம் எழுதினா னாமே!''

''அவனைக் கொல்ல வேண்டுமென்று பலபேர் காத்திருக்கிறார்கள் ஸார்.''

''வரட்டும் வரட்டும்.''

ஏழு நாளாகியும் வரவில்லை. பப்பு ஒண்ணாம் தேதியிலிருந்து பதவி விலகுவதை மறுபரிசீலனை செய்யும்படி டைரக்டரும் மாணவர் குழுவும் வேண்டிக் கொண்டனர். பார்த்திபன் திரும்பி வந்துவிட்டான். கஜராஜ் எங்கே என்று தெரியவே தெரியாது என்று சாதித்தான். எட்டாம் நாள் கஜராஜ் திரும்பி வந்து விட்டான். நேராக டைரக்டரின் அலுவலகத்துக்குச் சென்றதாகச் சொல்லிக் கொண்டார்கள். நடராஜன்

அவனைச் சந்திக்கவே இல்லை. சென்குப்தாவிடம் போய்ச் சொல்ல விரும்பினால் அவர் யூனிவர்ஸிட்டி போயிருப்பதாகச் சொன்னார்கள். நடராஜன் மத்தியானம் பூராவும் வகுப்புக்குப் போகாமல் நகத்தைக் கடித்துக்கொண்டு யோசனை செய்தான். ''மின்னுவை இந்த மாதிரி செய்ததற்கு அவன் தண்டனை பெற வேண்டாமா?''

''தண்டனையா? என்னடாது? போன வாரம் பூரா அவனைக் கொல்லணும்னு சொல்லிண்டிருந்தே.''

''இப்பவும் அத்தனை ஆத்திரம் இருக்கு பப்பு. ஒரு ஆளைக் கொலை பண்றதுன்னா எப்படி?''

''அதுக்கான சாமக்கிரியைகள்ளாம் வேணும்கறியா, கத்தி கபடான்னு?''

''ஆமாம் பப்பு.''

''கத்தியெல்லாம் ரொம்ப க்ளம்ஸி. அதுக்கு ஒரு கெமிக்கல் பவுடர் இருக்கு. அதைப் பால்ல கலந்து கொடுத்தா நாச்சுரல் டெத் மாதிரியே இருக்கும்!''

''அது எங்க கிடைக்கும்?''

''போஸ்ட் மார்ட்டம்ல தெரியவே தெரியாதாம்.''

''எங்க கிடைக்கும் சொல்லேன்.''

''இண்டியாவில கிடைக்காது.''

''சே...''

''த பாரு நடராஜு, உனக்கு அதுக்கெல்லாம் தைரியம் கிடையாது. மின்னு என்ன சொன்னாள், அவளுக்கு உம்மேல கோபமா?''

''யாருக்குத் தெரியும்! மறுநாளே ஊருக்குப் போயிட்டாளே!''

''அப்புறம் கடுதாசி ஏதாவது வந்ததா அவ கிட்டருந்து? அவ அப்பாகிட்டருந்து?''

''இல்லையே.''

''அப்ப அவளுக்கு ஒண்ணுமே ஆகலைன்னு அர்த்தம். தபாரு, எதாவது கை போட்டிருப்பான். அதுக்குள்ள ஊரைக் கூட்டி ஊளையிட்டிருப்பா! சீரியஸா எதையும் எடுத்துக்காதே.''

''தொட்டது தப்பில்லையா பப்பு?''

''தப்புதான். அதுக்காக உன் வாழ்க்கையை மிஸரபிளா பண்ணிப்பாயா? கொலைங்கறது ரொம்பத் தீவிரமான விஷயம்!''

பப்புவின் அறையை விட்டு வெளியே வரும்போது எதிர்பாராத விதமாக ரொம்பக் கிட்டத்தில் கஜராஜ், ''என்ன நட்டு, மறுபடி பப்பு ரூமுக்குப் போக ஆரம்பிச்சுட்டியா?''

அவனை மௌனமாகப் புழுவே என்பது போலப் பார்த்தான்.

''அந்தக் குட்டி ஷோக்காத்தாண்டா இருந்தா. உனக்கேண்டா அம்மாதிரி கர்ள்ஸ் எல்லாம்? நம்மகிட்ட தள்ள வேண்டியதுதானே?''

நடராஜன் பேசவில்லை. 'இன்னிக்கு ராத்திரி' என்று எண்ணிக் கொண்டான்.

''சென்குப்தா உன்னைப் பார்க்கணும்னாரு.''

''சென்குப்தாவா? மிஸஸ் சென்குப்தாவா?''

''நீயே போய் விசாரி.''

சாயங்காலம் மவுண்ட்ரோடில் சினிமாவுக்குப் போயிருந்தான். மனசு சரியில்லை. சினிமாவில் கவனமே செல்லவில்லை. மின்னுவின் ஞாபகமே வந்தது. அவளை

ஏமாற்றி விட்டேன். அவள் எதிர்பார்ப்பில் தளைந்து விட்டேன். அவள் இனி எனக்குக் கடிதம் எழுத மாட்டாள். நான் எதாவது அவள் முன் தீரச் செயல்கள் செய்து காட்டிக் காப்பாற்றியிருக்க வேண்டும். என்ன செய்திருக்க முடியும்? என் போன்ற கோழைகளால் உள்ளே பொருமுவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?

ராத்திரி கஜராஜின் அறை வாசலில் இரைச்சலாக இருந்தது. சென்குப்தா பெரிசாக சத்தம் போட்டுக் கொண்டிருந்தார். நடராஜன் அருகே சென்று பார்க்க, ''பாஸ்டர்ட், என் மனைவியிடம் இனி வம்பு வைத்துக் கொள்வாயா?'' என்று கன்னாபின்னா என்று குழறுபடியாகப் பேசினார். நன்றாகக் குடித்திருந்தார். கண்கள் சிவக்க 'பத்மாஷ்' என்று திட்டிக்கொண்டே இருந்தவரை பப்புதான் கைத்தாங்கலாக அழைத்துச் சென்றான். நடராஜனுக்கு அதிகம் புரியவில்லை. ஆனால் கஜராஜ் கண்களில் பயம் இருந்ததைத் தெளிவாகப் பார்க்க முடிந்தது.

ராத்திரி தூங்கப் போகுமுன் எதோ ஒரு மாதிரி வயிற்றைப் புரட்டியது. ஏதோ நிகழப் போவது போல மயிர்க்கால்களில் எச்சரிக்கை உறுத்தியது. வேளை கெட்ட வேளையாக மழை பெய்தது. காற்று சன்னலைப் படுத்தியது. மின்னல் அடித்துக் கொஞ்ச நேரம் கரண்ட் போயிருந்தது.

நடராஜன் எப்போது எழுந்தான் என்று தெரியவில்லை. வியர்த்திருந்தது. கனவில் மின்னு அவன் கால்களைப் பிடித்துகொண்டு கெஞ்சினாள். 'உங்க வீரம், படு தைரியம் என்ன ஆறது? உங்களை எல்லாரும் கோழைன்னு சொல்ல மாட்டாளா!'

இருட்டில் அலமாரியைத் திறந்தான். தடவிப் பார்த்ததில் கத்தி தென்பட்டது. சுமார் ஆறு அங்குலம்

நீளமிருந்த கத்தி கூர்மையாகத்தான் இருந்தது. அதிகம் உபயோகப்படுத்தவில்லை. ஓரிரு முறை ஆரஞ்சுப்பழம் நறுக்க உபயோகப்படுத்தியிருக்கிறான். அதை பெல்ட்டில் செருகிக் கொண்டான். மெல்ல நடந்தான். மின்னல் இன்னும் வெட்டிக் கொண்டிருந்தது. நிதானமாகவே நடந்தான். கஜராஜின் அறை திறந்துதான் இருந்தது. மெல்லச் சென்று விளக்கு போடலாமா என்று தயங்கினான். கஜராஜ் கட்டிலில் படுத்திருப்பான். அவனை அணுகி ஒரே குத்து... ஒரே ஓங்கு.

மின்னல் அடித்தது. கட்டில் காலியாக இருந்ததைக் கவனித்தான்.

எங்கே அவன்? காத்திருக்கலாமா? வருவானா? காத்திருக்கலாம்!

பத்து நிமிஷம் காத்திருந்தும் வரவில்லை. ஹாஸ்டல் வாசலில் கூர்க்கா கைத்தடியைத் தட்டிக்கொண்டே செல்வது கேட்டது.

திரும்பத் தன் அறைக்கே வந்துவிட்டான். மழை இப்போது பூராவும் நின்றிருந்தது.

காலை மெஸ்ஸுக்குச் செல்லும்போது முப்பது நாற்பது பேர் கூடிப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஒரு போலீஸ் ஜீப் நின்று கொண்டிருந்தது. நடராஜனுக்குப் பகீர் என்றது. ஸம்திங் ராங்! "என்ன ரமேஷ்?"

"கஜராஜ் செத்துப் போயிட்டான்."

# 18

"கஜராஜ் போயிட்டானா! எப்ப? எங்க?"

"போய்ப்பாரு. நல்லா தரிசனம் ஆவுது! ரெண்டு நாளைக்குச் சோறு வேண்டியிருக்காது." வயிற்றில் பதற்றமா, பயமா, ஆர்வமா என்று இனம் கண்டுகொள்ள முடியாத எண்ணங்களுடன் நடராஜன் மெல்ல அந்தக் கூட்டத்தை அணுகினான். புதிதாகக் கட்டடம் கட்டப் பட்டுக் கொண்டிருக்கும் பகுதியில் சாரம் போட்டு கான்க்ரீட்டுக்கு வலு வரும் வரையில் சவுக்கு மர சப்போர்ட்டு, சிமெண்ட் தொட்டி, செங்கல், தற்காலிக கொடவுன், மணல் மேடு, தூளி இதெல்லாம் கடந்து வெளி விளிம்பில் கஜராஜ் குப்புறக்கிடந்தான். எல்லாரும் பேருக்குப் பேர் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்களே தவிர யாரும் ஏதும் செய்யவில்லை. போலீஸ்காரர் கையில் தேனீர்க் கோப்பை வைத்துக்கொண்டு உக்கிர மாக ஒரே திசையில் பார்த்துக் கொண்டிருந்தார். கூலியாட்களெல்லாம் அடிக்கடி எட்டிப் பார்த்துக் கொண் டிருந்தார்கள். "சின்னப் புள்ளையாட்டமிருக்குது."

"நிஜமாவே கஜராதானா இது?"

"பார்த்திபன் எங்கடா?"

"யர்டராப்பா? இல்லை சூய்ஸைடா?"

"சூய்ஸைடா? நம்ம கஜராஜா! ஹா, நிச்சயம் யாரோ கொலை செய்திருக்காங்க! கழுத்தில பாரு!" நடராஜக்கு கஜராஜ் செத்துப் போய்விட்டான் என்பது இன்னும் நம்பிக்கையாக இல்லை. கிட்டப் போய் எட்டிப் பார்த்து பாடியைப் புரட்டிப் பார்த்து ஊர்ஜிதப்படுத்த வேண்டும் போல இருந்தது. பப்பு வந்து எட்டிப் பார்த்தான். ப்ரொபஸர் எல்லாரையும் விலக்கி எட்டிப் பார்த்தார். மற்ற மாணவர்கள் யாவரும் வகுப்புக்குப்

போகாமல் அங்கங்கே பாராபெட் சுவர்களிலும் மாடிப் படிகளிலும் சிதறி, சிந்தனையுடன் சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தார்கள். ப்ரேம் ஷீல் தான் மாணவர் தலைவன் என்கிற ரீதியில் துரிதமாகச் செயல்பட்டான். பார்த்திபனைத் தேடிக் கொண்டிருந்தார்கள். டைரக்டர் வந்திருந்தார். கஜராஜின் பெற்றோர்களின் விலாசம் தேடினார்கள். மற்றொரு ஜீப்பில் போலீஸ் இன்ஸ்பெக்டர், ''என்னய்யா எஸ்.பி.க்குத் தகவல் சொல்லிட்டியா? யோவ் ஒதுங்குய்யா ஒதுங்கு!''

எல்லோரும் தன்னை ஒரு மாதிரி பார்த்துக் கொண்டிருப்பது உறுத்தியது நடராஜனுக்கு ''வந்துட்டான் பாருடா'' என்று எதற்காகத் தன்னை நோக்கிச் சொல்லிக் கொண்டிருந்தார்கள் என்பதும் புரியவில்லை. போலீஸ்காரர்கள் அந்த இடத்தைச் சுற்றிலும் தடை அமைத்தார்கள். மேலும் ஜீப் வண்டிகள் வந்தன. கரு நீலத்தில் ஒரு வேன் வந்தது. அதில் ரேடியோ அலறியது போலீஸ் அதிகாரிகளுக்கு டைரக்டர் அலுவலகத்தில் டிபன் காப்பி போயிற்று. உடலைத் துணி போட்டு மூடினார்கள். அதை எடுக்கையில் கஜராஜின் மார்புப் பக்கமெல்லாம் ரத்தக்களறியாக இருந்ததும் வாய் திறந்திருந்ததும் மீசையில் ரத்தம் உலர்ந்து ஒட்டியிருப்பதும் தெரிந்தது. வயிற்றைக் கெல்லியது. 'எல்லாரும் என்னையே ஒரு மாதிரி பார்க்கிறார்கள். இல்லை, நானாகக் கற்பனை பண்ணிக் கொள்கிறேன்.' பப்பு, ''நட்டு, கொஞ்சம் வா'' என்று தனியாக அழைத்தான்.

''என்ன?''

''ராத்திரி எங்க இருந்த?''

''ரூம்லதான். ஏன்?''

''இல்லை, கேட்டேன்.''

''என்ன பப்பு? சொல்லிரு, கஜராஜ் எப்படி செத்தானாம்?''

''போஸ்ட்மார்ட்டம் பண்ண எடுத்துப் போறாங்க. அப்புறம்தான் தெரியுமாம். போலீஸ் வந்து இப்ப ஒண்ணும் சொல்லலை. கம்முனு இருக்காங்க.''

''எப்படி செத்தானாம்? எதாவது, யாராவது?''

''ஒண்ணும் சொல்ல முடியலைப்பா, ப்ச்!''

''தற்கொலையா?''

''போலீஸ் அப்படி சொல்றாப்பல தெரியலை. டைரக்டர் ஆபீஸ்ல சுந்தரேசன் கிளார்க் ஒருத்தன் சொன்னான். எஸ்.பி. பேசிக்கிட்டு இருந்தாராம். தே சஸ்பெக்ட் ஃபௌல் ப்ளே!''

''ஃபௌல் ப்ளேன்னா?''

''யாராவது கொன்னிருப்பாங்களோன்னு சந்தேகப் படறாங்களாம். ப்யூர் அண்ட் சிம்பிள் தற்கொலை இது. ஸில்லி!''

பப்புவின் கரங்கள் நடுங்குவதைக் கவனித்தான். ''ஒவ்வொருத்தரா கேள்விகள் கேக்கப் போறாங் களாம்.''

''அய்யோ''

''என்ன அய்யோ, உனக்கென்ன பயமா?''

''எனக்கென்ன பயம்!''

''பைத்தியம் மாதிரி ரூம் ரூமாப் போய் கஜராஜைக் கொல்லப் போறேன்னு கூவிட்டே இருந்தியே, எவ்வளவு டேஞ்சர் பாரு!''

''என்ன சொல்றே பப்பு! நான் இந்தக் காரியத்தைச் செய்திருக்க முடியும்னா?''

''நான் சொல்லலை. போலீஸ் அப்படிச் சொல்லலா மில்லையா? வாயை வெச்சுகிட்டு சும்மா இருக்காம.''

''அப்படிப் பார்த்தா உனக்குக் கூடத்தான் கஜராஜ் மேல வெறுப்பு இருந்தது. உன்மேல பழிசுமத்தி உன்னை வேலைய்யை விட்டு ராஜினாமா பண்ணும்படியா செய்தானே?''

''உளறாதே.''

''நீதான் உளர்றே.''

''நீதானடா கொல்லப் போறேன், கொல்லப் போறேன்னு தண்டோரா போட்டே!''

''அப்படிப் போட்டா அது நிசம்னு ஆயிருமா?''

''சந்தேகம் வருமே! நகத்தில ஊசி குத்தினா வலி தாங்குமா?''

''போதும் பப்பு. உளறாதே.''

சென்குப்தாவின் வீட்டைக் கடக்கும்போது அவர் வாசலில் பைப் பிடித்தபடி, ''பொப்பு!'' என்றார். பப்பு அவரருகில் செல்ல, ''நீயும் வா நட்ராஜ்.''

வீட்டுக்குள் போகும்போது மாதவி தலையைக் கோதிக் கொண்டிருந்தவளை, ''உள்ளே போ'' என்றார். அவள் ஒரு சினிமா பத்திரிகையுடன் சிரித்துக் கொண்டே உள்ளே சென்றாள். பிரம்பு நாற்காலியில் இருவரும் உட்கார, ''என்ன எதாவது தகவல் தெரிந்ததா?''

''இல்லை. ஏதும் தெரியவில்லை. பாடியை எடுத்துப் போயிருக்கிறார்கள் போஸ்ட் மார்ட்டத்துக்கு.''

''தற்கொலைதானே?''

''அப்படி அவர்கள் நினைப்பதாகத் தெரிய வில்லை.''

''பின்?''

''யாரோ செய்திருக்கும் காரியம் என்று சந்தேகப் படுகிறார்கள்.''

''அப்படி உனக்கு யார் சொன்னது?''

''டைரக்டர் ஆபீசில் போலீஸ் ஸூப்ரண்ட்டு டைரக்டரிடம் பேசிக் கொண்டிருந்ததை சுந்தரேசன் கேட்டுக் கொண்டிருந்தானாம்.''

''சேச்சே! இட் மஸ்ட் பி ஸூய்ஸைடு!'' ப்ரொபஸரின் தாடையருகில் தனிப்பட்டுத் தசை நடுங்குவதை நடராஜன் பார்த்தான். அதைப் பார்த்ததும் அவன் கரங்களும் சுயமாக நடுங்க ஆரம்பித்தன.

''நான் ராத்திரி முழுவதும் என் வீட்டில் இருந்தேன். என் மனைவிக்குத் தெரியும். வேலைக்காரனுக்குத் தெரியும்... நடராஜன்தான்...''

இருவரும் கவலையோடு நடராஜனைப் பார்த்தார்கள்.

''என் மனைவி கூடச் சொன்னாள், அவளிடம் வந்து சொன்னானாம் கஜராஜைக் கொல்ல வேண்டும் என்று.''

''ஸார், நான் செய்யவில்லை'' என்றான் அழுத்தமாக. இப்போது அவன் கைகள் பதறவே தொடங்கி விட்டன.

''நடராஜ், யூ ஆர் இன் கிரேட் டிரபிள்!''

''நோ ஸார். நான் ராத்திரி என் அறையிலிருந்தேன்.''

''சாட்சி யாராவது இருக்கிறார்களா?''

''சிங்கிள் ரூம்ல எப்படி சாட்சி?''

''உன்னை ராத்திரி பார்த்தவர்கள் வாட்ச்மேன், மற்ற மாணவர்கள் யாராவது இருந்தால் சரி. எதற்கும்

ஒரு லாயரை விசாரித்து வைத்துக்கொள். போலீஸிடம் எதையும் சொல்லாதே!''

நடராஜன், ''ப்ரொபசர், உங்களுக்கும் காரணம் இருக்கிறதல்லவா!'' என்றான்.

''மத்லப்?''

''எத்தனை முறை உங்கள் மனைவி பேரில் அவன் வம்பு செய்வதைக் குறித்து அவன் மேல் சத்தம் போட்டிருக்கிறீர்கள்?''

''நான்சென்ஸ்! இதைப்பற்றி யாரிடமும் எதும் சொல்லாதே!''

''என்னைக் கேள்வி கேட்டால் சொல்ல வேண்டியிருக்கும்.''

''பொப்பு, இவனைக் கவனித்துக் கொள். எக்கச்சக்கமாக ஏதாவது உளறி வைக்கப் போகிறான்.''

அறைக்குத் திரும்பி வந்தபோது கஜராஜின் ரத்தம் அடிக்கடி ஞாபகம் வந்தது. பார்த்திபன் வந்துவிட்டதாகவும் அவன் போலீஸிடம் பிரிலிமினரி ஸ்டேட்மெண்ட் கொடுப்பதாகவும், இன்ஸ்பெக்டர் ஒருத்தர் நண்பர்களிடம் பொதுவாக பிரிலிமினரி விசாரணை நடத்துவதாகவும், எம்.ஐ. ரூமில் அது நடப்பதாகவும் சொன்னார்கள். அறைக்குள் இருப்புக் கொள்ளவில்லை நடராஜனுக்கு. இப்போது உடம்பு முழுவதும் நடுங்கத் துவங்கி விட்டது. 'நகக்கணுவில் ஊசி ஏற்றி ஒப்புக்கொள்ளச் சொன்னால்? அப்பாவுக்கு உடனே தந்தி கொடுத்து வரவழைக்கலாமா? வக்கீலுடன் பேசாமல் எதையும் பேச மாட்டேன் என்று மறுக்கலாம். என்னை அவர்கள் கேட்பார்களா? நிச்சயம் பார்த்திபன் சொல்லி விடுவான். 'கஜராஜுக்கு முதல் விரோதி நடராஜன்தான்.'

'ஒருவேளை தூக்கத்தில் நடந்து போய் கஜராஜை நானே கொன்றுவிட்டேனா? எப்படி இது நிகழ்ந்தி ருக்கும்? பார்த்தால் கட்டிட மாடியிலிருந்து விழுந்தவன் போல இருக்கிறதே! தள்ளிவிட்டேனா? விழுந்திருப் பானா? ராத்திரி அவன் அங்கே எதற்குப் போக வேண்டும்? யார் கூப்பிட்டார்கள்? மாதவியா? பப்புவா? ப்ரொபஸரா? நான் இல்லை. நான் இல்லவே இல்லை. நான் ஏன்?...'

''மிஸ்டர் நடராஜன், கொஞ்சம் வரீங்களா?'' என்று போலீஸ் அதிகாரி ஒருவர் அறை வாசலில் சிரித்துக் கொண்டே கூப்பிட்டார்

# 19

இன்ஸ்பெக்டராகத்தான் இருக்க வேண்டும், ரொம்பக் களைத்துப் போயிருந்தார். எம். ஐ. ரூமில் வைத்து ஆரம்ப சாட்சிகளை விசாரித்துக்கொண்டிருந் தார். சிகரெட்டுப் பெட்டியின் உள் அட்டை ஆஷ் டிரே யாக டபிள் ட்யூட்டி வாங்கிக்கொண்டிருக்க, ரூம் பூராப் புகை வியாபித்திருந்தது. பழுப்புக் காகிதத்தில் கார்பன் வைத்து, பின் குத்திப் பக்கவாட்டில் மடக்கி, குறுக்கிக் குறுக்கி நிறைய எழுதி வைத்திருந்தார். நடராஜன் போனபோது ஒருமுறை அவனை முழுசாகப் பார்த்தார். ''உக்காருங்க'' என்று ஸ்டூலைக் காட்ட, அவர் அசப்பில் செத்துப்போன கஜராஜை ஞாபகப்படுத்தினார். அவ னைப் போலவே கண்கள் மையிட்டதுபோல, நிறம் குறை வாக.

''பேரு?''

''நடராஜன்.''

''எத்தனாவது வருஷம்?''

''செகண்ட் ஈ.ஸி.ஈ.''

''இறந்துபோன கஜராஜுக்கு கிளாஸ்மேட்?''

''ஆமா ஸார். இந்த வருஷத்திலிருந்து.''

''அந்தாளைத் தெரியுமா? பரிச்சயம் உண்டா?''

''கொஞ்சம் கொஞ்சம்.''

''உக்காருங்க நடராஜன், உங்களைப் பத்திக் கேட்டதெல்லாம் நிசமா?''

''என்னது?'' வயிற்றுக்குள் ஒரு பகீர்.

அவர் காகிதங்களை ஒவ்வொன்றாகப் புரட்டிக் கொண்டே ஒரு வரிக்கு வந்து, ''அ... கஜராஜ் நடராஜனை ரொம்பக் கலாட்டாப் பண்ணி அடித்து உதைத்தெல்லாம் செய்திருக்கிறான்— இது நிசமா?'' என்று அவனை ஊடுருவுகிறாற் போலப் பார்த்தார்.

''அவன் எல்லாரையும்தான்...

''உங்களைக் கலாட்டா பண்ணியது நிசமா?''

''ஆமா ஸார் ''

''அதனால நீங்க'' மறுபடி காகிதத்தைப் பார்த்துக் கொண்டு, ''அவனைக் கொல்லப் போறதா அங்க இங்க சொன்னீங்களாமே?''

நடராஜனுக்கு கைகள் உதற ஆரம்பித்ததை அவர் கவனித்தார்.

''என்ன பேசாம இருக்கீங்க? சொன்னீங்களா இல்லையா?''

''ம்... சொன்னேன். ஆனா...

''கொன்னீங்களா?'' என்று அப்பட்டமாகக் கேட்டார். விழிகளின் ஓரத்தில் ரத்தக் கோடுகள் தெளிவாகத் தெரிந்தன.

''சேச்சே, என்ன ஸார்! என்னப் பார்த்தா அப்படியா தோணுது?''

''உன்னைவிட சாதுவான தோற்றமுள்ள ஆளுங்களெல்லாம் ரெட்டைக் கொலை பண்ணியிருக்காங்க! தோற்றத்துக்கும் செயலுக்கும் சம்பந்தமில்லை! கேள்விக்குப் பதில் சொல்லுங்க!''

''நான்... நான் அந்த மாதிரி பேசிக்கிட்டே இருந்தேனே தவிர, கொல்லவே இல்லை.''

''பின்ன ஏன் கை நடுங்குது?''

மையமாகச் சிரித்தான்.

''சிரிக்கிறியா நீ? சிரிக்கிற விசயமா இது?''

''இல்லை ஸார்.''

''சிரிக்காதிங்க, என்ன? காலைலருந்து இங்கேயே உக்காந்துக்கினு எவிடன்ஸ் எடுத்துக்கிட்டு இருக்கேன். சிரிக்கக் கூடாது தெரியுமில்லை? சிரிக்கிற விஷயம் இல்லை! ஒரு இளைஞன், இருவது வயசு இளைஞன் சாவு! தெரியுமில்லை? நடராஜன், தபாரு! நீ முழிக்கிற முழியைப் பார்த்தா உன்னை அரஸ்ட் பண்ணலாம் போல இருக்குது, என்ன சொல்றே?''

''ஸா...ஆர்!'' என்றான், கண்களில் சட்டென்று நீர் சுரந்து. இன்ஸ்பெக்டர் முகம் மழுங்கியது·எழுந்து நின்று கொண்டான். அவனைப் பீதி சூழ்ந்து கொண்டது. என்னை இந்த இன்ஸ்பெக்டர் விடப் போவதில்லை. நிச்சயம் ஒப்பந்த வாக்குமூலத்தில் கொன்றேன் என்று கையெழுத்துப் போட்டுக் கொண்டுதான் விடப்போகிறார் என்கிற பயம் படர்ந்துவிட்டது. பப்புவைக் கேட்கலாமா? இல்லை, ஏதோ உரிமை இருக்கிறது என்று புஸ்தகங்களில் படித்திருக்கிறானே! பேச வேண்டிய கட்டாயமே

இல்லையோ? வக்கீலைக் கேட்டுவிட்டுத்தான் பேசுவேன் என்று அடம் பிடிக்கலாமா?

''ஏங்க எழுந்துட்டிங்க? பாக்கி இருக்குது!''

''நான் வக்கீலைப் பார்க்கணும்.

''அடி சக்கை! அப்ப ஒப்புத்துக்கிட்டிங்கன்னு அர்த்தம்! தபார்றா, ப்ரிலிமினரியிலேயே வக்கீலைத் தேடறாரு! இதில் ஏதோ ஃகாளாறு இருக்குது. உக்காருங்க. உக்காருய்யான்னா!''

நடராஜன் படக்கென்று உட்கார, ''சொல்லு. என்ன செஞ்சே? ராத்திரி அவனைப் போய் ரூம்ல பார்த்த! அப்புறம் என்ன செய்த? சொல்லிரு!''

''யாரை?''

''கஜராஜைத்தான்.''

''அய்யோ, நான் பார்க்கவே இல்லை.''

''இப்ப தான் பார்த்ததா சொன்ன! தபாரு, க்ரேவ் ப்ரவொக்கேஷன்னு இருக்குது. அதும்படி முன்னால் தீர்மானிக்காமச் செய்த கொலைங்களை மேன்ஸ்லாட்டர் தான்னு சொல்லுவாங்க. அதுக்கு அதிகமா தண்டனை கிடையாது. சொல்லிடு. ராத்திரி அவனை என்ன செஞ்ச? மாடிக்கு வா, காத்தாடப் பேசிகிட்டு இருக்கலாம்னு சொன்ன. அப்புறம்? த பாரு, வி ஆர் ஃப்ரெண்ட்ஸ். என்ன நடந்தது சொல்லு.''

நடராஜன் பேசாமலே இருந்தான்.

''தபாரு. பேசாம இருக்கிறது உன் கேஸுக்கு நல்லதில்லை. நீ அந்தக் கொலையைச் செய்யலை தானே?''

''இல்லை ஸார்! இல்லை ஸார்!''

''அப்ப எதுக்காகப் பேசப் பயப்படணும்? அது கொலையான்னே இன்னும் தீர்மானிக்கலை. கொலை யான்னு ஆராய்ச்சி பண்ணிக்கிட்டிருக்கோம். லாப் ரிப்போர்ட் கைல இல்லை. ஆளு எதுக்குப் பாதி கட்டின மொட்டை மாடிக்குப் போகணும்? அங்க போய் எதுக்கு மூணாவது மாடி டெர்ரஸிலிருந்து விழணும்? யாராவது தள்ளித்தானே இருக்கணும்? சொல்லு!''

''இருக்கலாம்.''

''யார் தள்ளினாங்க?''

''யார் வேணா இருக்கலாம் ஸார். அவனுக்கு எத்த னையோ எதிரிங்க!''

''அதில் நீயும் ஒண்ணுதானே?''

''கொலை பண்ணக் கூடிய அளவுக்கு இல்லை.

''அவ்வளவு எதிரி இல்லைன்னு சொல்றீங்க. வெரி குட். ஆனா சொல்லுங்க. நீங்கள்ளாம் ஒண்ணு சேர்ந்துக் கிட்டு என்ன பண்ணிங்க?''

''யாரெல்லாம்?''

''அதை நீதானே சொல்லணும்.''

''என்ன ஸார் போட்டுக் குழப்பறீங்க? யாரை வேணாலும் கேட்டுப் பாருங்க. நான் வந்து இந்தக் காரி யத்தைச் செய்யவே மாட்டேன்.''

''எந்தக் காரியம்?''

''வந்து... வந்து... நடராஜன் தயங்கினான். எதைச் சொன்னாலும் தனக்கு எதிராக இருக்கும் போல இருந்தது. வழி புரியாத எறும்பு போல உணர்ந்தான்.

''சொல்லுப்பா.''

''என்ன சொல்லணும்?''

''எத்தனை பேரு இதில் என்னவெல்லாம் செஞ்சிங்க?''

''ஸார்! ராத்திரி பேசாம கம்முன்னு ரூம்ல படுத்திருந்தேன். அதான் உண்மை.''

''அதை யாரும் மறுக்கலை. தூங்கப் போறதுக்கு முன்னாடி கஜராஜை மாடிக்கு அழைச்சுட்டுப் போனிங்க?''

''அய்யோ, நான் எங்கயும் யாரையும் அழைச்சிட்டுப் போகலை ஸார்! என்னை விட்டுருங்க. நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவன் ஸார்.''

''சரி, இப்ப உன் கேர்ள் ப்ரண்டைக் கூட்டிட்டு வந்ததைப்பத்திப் பேசலாமா?''

''கேர்ள் ப்ரெண்டா!''

''ஒரு பொண்ணை நீ கூட்டி வந்த. டென்னிஸ் கோர்ட்டில வெச்சு கஜராஜூம் பார்த்திபன்ங்கறவனும்...''

''அய்யோ!''

''த பாரு, எனக்கு நடந்தது எல்லாம் தெரியும். அதனால மறைக்காமச் சொல்லிட்டா லைட்டா விட்டுரலாம். என்ன? சொல்லு. முதல்லேர்ந்து சொல்லு!''

''ஸார், நான் எதுவுமே செய்யலை. நான் பாட்டுக்கு ராத்திரி படுத்து காலைல எழுந்தப்ப கஜராஜ் இறந்து போயிட்டான்னு செய்தி.''

இன்ஸ்பெக்டருக்கு அப்போது மெஸ்ஸிலிருந்து டிபன் பாக்கெட்டும், காப்பியும் வந்தது. அதைப் பிரித்து சாப்பிட்டுக்கொண்டே, ''உக்காருங்க. டிபன் பண்றீங்களா?'' என்றார்.

''வேண்டாம் ஸார்.''

''காலைலருந்தே ஒண்ணும் திங்கலை. அதனால டயர்டா இருக்குது. ப்பேயப்பா, இன்னும் ரண்டு பாக்கெட் சிகரெட் வாங்கியாந்துரு. ராத்திரியாயிரும்! உக்காருங்க நடராஜன்!''

அவர் சாப்பிட்டு, தண்ணீர் அருந்திக் கையை அலம்பிக்கொண்டு காப்பி குடிக்கும்வரை காத்திருந்தான். அவ்வப்போது தினத்தந்தி படித்துக்கொண்டிருந் தார்.

சிகரெட் பற்ற வைத்துக்கொண்டு சாவதானமாக நடராஜனைப் பார்த்து,

''முதல்லருந்து ஆரம்பிக்கலாமா?''

''அய்யோ, இன்னும் ஆரம்பிக்கலையா?''

''நீங்கதான் ஒண்ணுமே சொல்லலையே!''

அப்போது இன்ஸ்பெக்டருக்கு டெலிபோன் வர, அவர் சட்டென்று எழுந்து டைரக்டர் ஆபீசுக்குப் போய் விட்டார். ஒரு கான்ஸ்டபிள் தன் காலில் கட்டியிருந்த பட்டையைப் பிரித்து இறுக்கிப் பின் குத்திக்கொள்ள, சன்னலுக்கு வெளியே காகங்கள் கரைந்துகொண்டிருந் தன. சற்று நேரத்தில் இன்ஸ்பெக்டர் திரும்பி வந்து, ''வாய்யா போகலாம்.'' நடராஜனைப் பார்த்து, ''மத்தியானம் ரெண்டு மணிக்கு வர்றேன். அப்ப தொடங்கலாம்'' என்று ஜீப்பில் ஏறிக்கொண்டார்.

பப்பு வெளியே காத்திருந்தான். ''என்னடா கேட்டான்?''

''பப்பு, என்ன அந்தாள் ரொம்ப சந்தேகப் படறான்ப்பா.''

''கேள்விப்பட்டேன்!''

''எனக்கு என்ன பண்றதுன்னே தெரியலையே. பப்பு, ஓடிப் போயிடவா?"

# 20

நடராஜனுக்குத்தான் ஏதோ பெரிய இக்கட்டில் மாட்டிக்கொண்டோம் என்பது தெளிவாகத் தெரிந்தது. கொலை செய்யவில்லையெனினும் சந்தர்ப்ப சாட்சியங்கள் மிகவும் அவனுக்கெதிரே இருப்பதாகத்தான் தெரிந்தது. அவனுக்கு மிகவும் ஒருவிதமான உதவி, உபதேசம் தேவையாக இருந்தது. ரொம்பக் குழம்பிப் போயிருந்தான். அப்பாவுக்குத் தந்தி கொடுக்க வேண்டும். இல்லை,. வக்கீலின் உதவி கேட்க வேண்டும். இதோ அந்த இன்ஸ்பெக்டர் வரப்போகிறார் என்று நினைத்துக் கொண்டிருந்தபோது இன்ஸ்பெக்டர் ஜீப்பில் ஏறி அவசரமாகப் புறப்பட்டுப் போகும் முன்பு, ''தபாரு, இங்க வா'' என்றார்.

அருகே சென்றான்.

''உன் எவிடன்ஸ் இன்னும் முடியலை. எங்கேயும் போயிராதே'' என்றார்

பப்பு அவர் போனதும், ''அரஸ்ட் வாரண்ட்டுக்குத்தான் போயிருக்கார். வாரண்ட் இல்லாம அரஸ்ட்பண்ண முடியாது. நட்டு, பேசாம நீ போய் ஒரு லாயரை கன்சல்ட் பண்ணிடு'' என்றான்.

''எனக்கு ஒத்தரையும் தெரியாதே!''

''உங்கப்பாவுக்கு முதல்ல போன் பண்ணிடு. அவர் லாயர்தானே?''

''அவர் எதோ கூறுக்கட்டி லாயர்ப்பா.''

''இந்தச் சமயத்தில உனக்கு லீகல் அட்வைஸ் தேவையாயிருக்குப்பா. உம்மேலதான் சந்தேகம் முழுக்க

விழுந்திருக்கிறதா சொல்றாங்க. நீதானே எல்லார்கிட்டயும் 'கொல்லப் போறேன், கொல்லப் போறேன்'னு தவறாம சொல்லிண்டே வந்தியாம்.''

''சொன்னா கொன்னேன்னு அர்த்தமா?''

''உனக்கு மோட்டிவ் இருந்ததோல்லியோ?''

''ஏன், உனக்கு மோட்டிவ் இல்லையா? ப்ரொபஸருக்கு மோட்டிவ் இல்லையா? இப்ப என்ன பண்ணணும்ங்கறே?''

''உங்கப்பாவை எதுக்கும் ட்ரங்க் கால் போட்டுக் கேட்டுரு!''

ட்ரங்க் கால் போட்டு மெஸ்ஸில் நம்பர் எல்லாம் சொல்லி புக் பண்ணி, அது பெற்றுப் பிழைத்து வருவதற்கு ஒரு மணி நேரத்திற்கு மேல் ஆகிவிட்டது. நடராஜனுக்குப் பசியே இல்லை. காலையிலிருந்து எதுவும் சாப்பிடவில்லை. மெஸ்ஸில் கப் காப்பி குடிக்கப் போனதோடு சரி பசிக்குப் பதில் வயிறு பூரா பயமாக இருக்க...

''எனடா? அல்லோ!'' கிணற்றுக்குள் அப்பாவின் குரல் கேட்டது.

'இங்க ஒரு சின்ன ப்ராப்ளம்பா. கஜராஜ்னு ஒரு பையன்.''

''இரைஞ்சு பேசு.''

''கஜராஜுன்னு ஒரு பையன்ப்பா.''

''என்னது ஜெராக்ஸா?''

''கஜராஜ்... கஜராஜ்ப்பா! அவன் இறந்து போயிட்டான். அதுக்காக என் மேல சந்தேகப்பட்டு...''

''லெட்டர் எழுதக் கூடாதா? எதுக்கு போனு?''

''அவசரம்பா அவசரம்.''

''அல்சரா! யாருக்கு?''

''நாசமாப் போச்சு!''

''என்னது நாசமாப் போச்சு?'' என்றார் இது மட்டும் தெளிவாகக் கேட்டவராக.

''அப்பா, ஐ'ம் இன் ட்ரபிள்!''

''பணம் வேணுமா? இப்பதானே அனுப்ச்சேன்.''

''அய்யோ! எப்படிச் சொல்றதுப்பா!''

''த்ரீ மினிட்ஸ் ப்ளீஸ்'' என்பது தெளிவாகக் கேட்டது.

வெறுப்புடன் போனை வைத்துவிட்டு, ''இட்ஸ் நோ யூஸ் பப்பு'' என்றான்.

''ஒண்ணு பண்ணு. உன்மேல எதுவும் அரஸ்ட் வாரண்டோ எதுவுமே இல்லாதபோது நீ பேசாம ஊரைப் பார்க்கப் போயிடு. போயி...''

''அய்யோ! போலீஸ் சந்தேகம் ஊர்ஜிதமாயிடுத்துன்னா?''

''தபாரு! நீ கொல்லாத வரைக்கும் உன்னை யாரும் எதும் செய்துர முடியாது. நீ கொல்லலைதானே?''

''சத்தியமா பப்பு. யார் கொன்னிருப்பா: என்று ஒருமுறை பப்புவைக் கண்ணோடு கண்ணாகப் பார்த்த போது பப்புதான் பண்ணியிருக்கிறான் என்று தோன்றியது. ஒருமாதிரி திருட்டு முழி முழிக்கிறாற்போலத் தோன்றியது. ''பப்பு, நான் உன்னை ஒண்ணு கேக்கலாமா? யார்கிட்டயும் சொல்லலை. அஸ் எ பிரண்ட், சொல்லுவியா?''

''என்னடா?''

''ஒப்புத்துண்டுரு. நீதானே பண்ணே?''

''என்ன?''

''கஜராஜை, யூ கில்ட் ஹிம். இல்லையா பப்பு?''

''ஏய் பைத்தியம். இந்த மாதிரி எங்கயாவது போய் உளறிண்டிருக்காதே! நான் அந்தப் பக்கம் தலை வெச்சுப் படுக்கலை!''

''எனக்கென்னவோ நீதான்னு...

''போடாச்சீ! உனக்குப் போய் அட்வைஸ் பண்ண வந்தேன் பாரு!''

''பின்ன ப்ரொபஸரா யிருக்குமா?''

''சே, நான் உன்கூடப் பேசலை. எக்கேடும் கெட்டுப் போ. நான்தான் பண்ணேனாம்! என்ன தைரியம் இருந்தா நீ என்னை அந்தக் கேள்வி கேப்ப? போலீஸ் கூடக் கேக்கலை!''

''சரி, கோவிச்சுக்கோ. நீ ஒருத்தன்தான் பாக்கியிருந்தது!'' என்றான் சம்பந்தமில்லாமல். நடராஜனின் கண்களில் நீர் துளிர்த்தது.

அங்கிருந்து மெல்ல நடக்கையில் யோசித்து ரூமுக்குப் போனான். இருக்கிற காசையெல்லாம் திரட்டிக் கொண்டான். குளிக்கக்கூட இல்லாமல், சவரம் பண்ணிக் கொள்ளாமல், உடையெடுத்துக் கொள்ளாமல், ரூமைப் பூட்டாமல், நேராக ஸ்டேஷனுக்குப் போனான். எக்மோருக்கு டிக்கெட் எடுத்தான்.

காலையில் அப்பா அவனைப் பார்த்ததும் அதிர்ந்து போனார். ''என்னடாது இப்படி திடுதிப்புனு! என்ன ட்ரங்க்கால்? என்ன விஷயம்?''

''அப்பா, நான் பெரிய இக்கட்டில் மாட்டிண்டுட்டேன்பா. கஜராஜுன்னு எங்கூட படிக்கிற பையன்

ஒத்தன் செத்துப் போயிட்டாம்பா. முந்தா நா ராத்திரி நடந்திருக்கணும். போலீஸ் என்னைக் கேள்வி கேட்கிற விதத்தைப் பார்த்தா என் மேலே சந்தேகப்படறா மாதிரி இருந்தது.''

அப்பா அத்தனையும் மௌனமாகக் கேட்டிருந்துவிட்டு, ''உன்னைப் போல ஒரு முட்டாள் இருக்க மாட்டான் என் பிள்ளைன்னு சொல்லிக்கிறதுக்கே வெக்கமா இருக்கு ஊரெல்லாம் கொல்லப் போறேன், கொல்லப் போறேன்னு தண்டோரா போட்டுட்டு, போதாக் குறைக்கு இன்ஸ்பெக்டர் பாதி விசாரிச்சுண்டு இருக்கறச்சே போட்டது போட்டபடி பொறப்பட்டு வந்துட்டே. முதல் காரியமா போலீஸ்காரா இங்கதானே வருவாடா. அந்த அளவுக்கு மூளையில்லையாடா உனக்கு?''

''நான் இங்க ஒளிஞ்சுக்க வரல்லைப்பா.''

''பின்ன என்னவாம்?''

''எனக்கு ஒரே குழப்பமா இருக்குப்பா. லாயர்ங்கற முறையில உங்ககிட்ட அட்வைஸ் கேட்க...''

நான் வந்து எப்படிப்பட்ட லாயர்னு தெரியாதா உனக்கு? நான் எங்கேடா ஒழுங்கா ப்ராக்டிஸ் பண்ணியிருக்கேன்? எதுக்கும் நரசிம்மாச்சாரைக் கேட்டுச் சொல்றேன். எனக்கென்னவோ போலீஸ் நிச்சயம் ரெண்டு நாள்ல வந்துருவான்னு தோணறது!''

அம்மா, ''எதுக்கு அவனைப் புடிச்சு பயமுறுத்தறேள் அவா வந்தா இங்க வல்லைன்னு சொல்லிட்டுப் போறது கொஞ்ச நாள் கழிச்சு எல்லாம் ஓஞ்சப்புறம் கண்ல காட்றது குழந்தையை! வாடாப்பா நட்டு.''

''ஹப்போ, இப்படி ஒரு புள்ளையைப் பெற என்ன பாக்கியம் செஞ்சமோ!''

''நீ உள்ள வந்துரு நட்டு! ஸ்டேஷன்லருந்து வர்றப்போ யாராவது பார்த்தாளா உன்னை?''

நடராஜன் உள்ளே வந்து படுத்து மாலை வரை தூங்கினான். டிபன் சாப்பிட்டான். மாடிக்குப் போனான். மொட்டை மாடியிலிருந்து வாய்க்கால் கரையைப் பார்த்தான்.

வாசலில் போலீஸ்காரன் போவது தெரிந்து வயிற்றில் சுருக்கென்றது.

அலமாரியிலிருந்த 'எஸ்.வி.வி.'யின் நாவல்களையெல்லாம் எடுத்து வைத்துக்கொண்டு அதில் ராஜு போட்டிருந்த படங்களை ஒவ்வொன்றாகப் பார்த்துக்கொண்டே இருந்தபோது மின்னுவின் குரல் கேட்டது.

## 21

மின்னுவைப் பார்த்ததும் நடராஜனுக்கு உற்சாகம் பொங்கியது. அவள் முகத்தில் மஞ்சள் எல்லாம் பூசிக்கொண்டு, தலைமயிரை அலைய வைத்துக் கொண்டு, இது ஒரு தினுசில் அம்மன் தனமாக அழகாக இருந்தாள். ''ஹலோ மின்னு'' என்றான்.

அவனை நிமிர்ந்து பார்த்து ஆச்சரியம் காண்பிக்காமல், ''எப்ப வந்தே?'' என்றாள்.

''கார்த்தாலைதான் வந்தான்ம்மா. அவன் ஹாஸ்டல்ல் ஏதோ கலாட்டாவாம்.''

''மின்னு, ஐ வாண்ட் டு டாக் டு யூ.''

''மாமி, உங்காத்து நட்டுக்கு விஷயம் தெரியாதா? தகவல் சொல்லிட்டேளா?''

''இல்லைம்மா. இன்னைக்கு இப்பதானே வந்திருக்கான்.''

''என்ன தகவல்?''

''மின்னுவுக்குக் கல்யாணம் நிச்சயம் ஆயிடுத்து.''

''பொண் பார்க்கப் போறாளா?''

''இல்லைடா. பெண் பார்த்து எல்லாம் நிச்சயம் ஆயிடுத்து. இதுவும் வக்கீலாத்து இடம்தான். வடக்கே.''

''என்ன மின்னு இது?''

''மாமி, நான் போயிட்டு வரட்டுமா? அப்பா யார் கூடயும் வம்பு பேசக்கூடாதுன்னு சொல்லியிருக்கா.''

அவள் போனதும் அம்மா, ''அதும் ஜாதகத்தில கடுமையான செவ்வா தோஷம். அதான் உனக்கு பார்க்கவே இல்லை. இந்தப் பையன் ஆத்தில ஜாதகம் எல்லாம் பார்க்கிறதில்லையாம். நன்னா கல்யாணம் பண்ணிக் கொடுத்தா போறும்னுட்டாளாம். டில்லிக்காரா. அம்மாவே பஞ்சாபி டிரஸ் போட்டுண்டு ஏதோ சதிர்க்காரி மாதிரி இருந்தா. புள்ள சின்னவனா அழகா இருக்கான்.''

''அம்மா, மின்னுவுக்குக் கல்யாணமாம்மா?''

''பின்ன இத்தனை நாழி யார் கல்யாணத்தைப் பத்திப் பேசிண்டிருக்கிறதா நினைப்பு?''

''அம்மா, வந்து, நீ ஒண்ணும் கேக்கலையாம்மா?''

''என்ன கேக்கறது?''

கேட்க என்ன அருகதையிருக்கிறது எனக்கு? பாதிப் படிப்பு. கொலைக் கேஸில் மாட்டிக்கொண்டவன். போலீஸிடமிருந்து பதுங்கியிருப்பவன். கரப்பு மாதிரி ராத்திரி மட்டும் தலைகாட்டக் கூடியவன்! எனக்கு என்ன மாப்பிள்ளைத் தகுதியிருக்கிறது? எதற்கு ஆசைகள் எல்லாம்?

நடராஜனுக்குத் தனிமை தேவையாக இருந்தது. வாய்க்கால் பக்கம் பச்சையாக ஓடிக் கொண்டிருக்க, அதில் குச்சிப் பூச்சிகள் சொடுக்கிச் சொடுக்கி நீந்திக் கொண்டிருந்தன. நீரோட்டத்திற்கும் எதிர் நீச்சத்திற்கும் சரியாக இருந்தது. எங்கோ பிரயாணம் போவதாக நம்பிக்கை.

டெண்ட்டு கொட்டகையில் ஊசி நிரடி இசைத்தட்டு வைக்கத் துவங்கி விட்டார்கள். மாட்னி ஷோவுக்கு இப்போதிலிருந்தே ஆள் சேர்த்துக் கொண்டிருந்தார்கள். பஸ் ஸ்டாண்டில் செக்கச் செவேல் என்று சர்பத் விற்றுக் கொண்டிருந்தார்கள். நடராஜனுக்கு எல்லாமே மூளையின் ஒரு கோணத்தில் உறுத்திக் கொண்டிருந்தது. உள்ளுக்குள்ளே பிரளயம் போல எண்ணத் தொடர்கள்.

நடராஜன் என்கிற நான் ஏமாறவே, ஏமாற்றப்படவே ஜனனம் எடுத்திருப்பவன். மின்னு போன முறை கல்யாணத்தை நிறுத்தி என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதாக இயல்பாக வந்தாள். இம்முறை ஏன் மாற்றம்? மின்னுவை நான் காப்பாற்றத் தவறிவிட்டேன். மின்னுவுக்கு அன்று நிகழ்ந்ததற்கு தற்செயலான நிகழ்ச்சிகள்தான் காரணம் எனினும் அதை அறிந்து கொண்டபின் அவன் முன் கஜராஜை வீழ்த்தியிருக்க வேண்டும். ஒரு ஆண் பிள்ளைச் சிங்கம்போல நடந்து கொண்டிருக்க வேண்டும். என் போன்ற கோழையை எந்தப் பெண் கட்டிக்கொள்வாள்? இவளை நான் எப்படி மற்ற ஆண்களிடமிருந்தும் கள்ளர்களிடமிருந்தும் காப்பாற்றுவேன்? இது என் கோழைத்தனத்துக்குக் கிடைத்த பரிசு. எனக்கு என்ன இருக்கிறது இனிமேல் வாழ்க்கையில்?

படித்துப் பட்டம் பெற்று என்ன சாதிக்கப் போகிறேன்?

தற்கொலை பண்ணிக்கொள்ளக்கூட எனக்குத் தைரியம் இல்லை. எனக்கு இருப்பது ஒரே ஒரு வழிதான். ராத்திரி குளித்தலை பாஸஞ்சர் வரும்போது தலையைக் கொடுத்துவிட வேண்டியதுதான். அதற்கான தைரிய மிருக்கிறதா? இல்லை! இப்படிச் செய்தால் என்னவாம்? என்னைப் போலீஸ் தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்று தானே இங்கு வந்து ஒளிந்து கொண்டிருக்கிறேன். பேசாமல் போய் போலீசிடம் சரணமடைந்து விட்டால் என்னவாம்?

அதுதான் சரி. நான்தான் கொன்றேன் என்று ஒப்புக் கொண்டு விட்டால்?

அப்பாவிடம் ராத்திரி, ''அப்பா நான் மறுபடி ஹாஸ்டல் போயிடறேன்ப்பா.''

''ஏண்டா?''

''நீங்க சொன்னதை யோசித்துப் பார்த்தேன். இப்ப இங்க வந்து ஒளிஞ்சுக்கறதாலே எம்மேல சந்தேகம் வரும். அது நான் பண்ணாதபோது எதுக்குப் பயப்படணும்?''

''தபாரு. ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொண்ணு சொல்றப்பா நீ. உன் இஷ்டப்படி பண்ணு. எதாவது ட்ரபிள்னா எனக்குத் தந்தி கொடு. இந்த ட்ரங்க்கால் மட்டும் வேண்டாம். ஒரு எழவும் காதில விழமாட்டேங்கறது.''

''என்னடாது, வந்தது வந்தே, மின்னு கல்யாணத்துக்கு இருந்திட்டுப் போகக் கூடாதோ? பெரிசா வீதியையே அடைச்சுப் பந்தல் போடறா!''

''ஊரையே அடைச்சுக்கட்டும் எனக்கென்ன!''

அம்மா அவனை ஒருவிதமாகப் பார்த்தாள். ''ஒரு மாதிரி இருக்கே. எங்கயாவது பயந்துண்டிருக்கிறாயா?

வெள்ளைக்கட்டி போடச் சொல்லட்டுமா? அந்தப் பையன் பொணத்தைப் பாத்துட்டுப் பயந்துண்டிருக்கியோப்பா?''

''இல்லம்மா. பயம் எல்லாம் விலகிப் போய்டுத்து. மனசு ரொம்பத் ஹுல்லியமா இருக்கும்மா. அம்மா, எல்லாத்துக்கும் தாங்க்ஸ்!''

''எனக்கு என்னடா தாங்க்ஸு? பைத்தியமே!''

ராக்ஃபோர்ட் எக்ஸ்பிரஸ்ஸில் உட்கார்ந்தவாறே தூங்கிக்கொண்டு வந்தபோது நடராஜனுக்கு தன் வாழ்வில் ஒரு சகாப்தம் முடியப் போகிறது என்றுதான் தோன்றியது. பப்புவிடம் சொல்லிக்கொண்டு போலீஸிடம் போய் நேராகக் கையை நீட்டி...

ஹாஸ்டலுக்கு வந்தபோது அமைதியாக இருந்தது கஜராஜின் பெற்றோர் வந்திருந்தார்கள். அம்மா காதில் பாடகம் அசையப் பெரிசாக அழுதாள். அப்பாவைப் பார்த்தால் அமைதியான விவசாயி போல் இருந்தார். புஸ்தி மீசை வைத்திருந்தாலும் சாது; பொய் சொல்ல மாட்டார் என்று தோன்றியது. இவர்களுக்கு கஜராஜ் போல மகனா?

போலீஸ் இன்ஸ்பெக்டர் எம்.ஐ. ரூமில்தான் விசாரித்துக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். வாசலில் ஸ்டூல் போட்டு ஒரு கான்ஸ்டபிள் காது குடைந்து கொண்டிருந்தார். உள்ளே டைரக்டருடன் போலீஸ் அதிகாரி பேசிக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள்.

நடராஜன் கவலையே படாமல் உள்ளே சென்றான். போலீஸ் இன்ஸ்பெக்டர் அவனை நிமிர்ந்து பார்த்து, ''எஸ்'' என்றார்.

''ஸார், நான் வந்துட்டேன்!'' கையை நீட்டலாமா?

''நல்லது. உங்களை வரச் சொல்லியிருந்தனா என்ன?''

''ஆமா ஸார், கஜராஜைக் கொல்றதா சொல்லிக் கிட்டுத் திரிஞ்சவன் நான்தான் என்னைத் தீர விசாரிக்க ணும், பாக்கியிருக்குன்னு சொன்னிங்க.''

''அப்படிங்களா? உங்க பேரு?''

''என்ன இப்படிக் கேக்கறிங்க? நடராஜன். கஜராஜு டைய பரம வைரி!''

இன்ஸ்பெக்டர் டைரக்டரை ஒருமுறை பார்த்தார். டைரக்டர், ''நடராஜ், கோ டு யு'ர் ரூம்!''

''கஜராஜைக் கொன்னது...

''கோ டு யு'ர் ரூம்'' என்று அதட்டினார்.

''உங்களை வந்து... யூ டோன்ட் வாண்ட் மி எனிமோர்?''

''நோ! வி டோன்ட் வாண்ட் யூ!''

''கண்டுபிடிச்சுட்டிங்களா?''

''ப்ளீஸ், பேப்பரைப் படிங்க நாளைக்கு. என்ன? வி ஆர் பிஸி.''

பப்புதான் உற்சாகமாக வரவேற்றான். ''என்ன டாது. போட்டது போட்டது போட்டபடி எங்கடா போயிட்டே? எனக்கு ஒரே கவலையாயிருச்சு. சேதி தெரியுமா?''

''கஜராஜைக் கொன்னது யாரு?''

''கஜராஜை... ஆளைவிடு. யாரோ கோலி. எனக்கு அஸிஸ்டண்ட்ஷிப் கிடச்சிருந்தது இல்லை, பென்சில்

வேனியாவில, இப்ப விஸா கிடைச்சுருச்சு! இந்த செமஸ்டர் ஆகஸ்ட்ல போறேன் யு.எஸ்.ஏ!''

''கஜராஜ் விவகாரம் என்ன ஆச்சு பப்பு? யார் கொன்னது அவனை?''

'அவனை யாரும் கொல்லலை!''

''தற்கொலையா?''

''அதும் இல்லை. ராத்திரி மொட்டை மாடிக்குத் தனியாப் போய் அங்க கஞ்சா அடிச்சுட்டு அந்த போதையில விளிம்புக்கு வந்து உருண்டு விழுந்துட்டா னாம்!''

## 22

நடராஜனுக்கு வெள்ளம் வந்தாற்போல ஆறுதல் கிடைத்தது. ''அப்ப, அப்ப கஜராஜை நான் கொல்ல லையா?''

''போடாச் சீ, பைத்தியம்!''

''பப்பு, எனக்கு என்னா ரிலீஃப் தெரியுமா? என்ன சந்தோஷமா இருக்கு தெரியுமா?''

''எனக்கு என்னா சந்தோசம் தெரியுமா? விசா கிடைச்சிருச்சு. முதல்ல எம். எஸ். பண்ணப் போறேன். அப்புறம் பிஎச்.டி. நட்டு, நீயும் சட்டுபுட்டுன்னு முடிச்சுரு. உனக்கும் நான் அஸிஸ்டண்ட் ஷிப் வாங்கித் தரேன். அமெரிக்கா! ஹியர் ஐ கம்! லல்லல்லா'' என்றான் பப்பு. இப்போதே அமெரிக்காவில் இருப்பவன் போல இங்கிலீஷ் கூடக் கொஞ்சம் குழறலாகப் பேச ஆரம்பித்து விட்டான். 'எஸ் எஸ்' என்று சொல்லிக் கொண்டிருந்தவன் 'யா யா' என்றான்.

நடராஜன் பப்புவின் அறையைவிட்டு வெளியே வரும்போது போலீஸ் ஜீப்பை செம்மண் பாதையில் பார்த்தது பயமாக இல்லை. ப்ரொபஸர் சென்குப்தாவின் வீட்டைக் கடக்கையில் அவர் வாயில் பைப் செருகிக் கொண்டு, 'நொடொராஜ்' என்று விளித்தார்.

''எஸ் ஸார்'' என்று உற்சாகத்துடன் சென்றான்.

''என்ன ஆச்சு கொஜெராஜின் விவகாரம்?''

''விபத்து என்று தீர்மானித்து விட்டார்கள். கஞ்சா அடித்துவிட்டு மொட்டை மாடிக்குப் போயிருக்கிறான்.''

''ஆம், அப்படித்தான் நான் கேள்விப்பட்டேன். நல்லவேளை ஒழிந்தான். நான் அவனிடம் படித்துப் படித்துச் சொன்னேன், இந்த மாதிரி கஞ்சா புகைத்தல் ஆபத்து, உடம்புக்குக் கெடுதல் என்று. இப்போது என்ன ஆயிற்று?'' சென்குப்தா ஒருவாறு கஜராஜ் இறந்து போனதில் சந்தோஷமாக இருந்ததாகவே பட்டது. ''அவன் விரும்பத்தகாத ஆசாமி! கஜராஜை நேசித்த வர்கள் யாராவது இருந்தார்களா சொல்லு?''

''இல்ல ஸார்.''

''*சீ சீ சீ*, அவன் இறந்து போனது, சொல்லக் கூடாதுதான், ஒருவிதத்தில் எல்லாருக்குமே நல்லது தான்'' என்றார். உள்ளேயிருந்து 'பார்த்தோ' என்று குரல் கேட்க, மாதவி ஜன்னல் வழியாகத் தெரிந்தாள். நடராஜைப் பார்த்து மோகனமாகப் புன்னகை செய்தாள்.

''என் மனைவியிடம் வம்பு செய்தான். சரியானபடி கொடுத்தாள் ஒருநாள். உனக்கு அதுபற்றித் தெரியு மல்லவா?''

''தெரியும்.''

சென்குப்தாவை விட்டு விலகுகையில் மாதவியின் சன்னல் புன்னகை புரியாமல் இருந்தது. டகரடை அய்யர் கடையில் நான்கைந்து மாணவர்கள் கூடிப்பேசிக் கொண்டார்கள்.

''எல்லாம் பொய்டா. விபத்துமில்லை, தற்கொலையு மில்லை. மூணு பேர் சேர்ந்து செய்த சதி, ப்ளாட்டு இது! ப்ரொபஸர், பப்பு, கோவிந்து மூணு பேரும் சேர்ந்து அவனை மாடிக்குக் கூப்பிட்டுப் போயி தள்ளியிருக்காங்க தெரியுமில்லை? கஞ்சா தர்றதா ஆசை காட்டி! பர்ஃபெக்ட் க்ரைம்னா இதாண்டா! ஏன் இவன்கூட உண்டாமே'' என்று நடராஜனைப் பார்த்தார்கள். நடராஜன் பேசாமல் அந்த இடத்தைவிட்டு விலகிக் கொண்டான்.

டென்னிஸ் மார்க்கர் நடராஜனைத் தனியாகக் கூப்பிட்டு, கஜராஜ் ரூமிலேயே கொல்லப்பட்டதாகவும், அதைத் தான் கண்ணாலேயே பார்த்ததாகவும் சொன் னான்.

''ராவோட ராவா பாடியை பீஸ் பீஸா இருந்ததைத் தெச்சுக் கொணாந்துட்டாங்க. அப்புறம் புது ஆஸ்ட லாண்டை போட்டுட்டாங்க. கண்ணால பார்த்தனுங்க!''

''கொன்னது யார் பீட்டர்?''

''போலீஸ்காரங்களே!''

''என்னது! போலீசேவா?''

''அ ஆங்.''

''எதுக்காகக் கொல்லணுமாம்?''

''கஜராஜ் இல்லை? அவனே நாலு கொலை பண்ணி யிருக்கான், நான் கண்ணால பார்த்திருக்கேன்.''

''பீட்டர், நீ ரொம்ப குடிப்பியா? இந்த மாதிரி வெளிய கன்னாபின்னான்னு பேசிக்கிட்டு இருக்காதே. உள்ளே தள்ளிருவான்.''

''என்னையா?'' ஹ! டி.ஐ.ஜி. இருக்காரு பாரு வில்ஃப்ரடுன்னு, நம்ம சொந்தக்காரரு. ஒரே சாச்சு'' என்றான்.

''அப்படி யாரும் டி.ஐ.ஜி. இருக்காப்பல தெரிய லையே?''

''ஒனக்கு என்னா தெரியும்? அப்புறம் இந்த டைரக்டர் இருக்கான் பாரு தறுதலை, எனக்கு இங்க்ரிமெண்ட் கட் பண்ணான், இவன் என்னாங்கற!''

பீட்டரை விட்டு விலகுமுன், நாலுநாளில் இன்னொரு கொலை விழப் போவதாகவும், நிச்சயம் தெரியும் என்றும, ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்றும் சொல்லிப் போனரன்.

ராத்திரி தனியாகப் படுத்துக்கொள்ளப் பயமாக இருந்தது. பப்புவின் ரூமுக்குப் போனபோது அவனுக்குக் காரியரில் சாப்பாடு வந்திருந்தது. கொண்டு வந்திருந்த அந்தக் கறுப்புப் பெண் கர்ப்பமாக இருந்தாள். கோவிந்த ராவ் டென்னிஸ் ராக்கெட்டுக்கு 'கட்' போட்டு இறக்கிக் கொண்டிருந்தான். ''வா ராஸ்கா. இனிமே நீ ஒரு ராஸ்கா தான் பாக்கி இருக்கே.''

''கோவிந்து, என்னதான் ஆச்சு! நிச்சயமா தெரியுமா?''

''என்ன?''

''கஜராஜ்.''

''அவன் போறான் சாவுகிராக்கி. ஆளை விடு. இந்தப் பெண்ணைப் பார்த்தியா. புள்ளையாண் டிருக்கு. யாரு காரணம் தெரியுமா?''

''ப்ரஞ்சு ப்ரொபஸர்தானே?''

''அங்கதான் தப்பு.'' இங்குமங்கும் பார்த்து, ''கன் யூ கீப் எ சீக்ரெட்?''

' என்ன?''

''நான்தான். நான்தான் லோடு ஏத்தினேன்.''

''எப்படிச் சொல்றே?''

''ஃபூர்னியேக்கு மசாலா கிடையாது, தீர்ந்து போச்சு. பாரேன், பொறக்கப் போறதுக்கு எம்மாதிரியே தொண்ணை மூக்கு! மாசம் என்ன ஆச்சு? ஒரு நா ரொம்பப் பாஷனா இருந்தேன். அது காரியரை எடுத்துக் கிட்டுப் போறப்போ புட்பால் மைதானத்தில் வெச்சு ஒப்பன் ஏரியாலயே மூணு தடவை ஆயிருச்சு! அந்தப் பொண்ணு கண்ல தண்ணி வந்திருச்சு. 'இந்த மாதிரி எனக்கு திருப்தி கிடைச்சதே இல்லை. வெள்ளைக்காரன் கொசு அடிப்பான். இன்னிக்குதான் எனக்கு நிறைஞ்ச மாதிரி இருக்கு! நிச்சயம் கர்ப்பமாயிட்டேன்'னு அப்பவே சொல்லிட்டா! 'கவலைப்படாத. ஜீவனாம்சம் தரேன். காப்பாத்தறேன்'னு சொன்னேன். ரொப்ப சந்தோஷம். கோபாலராவ்னு பேர்கூட செலக்ட் பண்ணியாச்சு. எங்க தாத்தா பேரு!''

கோவிந்த ராவ் பல விஷயங்களினிடையில் கஜராஜ் இறந்து போனது பற்றி வேறுவிதமாகச் சொன்னான். அவன் சொன்ன கதை மார்க்கரின் கதையைவிடச் சிக்க லாக இருந்தது. அவனுக்கு அண்டர் கிரவுண்டு ஆசாமிகளு டன் சகவாசம், சென்னை கடற்கரைக்குப் பக்கத்தில் ஸ்மக்ளிங் மால் விற்றுக்கொண்டிருக்கிறவர்கள் சகவாசம் உண்டென்றும், அவர்களிடையே தகராறு வந்து அவர்கள் ஆட்களில் ஒருத்தனை மாஃபியா முறையில் கொன்றுவிட்டதாகவும் சொன்னான். பப்பு இதுவரை சும்மா இருந்தவன், ''எல்லாம் பொய். உண்மை என்னன்னு எனக்கு ஒருவனுக்குத்தான் தெரியும்.''

''ஏன், நீதான் கொன்னியா?''

''இல்லை. யார் தெரியுமா?''

''யாரு?''

''மாதவி! மாதவிதான் அவனை மயக்கி மாடிக்கு அழைச்சுக்கிட்டுப் போய்த் தள்ளிட்டா!''

சுஜராஜ் செத்துப் போனதைப்பற்றி தினம் இவ்வாறு கதைகள் விதவிதமாகச் சொல்லப்பட்டு, கொஞ்சம் கொஞ்சமாக ஓய்ந்தன.

பப்புவை மீனம்பாக்கத்தில் அமெரிக்காவுக்குப் போகுமுன் டாட்டா காட்டினபோது ஏர்போர்ட்டுக்கு மின்னு வந்திருந்தாள். நடராஜனைப் பார்த்து, ''சௌக்கியமா?" என்றாள். ''இதான் வந்து எங்காத்து இவர்'' என்று பக்கத்தில் இருந்த இளைஞனை அறிமுகப் படுத்தினாள். அந்தப் பையன் மீசையெல்லாம் பழுதில்லாமல் வைத்துக் கொண்டு சிரித்தான்.

மின்னு கல்யாணம் ஆனதிலிருந்து ஒரு மாதிரி ஒரு வயசு ரெண்டு வயசு முன்னோடினது போலப் பெரிய மனுஷியாக இருந்தாள். மின்னுவின் கணவன் மங்களூருக்கோ எங்கேயோ போகிறானாம் ஆபீஸ் விஷயமாக. அவனுக்கு டாட்டா காட்டிவிட்டு மின்னு, ''ஏன் கல்யாணத்துக்கு வரலை?'' என்றாள்.

''என்னவோ மின்னு மனசு சரியில்லை.'

''ஆத்துக்கு வாயேன்'' என்றாள் அவனை நிமிர்ந்து பார்த்து ''மயிலாப்பூர்ல வசதியா இருக்கு வீடு. இப்பவே வரியா?''

''வேண்டாம் மின்னு.''

''ஏன்?'

''நாம சந்திக்கிறது நல்லதில்லைன்னு தோணறது. தப்பா நினைச்சுப்பா!''

''டோன்ட் பி ஸில்லி. இப்பதான் யாரும் தப்பா நினைச்சுக்க மாட்டா! இவருக்கு ஏகப்பட்ட தங்கை, கீதா, ப்ரேமா, பவித்ரான்னு... இதோ இதான் பவித்ரா.''

''ஹாய்!'' என்று நடராஜனைக் கண்கொட்டாமல் பார்த்த அந்தப் பெண்ணுக்குப் பதினாறு வயதுதான் இருக்கும்!

''நிச்சயம் வரேன்'' என்றான். கூட்டத்தில் மறையும் போது நடராஜனுக்கு வாழ்க்கையின் எதிர்கால சாத்தியங் களில் நம்பிக்கை நிறையவே இருந்தது.

(முற்றும்)

பாரதி பதிப்பகம்